விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 22 செவ்வாய்க்கிழமை (07.07.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 200

# மைத்திரி - ரணில் - சந்திரிகா கூட்டணி குறித்து ஆராய்வு!


(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் கூட்டணி ஒன்றை அமைப்பது குறித்து கவனம் செலுத்தி வருவதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக இவ்வாறு கூட்டணி அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## முதலாவது கட்சி மனுத்தாக்கல்

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதம் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் யாழ்ப்பாணத்தில் போட்டியிடுவதற்காக ஜனசெத பெரமுன என்ற கட்சி நேற்று தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளது.

இத்தேர்தலை முன்னிட்டு நாடு பூராகவும் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருக்

24 ஆம் பக்கம் பார்க்க....

## வட மாகாண வளத்தை அரசு குறைத்துள்ளது - முதலமைச்சர்

(சான்பிரான்சிஸ்கோ)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில வாழும் தமிழர்கள் செழிப்புடன் வாழ்வதற்கான சூழலை உருவாக்க அமெரிக்காவில் வாழும் தமிழர்கள் உதவி புரிய வேண்டும் என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சான்பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற வட அமெரிக்க தமிழ்ச் சங்க பேரவையின் வருடாந்த மாநாட்டில் உரை

24 ஆம் பக்கம் பார்க்க....

## யார் தேர்தலில் போட்டியிட்டாலும் ஐ.தே.கவுக்கு பாதிப்பு இல்லை

### இராஜாங்க அமைச்சர் பண்டார தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மகிந்த ராஜபக்ஷ மட்டுமல்ல யார் தேர்தலில் போட்டியிட்டாலும் கூட ஐ.தே.க. ஆகிய எமக்கு எந்தவித பாதிப்பும் வரப்போவதில்லை என தெரிவித்தார் இராஜாங்க அமைச்சர் ரங்கே பண்டார.

ஐ.தே.க. நல்லூர்தொகுதிகட்சிஅலுவலகத்தை நேற்று திறந்து வைதது ஊடகவியலாளரின் கேள்விக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கடந்த ஜனவரி தேர்தலின் போது மகிந்த பொலிஸ், இராணுவம், சமுர்த்தி பணியாளர்கள், பிரதேச செயலர்கள், அரச அதிபர்கள், அரச சொத்துக்கள் அரச பணம் போன்ற

24 ஆம் பக்கம் பார்க்க....

## பொலிஸார் தேடுதல் கஞ்சா மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் இயங்கும் பிரதேச சட்ட விரோத குற்றச் செயல்களுக்கு எதிரான பொலிஸ் பிரிவினால் யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் இருந்து கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடம் இருந்து ஒரு தொகுதி கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை உதவி பொலிஸ் பரிசோதகர் எஸ்ஸ்ரீகஜன்

24 ஆம் பக்கம் பார்க்க....

## ஆசன ஒதுக்கீடு வெளியானது

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையிலான ஆசன ஒதுக்கீடு தொடர்பிலான தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

இதனடிப்படையில் யாழ்ப்பாணத்தில் 10 இடங்களில் 6 இடங்களில் தமிழரசுக்கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப் 2

24 ஆம் பக்கம் பார்க்க....

## 28 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது


(மன்னார்)

தமிழகத்தின் இராமேஸ்வரம் மீனவர்களால் இலங்கைக்கு கடத்தப்பட்ட கஞ்சா பொதிகளை தலைமன்னார் கடற்படையினர் நேற்று திங்கட்கிழமை மீட்டனர். அத்துடன் அவற்றை வைத்திருந்த நான்கு தமிழகம் மீனவர்களையும் தலைமன்னார் கடலில் வைத்து கைது செய்துள்ளனர்.

நேற்று அதிகாலை போதைப் பொருள் கடத்தப்படவிருப்பதாக கடறபடையின

24 ஆம் பக்கம் பார்க்க....

## சமாதானம் தொடர்ந்திருந்தால் உயிரிழப்புக்கள் நின்றிருக்கும்!



### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

2002 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் நடத்தப்பட்ட சமாதான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்திருந்தால், போரின் மூலம் இழக்கப்பட்ட பல உயிர்களை காப்பாற்றியிருக்க முடியும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்

சந்திரிகா குமாரதுங்கவின் 70 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதமர் உரையாற்றினார்.

போர் நிறுத்த உடன்பாட்டின் கீழ் விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தப்பட்ட போது சந்திரிகா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதனை புரிந்கொள்ளவில்லை.

2003ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும்

02 ஆம் பக்கம் பார்க்க....

## அனைத்துக் கட்சிகளுக்கும் சம உரிமை வழங்க முடியாது

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் சம உரிமை வழங்க முடியாதென தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பதிவு செய்யப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தலில் போட்டியிடாமையும், செயற்படாமையுமே அதற்கு காரணமாகும்.

இதேவேளை தேர்தலின் போது ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுவரொட்டிகள் ஒட்டுதல் சட்ட விரோத செயலாகும், வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்கு இலக்கம் வழங்கிய பின்னர் அவ் இலக்கங்களை விளம்பரப்படுத்துதல் அவசியம்

24 ஆம் பக்கம் பார்க்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

## விஜயதுரை ரேஷ்மி
## 2015.07.07




பிறந்தநாள் காணும்
குட்டித்தேவதையே சிரிப்பும்
கொண்டாட்டமும்
உன்னுடன் கைகோர்க்க
வாழ்த்துகிறோம்.

இன்று பிறந்த தினத்தை
கொண்டாடும் எமதருமைச்
செல்வத்தை பல்கலையும் கற்று
பல்லாண்டு காலம் சீருடனும்
சிறப்புடனும் வாழ வாழ்த்துவோர்

அப்பா - விஜயதுரை
அம்மா- சிந்துஜா
அண்ணா - அஸ்வின்
அப்பப்பா- அருமைத்துரை
அப்பம்மா- தங்கமலர்
அன்ராமார்- ஜீவிகா
ஜீவகி
யாகல்(நோர்வே)
பெரியப்பாமார் - அருந்துரை
கண்ணன் (கனடா)
சித்தா-ராஜீ

பாட்டிமார்- அஸ்வதம்
மகேஸ்வரி
அம்மப்பா - சிவஞானசுந்தரம்
அம்மம்மா- யோகேஸ்வரி
அன்புஅத்தை- ரத்னாசெல்லா
தாத்தாமார்- வெற்றிவேல்
பாஸ்கரன் (நோர்வே)
மாமன்மார் - சிந்துஜன் (பிரான்ஸ்)
சிவரஞ்சன் (பிரான்ஸ்)
நவஜீவன் (பிரான்ஸ்)
ஜீவகரன் (பிரான்ஸ்)

பிரசாந் (பிரான்ஸ்)
பிரதீப் (பிரான்ஸ்)
கிருஷாந் (நோர்வே)
ஆபிரகாந் (நோர்வே)



(C-1494)

சிந்து இல்லம் அல்வாய் வடக்கு, அல்வாய்.

## சமாதானம் தொட...

முரண்பாடுகளுக்கு மத்தியில் தேசிய பிரச்சினை தொடர்பில் செயற்பட முடியும் என்று தாம் நினைத்த போதும் அது தோல்வியடைந்ததாக ரணில் குறிப்பிட்டார்.

அதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தன. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்கள் அந்த முயற்சியை குறுகிய பார்வையுடன் நோக்கினர்.

இதன்காரணமாக 2003ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கம் கலைக்கப்பட்டுநாடாளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டது. இதனால் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையும் இரத்துச் செய்யப்பட்டது.

இதேவேளை கடந்த காலத்தில் பல முரண்பாடுகள் இருநதபோதும் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை தோற்கடிப்பதற்காக சந்திரிகாவுடன் இணைந்து செயற்பட ஐக்கிய தேசியக்கட்சி இணங்கியது.

இதனடிப்படையில் பல்வேறு அமைப்புக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராக பரிந்துரைகப்பட்டார் என்றும் ரணில் சுட்டிக்காட்டினார். (எ-11)


## விற்பனைக்கு

சில்லாலை பண்டத்தரிப்பில்
அல்செசன் குட்டி
(சப்பர்) விற்பனைக்குண்டு

(1052)

தொடர்புகளுக்கு : 077 6258252

யாழ்க்கிளையில்

காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம்
யாழ்க்கிளையில்
கலை வகுப்புக்களுக்கான அனுமதி வழங்கல் - 2015

★ சங்கீதம், பண்ணிசை
★ நடனம், மிருதங்கம்
★ வயலின், யோகாசனமும் தியானமும்



(C-1495)

பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.
ஆர்வமுள்ளவர்கள் கிழமை நாட்களில் மாலை 5.00 - 6.00 மணி வரை
அனுமதிகளை பெற்றுக் கொள்ள முடியும்.

பதிவாளர்,
கிழவன்காடு கலாமன்றம்
யாழ்க்கிளை.

இல 11, கஸ்தூரியார் 1ம் ஒழுங்கை,
(உதயன் பத்திரிகை நிறுவனம் அருகில்)
யாழ்ப்பாணம்.

## சரவணா ரெக்ஸ்
நல்லூர்

வேறெங்கும் கிளைகள் இல்லை

Office wear silk cotton
Saree - 1200/=
(With Blouse)
750 /=




அயன் பண்ண
வேண்டிய தேவை
இல்லை இலகுவாக
அணிந்து செல்லக்
கூடியது.

(C-1496)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்
## ஜேமிஸ் பிரான்சிஸ் சேவியர் (சேவியர்)



மண்ணில் : 1933.04.27 விண்ணில் : 2015.06.07

கடந்த 07.06.2015 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் ஜேமிஸ் பிரான்சிஸ் சேவியர் (சேவியர்) அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி இன்று (07.07.2015) செவ்வாய்க்கிழமை இடம் பெறவுள்ளது. அத்தருணம் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம.

அன்னாரது பிரிவுச் செய்தி கேட்டவுடன் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும் தொலைபேசி ஊடாகவும், மின்னஞ்சல் ஊடாகவும், இன்னும் பல வழிகளிலும் உதவி செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(1056)

5-ம் வட்டாரம்,
இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு.

தகவல் :
குடும்பத்தினர்
0775792672

# மரண அறிவித்தல்

## மார்க்கண்டு காங்கேசு
(ஓய்வுபெற்ற நீர்வழங்கல் இயக்குநர் - மாநகர சபை)



கோகுல வீதி, கோண்டா வில் வடக்கைப் பிறப்பிட மாகவும், வதிவிடமாகவும் கொண்ட மார்க்கண்டு காங்கேசு கடந்த 03.07.2015 அகால மரணமடைந்தார்.

அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மார்க்கண்டு - இராசமணி தம்பதியரின் அன்பு மகனும், அருள்ராஜா, நிசாந்தன், அசோகாந் ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற யோகேஸ்வரன், இராசேந்திரம் மற்றும் பரஞ்சோதி, சந்தானலக்சுமி, நிந்தலக்சுமி, ஜெயராசா, பாக்கியலக்சுமி, தவமணி, தவராசா, ஸ்ரீதேவி, கமலாதேவி ஆகியோரின் சகோதரரும், மிதுரன், துவிசன், சகிர்தா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.07.2015) செவ்வாய்க்கிழமை காலை அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கலைவாணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :- குடும்பத்தினர்

தொடர்பு:-
077 981 6689, 077 333 0341,
077 242 5779

(1026)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை மின்சார சபையின் வடக்கு மாகாண பதில் பொது முகாமையாளர் அலுவலக கட்டட தொகுதி நேற்று காலை திறந்து வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள இந்த கட்டடத்தை மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்கரணவக்க , இராஜாங்க அமைச்சர் பாலிதரங்கே பண்டார , இலங்கை மின்சார சபையின் தலைவர் விஜயபால மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் பளிக்கார ஆகியோர் கலந்து கொண்டு வைபவ ரீதியாக திறந்து வைத்தனர். (படங்கள்:உ.சாளின்)

# வேட்புமனு கிடைக்காத 33 பேரின் விபரங்கள்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் சுதந்திர கட்சியில் வேட்புமனு வழங்காமல் ஜனாதிபதியினால் நிராகரிக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

இவர்களில் முன்னாள் ஜனாதிபதி உட்பட 33 பேர் உள்ளடங்குவதாக தெரியவந்துள்ளது.

அவர்களுக்கு வேட்பு மனு வழங்காமைக்கான காரணமும் இரகசியமாக வெளியாகியுள்ளன.

குறித்த பட்டியல்

01.மகிந்த ராஜபக்ஷ (ஊழல் மோசடி குற்றச்சாட்டு)

02.பசில் ராஜபக்ஷ (திவிநெகும திணைக்களத்தில் நிதி மோசடி மற்றும் தரகுப் பணம் பெற்றுக்கொண்டமை)

03.நாமல் ராஜபக்ஷ (நிலப்படை குற்றங்கள், நிதி குற்றங்கள்)

04. மஹிந்தானந்த அளுத்கமகே (நிதி முறைகேடு, ஊழல் மோசடி)

05. ரோஹித அபேகுணவர்தன (இலஞ்ச ஊழல் மோசடி)

06. துமிந்த சில்வா (போதைப்பொருள் மற்றும் ஊழல் மோசடி)

07. டிலான் பெரேரா (இலஞ்ச ஊழல் மோசடி)

08. எஸ்.எம்.சந்தரசேன (இலஞ்ச ஊழல் மோசடி)

09. ரஞ்சித் சொய்சா (இலஞ்ச ஊழல் மோசடி)

10. மஹுஷ நாணயக்கார (இலஞ்ச ஊழல் மோசடி)

11. லோஹான் ரத்வத்தே

12.உதித்த லொகுபண்டார (இலஞ்ச ஊழல் மோசடி)

13. சந்திம வீரக்கொடி

14. மேர்வின் சில்வா (இலஞ்ச ஊழல் மோசடி)

15. பந்துல குணவர்தன (இலஞ்ச ஊழல் மோசடி, கணனி கொள்வனவில் மோசடி)

16.விமல் வீரவன்ச (இலஞ்ச ஊழல் மோசடி மற்றும் போலி ஆவணங்கள்)

17.சஜின் வாஸ் குணவர்தன (இலஞ்ச ஊழல் மோசடி)

18. சரன குணவர்தன (இலஞ்ச ஊழல் மோசடி)

19. பிரேமலால் ஜயசேகர (இலஞ்ச ஊழல் மோசடி)

20. லக்ஷ்மன் வசந்தர பெரேரா (இலஞ்ச ஊழல் மோசடி)

21. ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ (இலஞ்ச ஊழல் மோசடி)

22. டலஸ் அலகப்பெரும (இலஞ்ச ஊழல் மோசடி)

23. நிஷாந்த முத்துஹெட்டிகம

24. வாசுதேவ நாணயக்கார

25. ஜீ.எல்.பீரிஸ்

26. கெஹலிய ரம்புக்வெல (இலஞ்ச ஊழல் மோசடி)

27. சரத் குமார குணரத்ன (இலஞ்ச ஊழல் மோசடி)

28. பிரசன்ன ரணதுங்க (இலஞ்ச ஊழல் மோசடி)

29. உதய கம்மன்பில (இலஞ்ச ஊழல் மோசடி)

30. விதுர விக்ரமநாயக

31. குமார வெல்கம (இலஞ்ச ஊழல் மோசடி)

32. திலும் அமுனுகம

33.மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோரின் விபரங்கள் வெளியாகியுள்ளன. (இ-7)

# மரண அறிவித்தல்

## அரியகுட்டி வேலாயுதம்

(கற்சிலைமடு ஒட்டுசுட்டான்)



கற்சிலைமடுவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அரியகுட்டி வேலாயுதம் (வவுனியா வடக்கு ப.நோ.கூ.சங்கத்தின் முன்னைநாள் கிளை முகாமையாளரும் ஒட்டுசுட்டான் தான் தோன்றீஸ்வரம் ஆலய முன்னை நாள் களஞ்சிய முகாமையாளர்) 04.07.2015 அன்று காலமானார்.

அன்னாரது ஈமக் கிரியைகள் 08.07.2015 நாளை புதன்கிழமை மாலை 3 மணிக்கு பேராறு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:

கற்சிலைமடு ஒட்டுசுட்டான்.

வே.ராகவன் மகன்.

# ராசி பலன்

07.07.2015

(ஆனி 22, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு

சஷ்டி முன்னிரவு 8.38 மணிவரை

பூரட்டாதி முன்னிரவு 9.21 மணிவரை

இராகுகாலம் 2.58-4.28 மணிவரை

சுபநேரம்-10.28-11.58

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | சூரி செவ் புதன் |
| சந் | பகல் 3.45 இற்கு மீனம்-சந் | | |
| | | | குரு சுக் |
| | | சனி | ராகு |

**மீனம்** திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் மாற்றங்கள் செய்யும் சூழ்நிலை ஏற்படலாம், கோபத்தைக் குறைத்துக்கொள்வது நல்லது, மாலை நேரப்பயணம் மகிழ்ச்சி.

**மேடம்** காலை நேரத்திலே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பொழுதுபோக்கு விடயங்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**இடபம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, உறவினர்களின் வருகையுண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

**மிதுனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்பட்டு கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**கும்பம்** மனதில் இனம் புரியாத கற்பனைகள் தோன்றும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த சஞ்சலங்கள் தீரும், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கடகம்** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மகரம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**சிம்மம்** முக்கியமான காரியங்களை மதியத்திற்கு முன்னர் வெற்றிகரமாக முடித்துக் கொள்வீர்கள், உதவுவதாகச் சொன்னவர் மாலைநேரம் மனம் மாறலாம், போசன சுகமுண்டு.

**தனுசு** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், சகோதர வழியில் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும், சுப செலவுகள் அதிகரிக்கும், நேர்மையான நண்பர்களால் நன்மையுண்டு.

**விருச்சிகம்** பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**துலாம்** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், சுபதகவல்கள் வந்து சேரலாம், தேவையற்ற மனஸ்தாபங்கள் அகலும், செய்தொழில் மேன்மையுண்டு.

**கன்னி** குடும்பத்தில் குதூகலம்தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு, தேகநலனில் முன்னேற்றம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த ஜனநாயக படுகொலை இனி நடக்காது !



இந்த 92 வயதிலும் வாழ்க்கையை விறுவிறுப்பாக வைத்திருக்கிறார் முன்னாள் முதல்வர் கருணாநிதி. அரசுக்கு எதிரான அறிக்கைகள், 'முரசொலி'க்கான கட்டுரைகள், 'ராமானுஜர்' தொடருக்கான கதை வசனம், இடையிடையே வந்து செல்லும் கட்சிக்காரர்களுடனான சந்திப்புகள்- இவ்வளவுக்கு நடுவிலும் வாசிகிறார். "இது இல்லாமல் முடியாது" என்கிறார் சிரித்துக்கொண்டே. மேஜையில் இருக்கும் ஜெயமோகனின் 'அறம்', தேவிபிரசாத் சட்டோபாத்தியாயாவின் 'இந்திய நாத்திகம்' இரு புத்தகங்களும் வாசிப்பில் இருப்பதை உணர்த்துகின்றன. கருணாநிதியின் 80 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில், ஜனநாயகத்துக்கு அவர் அளித்த மிகப் பெறுமதியான பங்களிப்புகளில் ஒன்று நெருக்கடிநிலையின்போது அவர் நடத்திய எதிர் அரசியல். நெருக்கடிநிலையின் 40 ஆண்டுகளுக்குப் பின் இந்தியா தன் கருப்புப் பக்கங்களைத் திரும்பிப் பார்க்கும் தருணத்தில், தன்னுடைய ஞாபக அடுக்குகளிலிருந்து அந்த வரலாற்றின் பக்கங்களைப் புரட்டுகிறார் கருணாநிதி.

**நெருக்கடிநிலை அறிவிப்பு வெளியான காலகட்டம் இப்போது நினைவில் இருககிறதா?**

அதை எப்படி மறக்க முடியும்? 1975 ஜூன் 12 அன்று நான் தஞ்சை மாவட்டம், முத்துப்பேட்டையில் சுற்றுப்பயணத்தில் இருந்தேன். அன்றுதான் அலகாபாத் உயர் நீதிமன்றத் தீர்ப்பு வெளியானது. பிரதமர் இந்திரா ரேபரேலி தொகுதியிலிருந்து மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்று நீதிபதி ஜக்மோகன்லால் சின்ஹா தீர்ப்பளித்தார். செய்தியாளர்கள் என்னிடம் இது தொடர்பாகக் கேட்டார்கள். "இந்தியாவின் மிகப் பெரிய கட்சி காங்கிரஸ். உலகின் மதிக்கத் தக்க மிகப் பெரிய நாடு இந்தியா. மத்திய அரசில் இருப்பவர்கள் முடிவெடுக்கும்போது இதை எண்ணிப் பார்த்து முடிவெடுக்க வேண்டும். ஏனென்றால், இப்போது அவர்கள் எடுக்கும் எந்த முடிவும் இந்தியாவின் எதிர்கால அரசியலில் ஒரு முன்மாதிரியாக இருக்கும்" என்று கூறினேன்.

அலகாபாத் நீதிமன்றத் தீர்ப்பின் அமலாக்கத்தை நிறுத்திவைக்க இந்திரா அரசு உச்ச நீதிமன்றம் சென்றது. ஜ/ன் 23 அன்று அந்த முயற்சி பின்னடைவைச் சந்தித்த பிறகு, ஜூன் 25 அன்று இரவு அரசு நெருக்கடிநிலையைக் கொண்டு வந்தது. இந்திராவே மறுநாள் காலையில் வானொலியில் இதைத் தெரிவித்தார்.

**நெருக்கடிநிலை அறிவிப்புக்குப் பின் உங்கள் உடனடி எதிர்வினை என்ன?**

முன்னதாக, அலகாபாத் நீதிமன்றத் தீர்ப்பு வெளியானதுமே பிரதமர் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் குரல் கொடுத்தன. பிரதமரின் ராஜிநாமாவை வலியுறுத்தி ஒரு பெரும் போராட்டத்துக்குத் திட்டமிடப்பட்டு, எதிர்க்கட்சிகளின் சார்பில் மக்கள் போராட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. மொரார்ஜி தேசாய் தலைமையிலான இந்தக் குழுவின் ஆலோசனைக் கூட்டத்துக்குத் திமுகவும் அழைக்கபபட்டிருந்தது. இத னிடை யே தான் நெருக்கடிநிலை பிரகடனப் படுத்தப்பட்டது. நெருக்கடிநிலை அறிவிப்பு வெளியானதுமே நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டிய பெரும் கடமை எம் முன் வந்திருப்பதை உணர்ந்து கொண்டோம். உடனடியாக எதிர் வினையாற்றினோம். அதாவது ஜ/ன் 27 காலை 11 மணிக்கெல்லாம் கட்சியின் தலைமைச் செயற்குழுவைக் கூட்டி கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டோம். அன்று விடியற்காலை 4 மணிக்கே எழுந்து, நானே என் கைப்பட அந்தக் கணடனத் தீர்மானத்தை எழுதினேன்.

**அந்த நாட்களில் உங்களை மோசமாகப் பாதித்த விஷயம் எது?**

எவ்வளவோ இருக்கின்றன என்றாலும், கருத்துச் சுதந்திரத்தின் மீதான தாக்குதல்கள்தான் என்னை ரொம்பவும் பாதித்தன. 'முரசொலி' மூலமாகத்தான் என்னுடைய கருத்துகள் தினமும் செல்கின்றன என்பதால், அதைக் குறிவைத்தார்கள். பத்திரிகையில் வெளியிடும் செய்திகள், கட்டுரைகள் எதுவானாலும் தணிக்கை அதிகாரிக்கு அனுப்பி அனுமதி பெற வேண்டும். ஒரு பக்கக் கட்டுரையை அச்சுக் கோத்து அனுப்பினால், தணிக்கை என்ற பெயரில் திரும்பி வரும்போது அவற்றில் நாலைந்து வரிகளே மிஞ்சியிருக்கும். கழகத் தோழர்கள் பிடித்துச் செல்லப்படுவார்கள் சிறையில் வதைக்கப்படுவார்கள். எதையும் எழுத முடியாது. அதேசமயத்தில், அரசு ஆதரவு பத்திரிகைகள் மூலம், என் மீதும் கட்சியினர் மீதும் தனிப்பட்ட அவதூறுகள் அவிழ்த்து விடப்பட்டன. எட்டு வயது நிரம்பிடாத கனிமொழிக்கு வங்கியில் எண்பதாயிரம் இருப்பதாக எழுதுவார்கள். ஆதாரங்களோடு மறுத்து 'முரசொலி'யில் எழுதினால் அவற்றையும் வெட்டிவிடுவார்கள். ஒரு கட்டத்தில் கருணாநிதி என்ற பெயரில எதுவுமே எழுத முடியாத சூழல் ஏற்பட்டது. ரொம்பவும் இது காயப்படுத்தியது என்றாலும், நானும் ஓயவில்லை. போராட்டம் என்றால், அதில் இரண்டில் ஒன்று பார்த்துவிடுவதில் எப்போதும் நான் சளைப்பதில்லை. நான் கரிகாலன் ஆனேன். 'கரிகாலன் பதில்கள்' என்ற புதிய பகுதியைத் தொடங்கி எழுத ஆரம்பித்தேன்.

**அப்போதுதான் பத்திரிகையும் கையுமாக வீதியில் இறங்கினீர்கள் அல்லவா, இப்படி இரண்டில் ஒன்று பார்க்கும் பிடிவாதக் குணம் எங்கிருந்து வந்தது?**

அம்மா, அப்பா-அப்புறம் அன்றைக்குத் தொடங்கி என்னை விரட்டிக்கொண்டிருக்கும் சாதியப் பாகுபாடுகள். ஆமாம், சாதியப் பாகுபாடுகள் என் மீது போட்டிருந்த விலங்குகளை உடைக்க வேண்டும் என்றால், அயராத போராட்டம் தான் அதற்கு ஒரே வழி என்பதைத்தான் என்னுடைய வாழ்க்கை எனக்குச் சொல்லிக்கொடுத்தது.

இன்றைக்கும் சாதியப் பாகுபாடுகள் உங்களை விரட்டுகின்றனவா? எப்படிச் சொல்கிறீர்கள்? 45 வயதிலேயே நீங்கள் முதல்வராகிவிட்டீர்கள். கிட்டத்தட்ட கடந்த 50 ஆண்டுகளாக நீங்கள் ஒரு உயர்ந்த இடத்தில் இருக்கிறீர்கள். நீங்கள் உங்களுக்கு மேல் அணுகிக் கொண்டிருப்பவர்களெல்லாம் தேசிய அளவிலான தலைவர்கள். அவர்களிடமெல்லாமும்கூட சாதியரீதியிலான பார்வையை எதிர்கொள்வதாகச் சொல்கிறீர்களா?

(தொடரும்)

**இணையம்**

## அதிசய உலகம்

**பூமிக்கு அருகில் புதிய கிரகம் கண்டுபிடிப்பு: வரலாற்று சாதனை படைத்த சுவிஸ் விஞ்ஞானிகள**

பிரபஞ்சத்தின் அதிசயங்களில் ஒன்றாக தற்போது புதிய கிரகம் ஒன்றை சுவிட்சர்லாந்து நாட்டை சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்து வரலாற்று சாதனை படைத்துள்ளனர். தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான சிலியில் உள்ள Paranal மலைத்தொடரில் ஐரோப்பிய தெற்கு வானியல் ஆய்வு மையத்தை அமைத்துள்ளது.



இந்த வானியல் ஆய்வு மையத்தில் சுவிஸின் சூரிச்சில் உள்ள மத்திய தொழில்நுட்ப நிறுவனத்தை சேர்ந்த விஞ்ஞானிகளும் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். வானியல் மாற்றங்களை மிக நீண்ட மற்றும் நுண்ணிய தொலைநோக்கி கருவி மூலம் ஆராய்ந்து வந்த சுவிஸ் விஞ்ஞானிகள் ஒரு புதிய கிரகத்தை கண்டுபிடித்துள்ளனர்.

பத்து மில்லியன் வருடங்கள் பழமையான இந்த கிரகத்திற்கு, HD 100546 b என பெயர் சூட்டியுள்ளனர்.

சுமார் 335 ஒளி ஆண்டுகள் தொலைவில் இருந்தாலும் கூட, இதனை பூமிக்கு அருகே உள்ள ஒரு கிரகம் என்றே விஞ்ஞானிகள் கருதி வருகின்றனர். இந்த அபார கண்டுபிடிப்பை பற்றி பேசிய சுவிஸ் விஞ்ஞானிகளில் ஒருவரான Sascha Quanz வாயு மற்றும் தூசி மண்டலங்கள் சூழ ஒரு கோள் ஒன்று வட்டப்பாதையில் சுற்றி வருவதாகவே கடந்த 2013 ஆம் ஆண்டு நினைத்திருந்தோம். மேலும், சூரிய வட்டப்பாதையிலிருந்து விலகி வந்த மிகப்பழமையான கோளாக இருக்கும் என்று தான் கருதி இருந்தோம். ஆனால், கடந்த 3 ஆண்டுகளாக நடந்த தொடர் ஆராய்ச்சியில், வட்டப்பாதையில் சுற்றி வருவது ஒரு புதிய கிரகம் தான், என தற்போது தெளிவாகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளனர்.

## சமைப்போம் சுவைப்போம்

### முட்டை கிரேவி



**தேவையானவை**

முட்டை - 4
வெங்காயம் - 2
தக்காளி - 1
இஞ்சி பூண்டு பேஸ்ட் - 1 ஸ்பூன்
நற்சீரக தூள் - 1 ஸ்பூன்
மஞ்சள் தூள் - 1ஸ்பூன்
பச்சை மிளகாய் - 4
தேங்காய் - அரைமூடி
கசாகசா - 1 ஸ்பூன்
பட்டை, பெருஞ் சீரகம் ,எண்ணெய்,உப்பு - தேவையான அளவு

**செய்முறை**

எண்ணெய் காய வைத்து பட்டை, பெருஞ் சீரகம தாளித்து, நறுக்கிய வெங்காயம் தக்காளி ,இஞ்சி பூண்டு பேஸ்ட் போட்டு வதக்கி தண்ணீர் சேர்த்து பச்சை மிளகாய் தேங்காய் , கசாகசா மூன்றும் அரைத்த விழுது சேர்த்து உப்பு, மஞ்சள்தூள் போட்டு கொதிக்க விடவும். இதில் முட்டையை உடைத்து ஊற்றி இருபுறமும் திருப்பி வேகவிடவும். நற்சீரக தூவி இறக்கி பின் பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மைத்திரியுடன் இணைந்து புதிய அரசாங்கத்தை உருவாக்குவேன்

## ரணில் உறுதி

(கொழும்பு)

**ஜனாதிபதி தேர்தல் அன்று ஆரம்பிக்கப்பட்ட புரட்சியை வெற்றியடைய செய்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து எதிர்வரும் 5 வருடத்திற்குள் புதிய அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



சந்திரிகா குமாரதுங்கவின் 70 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வின் போது முன்னாள் பிரதமர் இதனை தெரிவித்தார்.

இதற்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆதரவை பெற்றுக்கொள்வோம் என அவர் கூறியுள்ளார்.

இம்முறை தேர்தலில் நாங்கள் தனித்தனியாகவே போட்டியிடுவோம். எனினும் எங்களது அடிப்படை கொள்கையை பாதுகாத்துக் கொண்டு ஜனாதிபதியுடன் இணைந்து புதிய அரசாங்கத்தை உருவாக்குவோம்.

எங்கள் நாட்டு மக்களின் பிரச்சினையை தீர்க்க வேண்டும். அதற்காக அனைவரும் இணைந்துசெயற்படவேண்டும்.

சந்திரிகா குமாரதுங்க எங்கள் நாட்டின் ஜாதி, மதங்களுக்கு இடையில் இணைந்து செயற்பட்டுக்கொண்டுள்ளார்.

சிங்களம், தமிழ், முஸ்லிம், பேகர் மதங்கள் போன்று அனைத்து மத மக்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றது. இதனை தீர்த்துக்கொள்ளாமல் முன்னோக்கி செல்ல முடியாது.

கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி புரட்சியை எதிர்வரும் 5 வருடங்களுக்குள் அனைவரும் இணைந்து வெற்றி பெற செய்வதே எங்கள் எதிர்பார்ப்பு.

ஜனவரி மாதம் 8 ஆம் திகதி எங்கள் குழுவுக்கு ஒப்படைத்த நாட்டை இனி வரும் 5 வருடங்களில் சிறப்பான ஒரு நாடாக மக்கள் கையில் வழங்குவதே எங்கள் நோக்கம் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்தோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தால் நடத்தப்பெற்ற சைவப் புலவர், இளஞ் சைவப்புலவர் தேர்வில் சித்தி பெற்றவர்களின் பெயர் விபரங்கள்வெளியிடப்பட்டுள்ளன.

**சைவப்புலவர் பட்டம் பெறுவோர்**

திருமதி இந்திராணி பொன்னுத்துரை- கொழும்பு 06, சிவநேசராசா சிவராஜா- கல்லடி, மட்டக்களப்பு, திருமதி நவரட்ணம்மா வெள்ளைச்சாமி-கண்டி, திருமதி கணேசலிங்கம் நாகபூஷணி- கொழும்பு 06, அப்புத்துரை சிவரூபன்- மானிப்பாய், திருமதி மாயழகு சந்திராதேவி- மாத்தளை.

**இளஞ்சைவப்புலவர் பட்டம் பெறுவோர்**

தெய்வநாயகம் தயமுகன்- களுவாஞ்சிக்குடி, செல்வி கனகரத்தினம் கனகதுர்க்கா- ஏழாலை, திருமதி அரியமலர் அருணகிரிநாதன்- மட்டக்களப்பு கிரான், திருமதி வளர்மதி சுமாகரன்- கொழும்பு- 06, செல்வி. சின்னத்தம்பி கிருஷாந்தினி- வவுனியா, திருமதி சிவமோகனசுந்தரி சிவராஜா-மட்டக்களப்பு, செல்வி சௌந்தரராசா சஜீபா- வவுனியா, செல்வி கணேசமூர்த்தி மோகன ஜெனனி-இணுவில், செல்விமாரி முத்து குகவாணி -வவுனியா, கணபதிப்பிள்ளை வெற்றிவேல்-மூதூர், செல்வி முருகையா அம்பிகா- ஹப் புத்தளை, சிவபாதம் மணிவண்ணன்- இணுவில், சுவேந்திரராசா காசிராஜா- சண்டிலிப்பாய், சோம நாதன் மயில்வாகனம்-துறை நீலாவணை, செல்வி கோமகள் குமார சாமி- சுழிபுரம், செல்வி திரவியராஜா சுபி- திருகோணமலை. (இ-3)

## தேர்தலில் போட்டியிடப் போவதில்லை

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என பிரதி அமைச்சர் சனத் ஜயசூரிய தெரிவித்துள்ளார். எந்தவொரு கட்சியின் சார்பிலும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவ தில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாத்தறை மாவட்ட தொகுதி அமைப்பாளர் பதவியையும் சனத் ஜயசூரிய இராஜினாமா செய்துள்ளார். மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்திலும் பிரதி அமைச்சராக கடமையாற்றிய சனத்ஜயசூரிய, புதிய அரசாங்கத்தின் ஆட்சிக் காலததிலும் பிரதி அமைச்சராக கடமையாற்றுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மட்டு.விபத்தில் ஆசிரியர் மரணம்

மட்டக்களப்பு- கொழும்பு பிரதான வீதியில் கும்புறுமூலை பிரதேசத்தில் ஆட்டோ விபத்துக்குள்ளானதில் இரண்டு பிள்ளைகளின் தாயான ஆசிரியை ஒருவர் மரணமடைந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

வாழைச்சேனை செம்மண்ஓடை கபீப் கங்காணியார் வீதியைச் சேர்ந்த முஸ்தபா லெப்பை இஸ்ஹாக் (வயது - 47) அவரது மனைவி முஹம்மது இஸ்மாயில் ஹைறியா (வயது - 45) மற்றும் அவர்களது ஐந்து வயது பெண் பிள்ளையும் இரண்டு வயது ஆண் பிள்ளையும் மட்டக்களப்பு க்குச் சென்று திரும்பி வரும் வழியில், கும்புறு மூலை பிரதேசத்தில்மாடு வீதியைக் கடக்க முற்பட்ட வேளை ஆட்டோ வீதியை விட்டு விலகி தடம்புரண்டு விபத்து க்குள்ளாகியுள்ளது.

காயமடைந்த பிள்ளைகள் இருவரும் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், கணவனும் மனைவியும் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இந்நிலையில் முஹம்மது இஸ்மாயில்ஹைறியா (வயது - 45) என்ற ஆசிரியை மரணமடைந்துள்ளதுடன் அவரது கணவரான முஸ்தபா லெப்பை இஸ்ஹாக் (வயது - 47) மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

மரணமடைந்த ஆசிரியை முஹம்மது இஸ்மாயில் ஹைறியா செம்மண்ஓடை அல் ஹம்றா வித்தியாலயத் திலும் அவரது கணவரான முஸதபா லெப்பை இஸ்ஹாக் ஓட்டமாவடி பாத்திமா பாலிகாவிலும் ஆசிரியர்களாக கடமையாற்றுபவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. (இ-7)


USAID
"Civil Society Initiatives to Promote the Rule of Law in Sri Lanka"

**உரிய தருணத்தில் இலவச சட்ட ஆலோசனை, சட்ட சேவை மற்றும் வழிகாட்டல்கள்**

வாரத்தில் 5 நாட்கள் (திங்கள் - வெள்ளி ) காலை 9.00 - மாலை 5.00 மணிவரை

எம்மிடம் கீழ்வரும் விடயம் சம்பந்தமாக நீங்கள் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்

*சிறுவர் துஷ்பிரயோகம்*
*பாலியல் வன்முறைகள்*
*குடும்ப வன்முறைகள்*
*ஏனைய நெருக்கீட்டு நிலைமைகள்*

இலவச சட்ட சேவை பிரிவு
மகளிர் அபிவிருத்தி நிலையம்,
இல.07, இரட்ணம் லேன்,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.:- 021 222 4398, 021 321 5144

மேலதிக இலவச சட்ட சேவை பிரிவுகள் - வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களில்.



**இன்னல்கள் நீக்கிடுவான் இணுவைக் கந்தன்**
**இன்று 17 ஆம் திருவிழா**



**தஞ்சமடைந்தோம் நொச்சியம்பதியானே**

சுந்தர சோலைநிறை நொச்சியம்பதியில்
வந்து எமை ஆட்கொள்ளும் வடிவேல்
கந்தன் புகழ் பாடக் கவலைகள் தீரும்!
சொந்தமென யாவும் கூடுமே-நாளும்
அருணகிரியின் அழகுத் தமிழ்ப் பாடலுக்கு
கருணை புரிந்தா கந்தா குகா- நக்கீரனின்
திருமுருகாற்றுப்படை செவ்வியேற்று
அருகில் வந்தாய் அருள் மழை பொழிந்தாய்
சிவசேய் திருவாம் தெழுங்குமரா முருகா
தவ வாழ்வு தருவாய் தஞ்சமடைந்தோம்

சைவப்புலவர்:
ச.முகுந்தன், இணுவில்
17 ஆம் திருவிழா உபயகாரர்

(சி-1389)



**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 40 செவ் 4 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L/ கனடா PR<br>தொ.இ: B/4029 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 72 செவ் 1 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BA/ அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/1621 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 61 செவ் 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSC/ அரச தொழில்<br>தொ.இ: B/917 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 52 செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1625 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 32 சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: civil engineering/ அரச தொழில்<br>தொ.இ: B/918 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 12 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1638 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 11 செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/919 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 68<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1639 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கூசி வலையுடன் கைதான மீனவர்களுக்கு தண்டப்பணம்

புங்குடுதீவு குறிகட்டுவான் கடற்பகுதியில் தங்கூசி வலையை பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 8 மீனவர்களை தலா 5ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் ஆர்.சபேசன் நேற்றைய தினம் உத்தரவிட்டார்.

புங்குடுதீவு குறிகட்டுவான் கடற்பரப்பில் நேற்று முன்தினம் மாலை தங்கூசி வலையை பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 8 பேரை அப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படையினர் கைது செய்து யாழ் . கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடத்தில் கையளித்தனர். அவர்களிடம் இருந்து 2 தொகுதி தங்கூசி வலைகளும் கைப்பற்றப்பட்டன. நேற்றைய தினம் 8 மீனவர்களும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களுக்கு தண்டப்பணம் விதித்தும் அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சான்றுப்பொருட்களை அழிப்பதற்கும் நீதவான் உத்தரவிட்டுள்ளதாக யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவி பணிப்பாளர் பா.ரமேஸ்கண்ணா மேலும் தெரிவித்தார். (இ-9)

# இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

**பருத்தித்துறை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டதாக கடந்த ஜூன் மாதம் 21 ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 26 இந்திய மீன வர்களையும் எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டுள்ளார். கடந்த ஜூன் மாதம் 21ஆம் திகதி பருத்தித்துறை கடற் பரப்பில் 3 படகுகளில் வந்து 26 இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர்.**

அப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் இவர்களை கைது செய்ததுடன் அவர்களுடைய படகுகளையும் கைப்பற்றி காங்கேசன்துறை துறைமுகத்தில் வைத்து யாழ் கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்தனர்.

அன்றைய தினம் மாலை பருத்தித்துறை நீதவான் முன்னிலை யில் ஆஜர்படுத்தப்பட்டு ஜூலை மாதம் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

இந்நிலையில் நேற்றையதினம் இவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது இவர்களை விடுதலை செய்வது தொடர்பாக சட்டமாஅதிபர் திணைக்களத்திடம் இருந்து எந்தவித ஆலோசனையும் கிடைக்கவில்லை என்பதால் 26 மீனவர்களையும் எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளதாக யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப்பணிப்பாளர் பா.ரமேஸ் கண்ணா தெரிவித்தார். (இ-9)

## 1008 சங்காபிஷேகமும் திருக்கல்யாணமும்

இருபாலை கிழக்கு அருள்மிகு கந்தசாமி கோவில் அலங்கார திருவிழா கடந்த 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை புதன்கிழமை பகல் 1008 சங்காபிஷேகமும் மாலை முருகப் பெருமானுக்கு திருக்கல்யாணம் நடைபெற்று சுவாமி வீதியுலா வலம் வரும் நிகழ்வு இடம்பெறும். (இ-3)




# கலாசாரப்பேரவையின் ஆற்றுகைப் போட்டிகள்

யாழ்.மாவட்ட கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதற்காகவும் பாரம்பரிய கலைகளை வளர்க்கும் பொருட்டும் யாழ்.மாவட்ட கலை கலாசாரப் பேரவை ஆற்றுகைப்போட்டிகளான நாட்டார்பாடல், கிராமிய நடனம், கரகம், கூத்து (தென்மோடி) நாடகம் போன்ற போட்டிகளை கலைமன்றங்கள் குழுக்கள் ஊடாக நடத்த இருக்கின்றது. இப்போட்டிகளுக்கான சுற்றுநிருபத்தையும் விண்ணப்பப்படிவத்தையும் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 31.07.2015 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்டச்செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு யாழ்.அரசஅதிபர்நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். மேலும் போட்டிகளில் கலந்து கொள்வோரின் எண்ணிக்கை (வாத்தியக் கலைஞர் உட்பட) 10 தொடக்கம் 12 வரை வரையறுக்கப்பட்டுள்ளதுடன் நாட்டார் பாடலுக்கு 7-9 நிமிடங்களும் கிராமிய நடனம், கரகம் 12-15 நிமிடங்களும் கூத்துக்கு 25-30 நிமிடங்களும் நாடகத்திற்கு 5 நிமிட மேடை ஒழுங்கமைப்பு உட்பட 30 நிமிடங்களும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் போட்டியாளர்களாக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் பங்குபற்றமுடியும், போட்டியில் பங்குபற்றும் அனைவரும் (நெறியாளர், வாத்தியக் கலைஞர்கள் உட்பட) மூன்று (3) வருடங்களுக்கு மேலான தொடர்ச்சியான வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம அலுவலரின் சான்றிதழை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும், வயது வரையறை இல்லை, ஒலிப்பேழை (CD) உபயோகித்தலாகாது, குறித்த நிகழ்ச்சிக்கேற்ப பொருத்தமான வாத்தியங்கள் உபயோகிக்க வேண்டும், குறித்த நிகழ்ச்சிக்கேற்ப ஆடை ஒப்பனை அமைந்திருத்தல் வேண்டும், ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியான விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும், விண்ணப்பங்கள் அதிகளவில் சமர்ப்பிக்கப்படும் பிரதேச செயலர் பிரிவுகளில் குறித்த போட்டி நடைபெறும், நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# காணாமற்போன நகைகள் வீட்டு முற்றத்திலிருந்து மீட்பு

(கரணவாய்)

பருத்தித்தறை கொட்டடிப் பகுதியிலுள்ள வீடு ஒன்றிலிருந்து காணாமற் போன சுமார் 35 பவுண் தங்க நகைகள் நேற்றுக் காலை வீட்டு முற்றத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆம் திகதி இரவு இந்த நகைகள் காணாமற் போயிருந்தமை தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் அன்றைய தினம் பொலிஸார் மோப்ப நாயுடன் அங்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். பொலிஸார் மோப்ப நாயை பயன்படுத்தி விசாரணைகளை மேற்கொண்ட மறுநாளான நேற்றையதினம் காலை வீட்டு முற்றத்தில் வீசப்பட்ட நிலையில் காணாமற்போன நகைகள் அனைத்தும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவற்றின் பெறுமதி சுமார் 14 இலட்சம் ரூபா என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-60)

# அதிபரின் இடமாற்றத்தை எதிர்த்து மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

(கரணவாய்)

வல்வெட்டித்துறை சிதம்பரா கல்லூரி அதிபரை இடமாற்றம் செய்ய வேண்டாமெனக் கோரி அக்கல்லூரி மாணவர்கள் நேற்று அமைதியான போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 7.30 மணி முதல் 8.30 மணிவரை மாணவர்கள் பாடசாலைக்கு முன்பாகத் திரண்டு இந்தப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப்போராட்டத்தில் மாணவர்களுடன் சில பெற்றோரும் இணைந்து கொண்டனர். சம்பவ இடத்துக்குச் சென்ற வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் மாணவர்களுடன் கலந்துரையாடி மீண்டும் மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளைத் தொடர வழி ஏற்படுத்தியுள்ளார். (இ-3-60)

# மாட்டுவண்டி சவாரிப்போட்டி இயற்றாலை மைதானத்தில்

தமிழ்மக்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி நேற்று முன்தினம் வரணி இயற்றாலை அந்தணத்திடல் மைதானத்தில் நடைபெற்றது.

அமரர் வல்லிபுரம் சின்னத்தம்பி ஞாபகார்த்தமாக நடைபெற்ற இந்த மாட்டுவண்டி சவாரியில் 54 சோடிமாட்டு வண்டில்கள் கலந்து கொண்டன.

இதில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் பிரதமவிருந்தினராகக்கலந்துகொண்டார்.

போட்டியாளர்கள் 4 பிரிவாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு பிரிவிலும் வெற்றி பெற்ற மாட்டு வண்டில் உரிமையாளர் விபரம் வருமாறு, முதல் நான்கு இடங்களைப் பெற்றவர்களின் விபரம்,

ஏ பிரிவு

நியூட்டன்- இளவாலை, தாசன் குட்டி- நவக்கிரி, ஈசன்- சங்குவேலி, தரன்- புன்னாலைக்கட்டுவன்

பி பிரிவு

பிலேந்திரன்- சிறுப்பிட்டி, நியூட்டன்- இளவாலை, சானுஜன்- குடம்பியன், சுஜனிகா- வட்டக்கச்சி

சி பிரிவு

அபிசனா- வற்றாப்பளை, கணபதிப்பிள்ளை- அளவெட்டி, கபினயா- வட்டக்கச்சி, மஞ்சுதன்- அச்சுவேலி

டி பிரிவு

சயுந்ததி- வட்டக்கச்சி, தனுசன்- அச்சுவேலி, குட்டி-புத்தூர், தேவராணி- அளவெட்டி


இவர்களுக்கான பரிசில்களை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், பிரதேச சபைத் தவிசாளர், கிராம சேவையாளர் மாட்டுவண்டி சவாரிச் சங்கத்தின் செயலாளர், பொருளாளர் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். (இ-3-283)

# யோகாக் கல்வியுடன் செயன்முறைப் பயிற்சி

யாழ். உளவளத்துணை நிறுவனமான சாந்திகமும் யோக கேந்திர வளாகமும் இணைந்து யோகாக் கல்வியுடன் கூடிய செயல்முறைப் பயிற்சி நெறியை ஆரம்பிக்கவுள்ளன.

தற்போதைய காலத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு யோகாக் கல்வியில் உயர்கற்கை நெறிகளை பயிற்றுவிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் இப்பயிற்சி நெறிக்கு இம்மாத நடுப்பகுதியில் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

எனவே யோகாக் கல்வியில் உயர் கற்கை நெறிகளைப் பயில விரும்புவோர் 021 222 3338 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் நெல்லியடியில் அமைக்கப்பட்ட புதிய சந்தைக் கட்டடத்தொகுதி நேற்று முன்தினம் மு.ப.11.30மணியளவில் திறந்து வைக்கப்பட்டது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நாடாவை வெட்டி சந்தைக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் வடமாகாண சபை அவைத்தலைவர், சி.வி.கே.சிவஞானம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.ஸ்ரீதரன், எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன், வடமாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா, மாகாண சபை உறுப்பினர்களான எஸ்.சுகிர்தன், எஸ்.சிவயோகன், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறி, பிரதேசசபை பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப்பலர் இதில் கலந்து கொண்டனர். (படங்கள் - கரணவாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆட்சிக்காலத்தில் மக்களின் பணத்தைக் கொள்ளையடிக்கவில்லை!

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவியில் இருந்த காலத்தில் அவர் பொதுமக்களின் பணத்தை கொள்ளையடிக்கவில்லை என்று ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

சந்திரிகா குமாரதுங் கவின் 70 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வின் போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நிகழ்வில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பங்கேற்றிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் வேட்புமனு வழங்கப்பட்டதன் பின்னர் இடம்பெற்ற முதலாவது பொது நிகழ்வு இதுவாகும்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு வேட்புமனு வழங்கப்பட்டமைக்கு எதிராக சந்திரிகா கடும் விமர்சனத்தை வெளியிட்டார் என்ற செய்திக்கு மத்தியிலேயே இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது மேலும் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா பதவியில் இருந்தபோது கட்சிக்குள் உள்ளக ஜனநாயகம் இருந்தது.

ஊழல்கள் இடம்பெறவில்லை. பொதுமக்களின் நிதிகளை அவர் கொள்ளையடிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தேர்தலில் போட்டியிடும் 4 கட்சிகளின் பெயர், சின்னங்களில் திடீரென மாற்றம்

பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக நான்கு கட்சிகள் தமது பெயர் மற்றும் சின்னங்களில் மாற்றங்களைச் செய்திருப்பதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. இதற்கமைய அகில இலங்கை தமிழர் மகாசபை தமது தோடம்பழ சின்னத்தை கப்பல் சின்னமாக மாற்றியுள்ளது. ஐக்கிய மக்கள் கட்சி மீன் சின்னத்தை கையடக்க தொலைபேசி சின்னமாக மாற்றியுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சி, நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி என தனது கட்சியின் பெயரை மாற்றியுள்ளது. அத்துடன் கட்சியின் சங்கு சின்னமும் 'வைரம்' மாக மாற்றப்பட்டுள்ளது.

'ஸ்ரீலங்கா தேசிய முன்னணி'யானது எமது ஸ்ரீலங்கா சுதந்திர முன்னணியாக பெயர் மாற்றம் பெற்றிருப்பதுடன் கிரிக்கெட் மட்டையாகவிருந்த அதன் சின்னம் மலர்மொட்டாக மாற்றம் பெற்றுள்ளது.

தேர்தல் தினம் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து கட்சி பெயர் மற்றும் சின்னங்களை மாற்றம் செய்வதற்காக தேர்தல்கள் ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் கடந்த வெள்ளிக்கிழமையுடன் முடிவுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஐ.தே.கவுடன் இணையேன்; மகிந்தவும் களமிறங்குவார்

## குணவர்த்தன நம்பிக்கை



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சாதாரண வேட்பாளராகவே தேர்தலில் போட்டியிடவுள்ளார். இதனால் எமக்கு எந்த பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தீர்மானங்களின் பிரகாரம் நான் செயற்படவுள்ளேன். எவ்வாறாயினும் நான் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையப் போவதில்லை என காணி அபிவிருத்தி அமைச்சர் எம்.கே.டி.எஸ்குணவர்த்தன தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் வேட்புமனு வழங்கியமையினால் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடவுள்ளதாக கிடைத்த தகவல் தொடர்பில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டி யிடுவதற்கு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அனுமதி வழங்கியிருந்த போதிலும், அவர் ஒரு சாதாரண வேட்பாளராகவே களமிறங்கவுள்ளார். ஆகையால் ஜனவரி 8 ஆம் திகதி ஆட்சி மாற்றத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்படாது.

இந்நிலையில் இந்த விடயத்தில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன எடுத்த தீர்மானத்திற்கு அடிபணிகிறேன். எக்காரணம் ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு எதிராக செயற்பட போவதில்லை.

இதன்பிரகாரம் பாராளுமன்ற தேர்தலில் நான் எக்காரணம் கொண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# காமினி செனரத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

பெருமளவு தரகுப்பணம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையதிகாரி காமினி செனரத் மீது சிஐடியால் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் ஏற்கனவே பொலிஸார் கொழும்பு கோட்டே நீதிமன்றில் பி அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர்.

இந்த பி அறிக்கையில், காமினி செனரத் கொண்டிருந்த வங்கிக் கணக்குகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் முக மாக வங்கிக் கணக்குகளை பரீட்சிக்க அனுமதிக்க வேண்டும் என்று பொலிஸார் கோரியிருந்தனர்.

இந்த கோரிக்கைக்கு இணங்க நீதிமன்றம் தமது ஒப்புதலை வழங் கியுள்ளது.

இதனையடுத்தே பொலிஸார் சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளனர். (இ-7)


# 'பலி அவன்' இறுவெட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஜே.றொகானின் முயற்சியில் உருவான கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய **பலி அவன்** இறுவெட்டு வெளியீடு எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். கலைத்தூது மண்டபத்தில் நடைபெறவுள்ளது என ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# புதிய அரசை உருவாக்கி நிவாரணம் வழங்குவேன்

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

புதிய அரசாங்கம் ஒன்றை விரைவாக உருவாக்கி மைத்திரி அரசினால் தடைப்பட்டுள்ள அரசாங்க ஊழியர்களுக்கான நிவாரணத்தை மீண்டும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தங்கல்லையில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தின் ஊடாக அரசாங்க ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனவும், தன் அரசாங்கத்தின் கீழ் வழங்கப்பட்ட நிவாரணங்கள் மாத்திரமே மீதப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.


எனவே எதிர்வரும் நாட்களில் உருவாக்கப்படவுள்ள புதிய அரசாங்கத்தின் ஊடாக அரசாங்க ஊழியர்களுக்கு மீண்டும் நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் மகிந்த ராஜபக்ஷவை ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக நியமிக்கவில்லை என்றாலும், உருவாகவுள்ள புதிய அரசாங்கத்தின் கீழ் பிரதமராக செயற்படுவதற்கான வாய்ப்பு அவருக்கு காணப்படுவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டீ.பீ.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

வாரியபொல பிரதேசத்தில இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# கடந்த அரசாங்கம் விட்ட பிழைகளை நல்லாட்சி அரசாங்கமும் விடுகின்றது

## பவ்ரல் குற்றச்சாட்டு



கடந்த அரசாங்கம் விட்ட பிழைகளை நல்லாட்சி அரசாங்கமும் விடுகின்றது என பவ்ரல் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது. தேர்தல் காலத்தில் கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் செய்த அதே பிழைகளை, நல்லாட்சி மைத்திரிபால அரசாங்கமும் செய்கின்றது என பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் புதிய நியமனங்கள் மற்றும் இடமாற்றங்களை இந்த அரசாங்கமும் செய்துள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

மருந்துப் பொருள் அதிகார சபை, தொழில் பயிற்சி அதிகார சபை, இளைஞர் சேவை மன்றம், உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள் உள்ளிட்ட பல துறைகளில் நியமனங்கள் வழங்கப்படுவதுடன், நியமனங்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இது தொடர்பில் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவிடம் நாம் முறைப்பாடு செய்யத் தீர்மானித்துள்ளோம் என ரோஹண ஹெட்டியாராச்சி நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து நெருக்கடியில் வன்னேரிக்குளம் மாணவர்கள்

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகா வித்தியாலய மாணவர்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர் கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மேற்கின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள இக்கிராமம்1953 ஆம்ஆண்டு உருவாக்கப்பட்டது.

இக்கிராமத்தில் 1954 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்துக்கு போக்குவரத்து பெரும் நெருக்கடியாகவுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து வன்னேரிக்குளம் வைத்தியசாலை வழியாக முழுங்காவில் வரை பேருந்துகள் பயணிக்கின்றன. வன்னேரிக்குளம் வைத்தியசாலையிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்திலுள்ள பாடசாலைக்கு பேருந்துகள் பயணிப்பதில்லை.

இதன் காரணமாக மாணவர்களும் ஆசிரியர்களும் நடந்தே செல்லவேண்டிய நிலை காணப்படுகின்றது. இந்நிலையில் வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம் வரை பேருந்து வழித் தடத்தை வழங்குமாறு வன்னேரிக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கமும் பெற்றோர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7)






Rebuilding Foundation, Rebuilding Srilanka நிறுவனத்தினால் முல்லைத்தீவு பாரதி வித்தியாலயத்தில் இலவச ஆங்கில வகுப்புக்கள் நடத்தப்பட்டு பாடநெறியை நிறைவு செய்த 56 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் விசுவமடு பாரதி வித்தியாலயத்தில் நடைபெற்றது.

# இலவச மின்னிணைப்பை இன்னும் வழங்கவில்லை

(கிளிநொச்சி)


**கிளிநொச்சி பிரமந்தனாறு பகுதியிலுள்ள 41 ஆம் வாய்க்காலில் வசிக்கின்ற 11 குடும்பங்கள்,வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட இலவச மின்னிணைப்பு தமக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பாக பல தடவைகள் மின்சார சபையை அணுகிய போதிலும் இதுவரை சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக தமக்குத் தெரியவில்லை என்றும் அவர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

இவ்வாறு நேற்றைய தினமும் மின்சாரசபை அதிகாரிகளைச் சந்தித்தபோது எதிர் வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மின்சாரசபைப் பொறியியலாளரைச் சந்திப்பதற்கு வருகை தருமாறு தாம் கேட்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-3-254)




# கற்களால் இடையூறு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் முக்கொம்பன் பிரதான வீதி புனரமைப்புக்கென வீதியோரமாக கற்கள் பறிக்கப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் இக்கற்கள் பறிக்கப்பட்டு வீதியோரமாகக் கிடப்பதனால் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே துரித கதியில் வேலைகளை ஆரம்பித்து போக்குவரத்தில் உள்ள இடையூறுகளை போக்க ஆவன செய்யுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-3-86)

# நெல்லை உத்தரவாத விலையில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையின் அறுவடை ஆரம்பமாகியுள்ளது.

இந்நிலையில் நெல்லை உத்தரவாத விலையில் விற்பனை செய்வதற்கு முன் கூட்டியே நடவடிக்கைஎடுக்க வேண்டியது அவசியமானது என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் நெல்லை குறைந்த விலையில் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால் விவசாயிகளின் நன்மைகருதி உரிய அதிகாரிகளும் திணைக்களங்களும் நெல்லுக்கான உத்தரவாத விலையை நிர்ணயம் செய்து அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட உத்தரவாத விலைக்கு குறையாமல் முன் னேற்பாடுகளைச் செய்து விவசாயிகளின் நலனுக்கு உதவ வேண்டுமென வேண் டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.(இ-3-254)

# கண்டாவளை பிரதேச செயலகத்தினை உரிய இடத்தில் அமைக்க நடவடிக்கை

## அரச அதிபர் அருமைநாயகம் தகவல்

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்தை உரிய இடத்தில் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகம் நிரந்தர கட்டடம் இன்றியே இயங்கி வருகின்றது. தற்போது திட்டமிடல் பகுதி புளியம்பொக்கணையிலும் ஏனைய அலகுகள் வெலிகண்டல் பகுதியிலும் இயங்கி வருகின்றது. வெவ்வேறு இடங்களில் அலகுகள் இயங்குவதால் பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

2010ஆம் ஆண்டு கண்டாவளை பிரதேச செயலகத்துக்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கான நிதி கிடைக்கப்பெற்றும் அமைவிடத்தில் ஏற்பட்ட இழுபறி நிலை காரணமாக நிதி திரும்பிச் சென்றது.

தற்போது மீண்டும் நிதி கிடைக்கப் பெற்று அமைவிடத்துக்கான பிரச்சினை தீர்க்கப்பட்டு உரிய இடத்தில் கட்டடம் அமைப்பதற்கான கேள்வி அறிவித்தல் கோரப்பட்டுள்ளது என தெரிவித்தார். (இ-7)




முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் வேதநாயகத்திற்கு முல்லைத்தீவு மாவட்ட இனிய வாழ்வு இல்லத்தில் நேற்று முன்தினம் பிரிவுபசார விழா இடம்பெற்றது. இதில் மாவட்ட பிரதம கணக்காளர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர், வட்டு இந்து வாலிபர் சங்க அங்கத்தவர்கள், பல நிறுவனங்களின் அங்கத்தவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் போன்றோர் விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

# இழுபறி நிலையில் அமைக்கப்படும் வீதி

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் கிராமத்தில் ஐந்தாண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட சீமெந்திலான வீதிக்கு கிரவல் அணை அமைக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

1983ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஆனைவிழுந்தான் கிராமத்தில் 500 பேர் வரை யான குடும்பங்கள் தற்போது வாழ்ந்து வருகின்றன.

அக்கராயன் வன்னேரிக்குளம் வீதியில் ஆனைவிழுந்தான் சந்தியிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு மீள்குடியேற்ற நாளிலிருந்து சீமெந்திலான வீதி அமைக்கப்பட்டு வந்தது.

ஒப்பந்தகாரர்கள் நீண்ட காலமாக இவ்வீதியினை அமைப்பதில் இழுபறியினை மேற்கொண்டு ஒருவாறு வீதியமைக்கப்பட்ட நிலையில் தற்போது கிரவல் மண் அணைககான கிரவல், வீதியில் குவிக்கப்பட்டு வருகின்றன. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் குண்டுத் தாக்குதலில் 49பேர் உடல் சிதறி உயிரிழப்பு

**மத்திய நைஜீரியாவில் மசூதி, கிறிஸ்தவ தேவாலயம், உணவகம் ஆகிய பல்வேறு இடங்களில் நேற்று நடைபெற்ற குண்டுத்தாக்குதலில் 49 பேர் உடல் சிதறி பலியாகியுள்ளனர்.**


நைஜீரியாவின் மத்திய நகரமான ஜோஸ் பகுதியில் மக்கள் நடமாட்டம் மிகுந்த யன்தயா மசூதி மற்றும் உணவகம் ஆகிய இரு இடங்களில் சக்தி வாய்ந்த குண்டுகள் வெடித்தன. இதில் அங்கிருந்த 44 பேர் உடல் சிதறி இறந்தனர். 67 பேர் படுகாயமடைந்து அங்குள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து அந்நாட்டின் தேசிய அவசரநிலை மேலாண்மை நிறுவன தலைவர் கூறியதாவது, தாக்குதல் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் இதுகுறித்து எங்களிடம் சாட்சியம் அளிக்கலாம். அவர்களின் பெயர்கள் இரகசியம் காக்கப்படும் என்று தெரிவித்தார்.

இதனிடையே நைஜீரியாவின் வடகிழக்கு பகுதியான பொடிஸ் என்ற இடத்தில் உள்ள கிறிஸ்தவ தேவாலயமும் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. தேவாலயத்தின் மீது போஹோஹராம் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப்படை தாக்குதலில் பாதிரியார், ஒரு பெண், இரண்டு குழந்தைகள் உட்பட 5 பேர் உயிரிழந்துள்ளனர். (இ-7)

## அணுத்திட்டப் பேச்சுக்களில் உண்மையான முன்னேற்றம்

### ஜோன்கெரி தகவல்



ஈரானின் அணுத்திட்டம் தொடர்பிலான பேச்சுவார்த்தைகளில் உண்மையான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், ஆனால் உடன்பாடு இன்னும் நிச்சயம் ஆகவில்லை என்றும் அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜோன்கெரி தெரிவித்துள்ளார்.

விரைவில் உடன்பாட்டை எட்டுவதற்கான இறுதிக்கட்ட முயற்சியாக உலகின் ஆறு ஆதிக்க சக்தி நாடுகள் ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றன.

வியன்னாவில் பேச்சுவார்த்தை மண்டபத்துக்கு வெளியே, கருத்து தெரிவித்த ஜோன்கெரி, உடன்பாடு இன்னும் இறுதிக் கட்டத்தை நெருங்கவில்லை.

ஆனால் பேச்சுவார்த்தைகள், தீர்க்கப்பட வேண்டிய பல பிரச்சினைகளுக்கு நடுவே தொடர்ந்தும் முன்னெடுக்கப்படலாம் என்று தெரிவித்தார்.

ஈரான் நெகிழ்வுப் போக்கின்றி பிடிவாதமாக இருந்தால் அமெரிக்கா பேச்சுக்களிலிருந்து வெளியேறிவிட விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## மிகவும் கோலாகலமாக நடைபெற்றது குட்டி இளவரசியின் ஞானஸ்தானவிழா





பிரித்தானியாவில் இளவரசி சார்லொட் எலிசபெத் டயானாவிற்கு ஞானஸ்தானம் வழங்கும் நிகழ்ச்சி கோலாகலமாக நடைபெற்றது.

பிரித்தானிய இளவரசர் வில்லியம் கேட், மிடில்டன் தம்பதியினருக்கு கடந்த மே மாதம் 2ஆம் திகதி பெண் குழந்தை பிறந்தது. அந்த குட்டி இளவரசிக்கு சார்லோட் எலிசபெத் டயானா என்று பெயர் வைத்தனர்.

இந்நிலையில் சார்லோட்டுக்கு ஞானஸ்தானம் வழங்கும் நிகழ்ச்சி சாண்டிரிங்கமில் உள்ள செயிண்ட் மேரி மக்டலின் தேவாலயத்தில் நடைபெற்றது.

முன்னதாக இளவரசர் வில்லியம் தனது மனைவி கேட் மற்றும் மகன் இளவரசர் ஜார்ஜ், மகள் இளவரசி சார்லோட் ஆகியோருடன் தேவாலயத்துக்கு வந்தார். அங்கு கூடியிருந்த ஏராளமான மக்கள் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

முப்பது வருடங்களுக்கு முன்னர் புதிதாக பிறந்த தனது சகோதரர் ஹரியை பார்ப்பதற்காக இளவரசர் வில்லியம் அணிந்து வந்த உடையை போலவே குட்டி இளவரசர் ஜார்ஜ் அணிந்து வந்தது அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. பின்னர் அவர்கள் தேவாலயத்தின் உள்ளே சென்றனர். அங்கு குட்டி இளவரசிக்கு ஞானஸ்தானம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பிரித்தானிய மகாராணி உட்பட அரச குடும்பத்தினர் அனைவரும் கலந்துகொண்டனர். பயிற்சிக்காக ஆபிரிக்கா சென்றுள்ளதால் இளவரசர் ஹரி கலந்துகொள்ளவில்லை.

மேலும் இந்த நிகழ்ச்சியை பார்க்க தேவாலயத்தின் முன் 3 ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட மக்கள் திரண்டிருந்ததாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## மெதுவாக பணி செய்யும் போராட்டம் ஆரம்பம்

ஆயிரம் ரூபாய் சம்பளத்தை வலியுறுத்தி தோட்ட தொழிலாளர்கள் ஒன்றிணைந்து மெதுவாக பணி செய்யும் போராட்டத்தை நேற்று திங்கட்கிழமை முதல் முன்னெடுத்துள்ளனர்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான கூட்டு ஒப்பந்த பேச்சுவார்த்தையின் நான்காம்கட்ட பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்ததால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொழிலாளர்களை ஒன்றுதிரட்டி மெதுவாக பணிசெய்யும் போராட்டத்தை நேற்று திங்கட்கிழமை முதல் முன்னெடுப்பதாக கடந்த வாரம் அறிவித்திருந்தது.

இந்நிலையிலே இப்போராட்டம் நேற்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதற்கமைவாக, கோம்பர, கலாபெக்க, அலகொல, ஆக்கல, கல்பீல, கோம்பர, மடுல்கெல, சென்ஜோன்ஸ் மற்றும் வெள்ளிமலை போன்ற தோட்டங்களில் தொழில் புரியும் தோட்ட தொழிலாளர்கள் மெதுவாக வேலை செய்யும் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

பொதுவாக கொழுந்து பறிக்குமொருவர் ஒரு நாளைக்கு 18 கிலோகிராம் தேயிலை கொழுந்து பறிக்க வேண்டும் என்பதே நிபந்தனையாகும்.

ஆனால், மெதுவாக பணி செய்யும் போராட்டத்தின் அடிப்படையில், ஒரு நாளைக்கு 5 அல்லது 6 கிலோகிராம் தேயிலை கொழுந்து மாத்திரமே பறிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## முன்னாள் போராளிகள் போட்டியிடுவது உரிய பலனைத் தராது - சந்திரகாந்தன்



விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட எண்ணியுள்ளது தமிழ் கட்சிகளுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவரான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

அதிலும் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் போராட்டம் முடிவடைந்த கட்டத்தில் முன்னாள் போராளிகள் அரசியலுக்கு வந்திருந்தால் அது தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்றும், இப்போது காலம் கடந்து பிரவேசிப்பது தற்போதைய சூழ்நிலையில் கடும் போக்குடைய பேரினவாத சக்திகளுக்கு சாதகமாகவே அமைந்துவிடலாம் என்றும் அவர் தெரிவித்தார்.


பிள்ளையான் என்று அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் 10 வருடங்களுக்கு முன்னதாக விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து விலகி ஜனநாயக அரசியலில் இணைந்து கொண்டவர்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரான இவர் கிழக்கு மாகாணத்தின் முதலாவது முதலமைச்சராகவும் இருந்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் நாடாமன்றத் தேர்தலில் தனது கட்சியின நிலைப்பாடு குறித்து மாறுபடும் அரசியல் சூழலுக்கு ஏற்ற வகையில் முடிவு செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.


மைத்திரி-மகிந்த மீண்டும் இணைந்திருப்பது என்பது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிக்கு சாதகமாக அமையும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (இ-7)

## நீதியரசருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



தன்னுடைய வீட்டில் பணிப்பெண்ணாக கடமையாற்றிய பெண்ணின் மீது தாக்குதலை மேற்கொண்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள உயர்நீதிமன்ற நீதியரசர் சரத் அப்ரூவை கைது செய்யுமாறு வலியுறுத்தி உள்நாட்டு பெண்கள் தொழிலாளர் சங்கத்தை சேர்ந்தோர் நேற்றுமுன்தினம் புதுக்கடை நீதிமன்ற கட்டடத்துக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

1184

# அடுப்பு நிறைய தங்கம்!

வடக்கு ஆப்கானிஸ்தானில் கானாபாத் என்ற கிராமத்தில் நூர் முகமது என்ற ஏழை இருந்தான். அவன் கடவுள்மீது மிகவும் பற்றுக் கொண்டவன். பகல் முழுவதும் வயலில் பாடுபட்டு உழைப்பான். கிடைக்கும் சொற்ப தொகையைக் கொண்டுபோய் மனைவியிடம் கொடுப்பான். தன் வறுமையை நினைத்துத் துயர் கொள்வான்.

ஒருநாள் அவன், கருணையுடைய கடவுளே, வாழ்நாள் முழுதும் உன்னை வணங்கி வரும் எனக்கு நல்ல வழி காட்டக்கூடாதா?



இதோ, என் அடுப்பில் பாதி நாள் பூனை தூங்குகிறது. இந்த அடுப்பிலிருந்து தங்கக் காசுகள் கிடைக்கும்படி செய்ய மாட்டாயா? என்று மனம் உருகிப் பிரார்த்தனை செய்தான்.

பிரார்த்தனை முடிந்து, நூர் முகமது மற்ற வேலைகளைப் பார்க்கச் சென்றான். மீண்டும் பிரார்த்தனைக்கான நேரம் வந்த போது... அவன் தனது அடுப்பில் இருந்து தங்கக் காசுகள் கிடைக்க வேண்டும் என்று மீண்டும் வேண்டிக்கொண்டான்.

ஒருநாள் நூர் முகமது வயலில் வேலை செய்துகொண்டு இருந்தான். முட்செடிகளை வெட்டி அகற்றும்போது, முள்ளில் சிக்கி, அவன் சட்டை கிழிந்துவிட்டது. அவன் மிகவும் வருத்தப்பட்டான். ஆயினும் அந்த இடத்தில் தொடர்ந்து வெட்டிக்கொண்டே இருந்தான். அப்போது மண்வெட்டி "ணங்" என எதன் மீதோ மோதும் ஓசை கேட்டது. கவனித்துப் பார்த்த போது நிலத்துக்குள் பழைய செப்புக் குடம் ஒன்று இருந்தது. குடத்துக்குச் சேதம் ஏற்படாமல் அதை மெதுவாக வெளியே எடுத்தான் நூர் முகமது. திறந்து பார்த்தால் குடத்தின் கழுத்து வரை தங்க நாணயங்கள் தகதகவென மின்னின.

ஏழையான நூர் முகமதுக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆனால், அவனது மகிழ்ச்சி சட்டென்று துக்கமாக மாறியது. அவன் கடவுளிடம் மன்றாடினான்... கடவுளே! என் வீட்டு அடுப்பில் தங்க நாணயங்கள் கிடைக்க வேண்டும் என்று தானே பிரார்த்தனை செய்தேன். இந்த வயலில் கிடைத்த தங்கக் காசுகளை நீங்களே திரும்ப எடுத்துக்கொள்ளுங்கள் என்று வேண்டிக்கொண்டான்.

பிறகு குடத்தை அங்கேயே புதைத்துவிட்டு வீட்டிற்குச் சென் றான். வயலில் நடந்ததை மனைவி யிடம் சொன்னான். கையில் கிடைத்த செல்வத்தை விட்டுவிட்டு வந்த கணவன் மீது மனைவிக்குப் பயங்கரக் கோபம். அவள் முணுமுணுத்தபடியே சாப்பாடு பரிமாறினாள். நூர்முகமது எதுவும் பேசாமல் சாப்பிட்டுவிட்டுத் தூங்கிப்போனான்.

புதையலைப் பற்றியே நினைத்துக் கொண்டு இருந்த மனைவிக்குத் தூக்கம் வரவில்லை. அடுத்த வீட்டில் இருந்த ஜன் முகமதுவையும் அவன் மனைவியையும் எழுப்பினாள். தன் கணவனுக்குக் கிடைத்த புதையலைப் பற்றிச் சொன்னாள்.



தனக்கு உதவினால் புதையலின் பாதியை ஜன் முகமதுக்குக் கொடுப்பதாக அவள் வாக்குக் கொடுத்தாள். பேராசைக்கார ஜன் முகமது, உடனே வயலுக்குப் புறப்பட்டான். புதையல் இருக்கும் இடத்தையும் கஷ்டப்பட்டுக் கண்டுபிடித்துவிட்டான். குடம் அங்கேயே தான் இருந்தது. ஜன் முகமது பேராவலுடன் குடத்தை எடுத்துத் திறந்தான். அடுத்த நொடி அஞ்சி நடுங்கிவிட்டான். குடம் நிறைய விஷப் பாம்புகள் நெளிந்து கொண்டு இருந்தன. உடனடியாகக் குடத்தை மூடிவிட்டான். பாம்புகளில் ஏதாவது ஒன்று அவனைக் கொத்தி இருந்தால், அவன் உடனடியாக இறந்து இருப்பான்.

இது நூர் முகமதின் மனைவி செய்த சதி வேலைதான். என்னையும் என் குடும்பத்தையும் அழித்துவிட்டு, என் சொத்துக்களைக் கைப்பற்றும் நோக்கமாக இருக்கும் என்று தவறாக யூகித்தான். நூர் முகமதின் மனைவியைப் பழி வாங்க முடிபு செய்தான்.

பிறகு ஜன் முகமது குடத்தைச் சுமந்துகொண்டு நூர் முகமதுவின் வீட்டை நெருங்கினான். ஏமாற்றுக்காரி உள்ளே தூங்கிக் கொண்டிருக்கிறாள். நம் வேலையை முடிக்க வேண்டியதுதான் என்று நினைத்தவாறு வீட்டுக் கூரைமீது ஏறினான். சமையல் அறையின் புகை போக்கிக் குழாயை நெருங்கி, உள்ளே குடத்தைப்போட்டான்.

அழிந்து போகட்டும்! பாம்புகள் கடித்து எல்லோரும் தொலைந்து போகட்டும் என்று சபித்தவாறு திருப்தியுடன் கீழே இறங்கினான் ஜன் முகமது. ஒன்றும் அறியாதவனைப் போலத் தன் வீட்டுக்குச் சென்றான். வழக்கம்போல அதிகாலையில் எழுந்தான் நூர் முகமது. குளித்து முடித்துவிட்டுப் பிரார்த்தனை செய்துவிட்டுத் தன் வீட்டு அடுப்பைப் பார்த்தவனுக்கு ஆனந்தமும் ஆச்சரியமும் காத்திருந்தது. அடுப்பு நிறையத் தங்க நாணயங்கள்!

கடைசியில் கடவுள் கருணை காட்டிவிட்டார் என்று உற்சாகத்துடன் சொன்ன நூர் முகமது, தன் மனைவியை அழைத்து... தங்க நாணயங்களைக் காட்டினான்.

இதைப் பார்! இதை எல்லாம் நாம் எடுத்துக்கொள்ளலாம். என் அடுப்பில் செல்வம் தந்தால்தான் நான் எடுத்துக்கொள்வேன் என்று கடவுளிடம் வேண்டி இருந்தேன். என் பிரார்த்தனை பலித்தது. கடவுளுக்கு நன்றி! என்றான்.

அதன்பிறகு வெகுகாலம், நூர் முகமதுவும்அவன் குடும்பத்தினரும் வளமாக வாழ்ந்தார்கள்.

## 07.2015 07 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1456 - ஜோன் ஆஃப் ஆர்க் குற்றமற்றவள் என அவள தூக்கிலிடப்பட்டு 25 ஆண்டுகளின் பின்னர் தீர்ப்பளிக்கப்பட்டது.
- 1543 - பிரான்ஸ் லக்சம்பேர்க்கை முற்றுகையிட்டது.
- 1799 - பஞ்சாப் மன்னன் ரஞ்சித் சிங்கின் படையினர் லாகூரை அடுத்துள்ள பகுதிகளைப் பிடித்தனர்.
- 1807 - பிரான்சின் நெப்போலியனுக்கும் ரஷ்யாவுக்கும இடையில் அமைதி உடன்பாடு ரஷ்யாவின் டில்சிட் என்ற இடத்தில் எட்டப்பட்டது.
- 1865 - ஆபிரகாம் லிங்கன் கொலையில் குற்றவாளிகளான நான்கு பேர் தூக்கிலிடப்பட்டனர்.
- 1896 - இந்தியாவில் முதற் தடவையாக பம்பாயில் திரைப்படம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1898 - ஹவாய் தீவை ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கும் முடிவில் ஜனாதிபதி வில்லியம் மக்கின்லி கைச்சாத்திட்டார்.
- 1917 - ரஷ்யப் புரட்சி: ரஷ்யாவின் இடைக்கால அரசின பிரதமர் இளவரசர் கியோர்கி லுவோவ் பதவி யைத் துறந்தார். அலெக்சாண்டர் கெரென்ஸ்கி பிரதமரானார்.
- 1937 - பசிபிக் போர்: ஜப்பானியப் படைகள் சீனாவின் பெய்ஜிங் நகரை அடைந்தனர்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் தலையீட்டைத் தடுப்பதற்காக அமெரிக்கப் படைகள் ஐஸ்லாந்தில் தரையிறங்கினர்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: பெய்ரூட் நகரம் பிரிததானியரால் கைப்பற்றப்பட்டது.
- 1953 - பொலிவியா ஊடாக பெரு, நிக்கராகுவா போன்ற நாடுகளுக்கான தனது பயணத்தை சேகுவேரா ஆரம்பித்தார்.
- 1959 - வெள்ளிக் கோள் ரெகூலஸ் என்ற விண்மீனை மறைத்தது. இந்நிகழ்வு வெள்ளியின் விட்டம் மற்றும் அதன் வளிமண்டலம் போன்றவற்றை அளக்க உதவியது.
- 1967 - பயாபிராவில் உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.
- 1969 - கனடாவில் பிரெஞ்சு மொழியும் ஆங்கிலத்துடன இணைந்து அதிகாரபூர்வ மொழியாக அங்கீகரிக்கப்பட்டது.
- 1978 - சொலமன் தீவுகள் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 2007 - புதிய ஏழு உலக அதிசயங்கள் பட்டியல் வெளியிடப்பட்டது. இந்தியாவின் தாஜ்மகால் புதிய 7 உலக அதிசயங்களில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1947 - ஞானேந்திரா, நேபாளத்தின் கடைசி மன்னர்
- 1981 - மகேந்திர சிங் தோனி, இந்தியத் துடுப்பாளர்

### இறப்புகள்

- 1930 - ஆர்தர் கொனன் டொயில், துப்பறியும் புனை கதை எழுத்தாளர் (பி. 1859)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 232

## பொறாமையிலிருந்து விடுதலை!

...இதுபோன்ற வாழ்க்கை முறையில், பின்னடைவுகள்கூட, எவ்வாறு இன்னும் அறிவுக் கூர்மையுடன் செயலாற்ற முடியும் என்பதைக் கற்றுக் கொடுப்பதாக அமையும். இம்முறையில் நீங்கள் உங்கள் சொந்த அறிவுக் கூர்மையுடன் செயலாற்றுவதால், அது உங்களுக்கு அனுபவபூர்வமான புரிந்துகொள்ளுதல் ஆகிறது.

நீங்கள் வெறுமனே இன்னொருவருடைய தீர்வைப் பின்பற்றும் பொழுது, உங்களுக்குள் எதுவும் நிகழ்வதில்லை; நீங்கள் வெறுமனே உங்கள் வெளி விளிம்பிலிருந்து செயற்படுகிறீர்கள். உங்களுக்குள் எதுவும் நிகழாத போது, உங்களால் வளர முடியாது; அதை நினைவில் கொள்ளுங்கள். நான், நீங்கள் வளர முடியாது என்று சொல்லும் பொழுது, உள்ளே வளர்வதில்லை என்று சொல்கிறேன். உலகாயதமான நன்மைகளைப் பெறலாம்; ஆனால் நீங்கள் உள்ளே உயிரற்று இருப்பீர்கள்.

ஒரு விசயத்தை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்... நீங்கள் உள்ளே இருந்து வளரும் பொழுது மட்டுமே, உண்மையில் வளர்கிறீர்கள் என்று அர்த்தம். வெளியுலக ஓட்டப் பந்தயங்களில் அபயகரமாகச் சிக்கிக் கொண்டு விடாதீர்கள். அவற்றை வெறும் விளையாட்டாகவே பாருங்கள்; நன்றாக விளையாடுங்கள். உயிர் வாழ்தலுக்கு பொருள் சார்ந்த பயன்களும் தேவை தான். ஆனால் இவையெல்லாம் வெளி விளிம்பிலேயே இருக்க வேண்டும். உங்கள் உள் மையமானது நிலையாக வளர வேண்டும். இதுவே உங்களுடைய வெளி விளையாட்டுக்கு வழிகாட்டியாக இருக்கும். உங்களுடைய சொந்த அறிவுக்



கூர்மையை உபயோகப்படுத்தக் கற்றுக் கொண்டு விட்டீர்களானால், இன்னொருவருடைய முன்னேற்றத்தையோ அல்லது செயல்களையோ பார்த்கொண்டிருப்பது எவ்வளவு பொருத்தமற்றது என்பதைக் காண்பீர்கள். உங்களுடைய அறிவு வளர வளர, ஒவ்வொருவரும் ஓட வேண்டியது தங்களுடைய சொந்த ஓட்டப் பந்தயத்தில் தானே தவிர ஒருவருக்கொருவர் எதிராக அல்ல என்பதைப் புரிந்துகொள்வீர்கள்!

உண்மையான பந்தயம் உங்களுடைய எல்லையற்ற அறிவைக் கண்டு பிடிப்பதை நோக்கித்தான். இதில் ஒப்பிடு வதற்கு எங்கே இடமிருக்கிறது?

வாழ்க்கை என்பதே, முழுவதும் உங்களுடைய எல்லையற்ற அறிவைக் கண்டு பிடிக் கும் செயல்முறையைப் பற்றியதுதான். அதனால்தான் நான், **"வாழ்க்கை என்பது ஒரு பாதை; அது ஒரு இலக்கல்ல."** என்று எப்பொழுதும் சொல்லுவது வழக்கம். உங்களுடைய அறிவு வளர வளர, நீங்கள் மேலும் மேலும் மகிழ்ச்சியடைவீர்கள்; வாழ்க்கை விளையாட முடியும் அதனால் ஒப்பிடுதலை நிறுத்தி, உங்களுடைய உண்மையான வளர்ச்சிக்கு மூலத்தைக் கண்டுபிடிக்க ஆரம்பியுங்கள்.

விஷுத்தி சக்கரமே, உயர்ந்த படைப்பாற்றலின் இருப்பிடம். இந்தச் சக்கரத்தின் சக்தி திறக்கப்படும் பொழுது, உங்களுக்கு மிகப்பெரும் படைப்பாற்றல் கிடைக்கப் பெறுவதை காண்பீர்கள்.

உங்களுடைய இருத்தலின் தன்மையை நீங்கள் மாற்றும் பொழுது இயற்கையாகவே உங்களுடைய செயலின் தன்மையும் மாறுகிறது. நீங்கள் செய்வது எதுவாயினும் மிகத் திறமை யுடனும் மிகப் படைப்பாற்றலுடனும் செய்கிறீர்கள். அதன் விளைவாக உங்களுடைய பெறுதலின் தன்மையும் மாறுகிறது.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

---



# கருவாச்சி காவியம்

வைரமுத்து–180

...அவள அறியாம கண்ணோரமா உருண்டு தெரண்டு ஒடஞ்சு ஒழுகுது கண்ணீரு.

"சடையத்தேவரு பாவம் நல்லவரோ கெட்டவரோ, எனக்கு புருசனா வந்தவனப் பெத்துக் கொடுத்த பெருசில்ரலயா? எழவுக்கு போக முடியாத பொழப்பாகிப் போச்சே எம் பொழப்பு."

கெழவன் பண்ணுன கெடுதி மலமாதிரி இருக்கு மனசுக்குள்ள. ஆனா ஒரு கொட்டுக் கண்ணீரு இருக்கே... மலையக் கூட இருந்த இடம் தெரியாம இழுத்தெறிஞ் சுட்டுப் போயிருதே.

என்னியவிட்டு எல்லாம் போயிருச்சு. அப்பன் போயிருச்சு; ஆத்தா போயிருச்சு; புருசனும் பிள்ளையும் இருந்தும் இல்லேன்னு போயிருச்சு; வீடு வாச போயிருச்சு. இந்த உசுரு மட்டும் போகாம ஏன் ஒட்டிக் கிட்டிருக்கு? என் பெறவிக்குன்னு ஈசன் எழுதிவச்ச வேல இன்னும் முடியல போலருக்கு. அது முடியாது போலருக்கு எம் பொழப்பும்.

இந்த சாவுங்கிற கழுதை எங்கிட்டிருந்து வரும்? எப்பவரும்? சாவு வந்தா மூச்சுப் போயிருமா? இல்ல மூச்சுப் போன சாவு வந்திருமா? சும்மா சோதிச்சுப் பாப்பமா? செத்தவடம் தம் கட்டி நிறுத்திப்பாத்தா. சாவு வரல:



மூச்சுத் தான் வந்துச்சு: ஓகோ! பொழைக்கிறது லேசு; சாகுறது தான் கடுசோ? சிரிச்சுக்கிட்டா: சிரிச்சுக் கிட்டே ஒறங்கிட்டா.

நல்ல நடுச்சாமம்

ஊரு ஒடுங்கிடுச்சு. அரை வயித்துத் தீனியோட ஆடுமாடும் அடங்கிருச்சு. ஒழுங்கா என்னிய [illegible] வேப்பமரம் சொல்[illegible]

அதுல கூடு கட்டியிருந்த ஊர்க் குருவியும் கத்தி ஓஞ்சுபோச்சு. கடைசியா ஒரு கொலப்புக் கொலைச்சுட்டு இதுக்கு மேல நம்ம கச்சேரி கேக்க நாதியில்லேன்னு நாயும் தூங்கிப் போச்சு. நெஞ்சுல கட்டுன கோழையும் தொண்டைக் குழியில சிக்குன உசுரும் வெளியேற முடியாம இருமிக்கிட்டே கெடந்த சீக்காளிகளும் இன்னைக்கு 'இதுபோதும்'ன்னு இருமல நிறுத்திக்கிட்டாக.

அப்ப...

கருவாச்சிக்க மட்டும் கேக்குது ஒரு சத்தம். குடுசுக்கு வெளியே படலோரமா கல்லுமேல காசு விழுந்த [illegible] கேக்குது சத்தம். "[illegible] பணியாரம் சுட்டுக்குடு... யாத்தே! பணியாரம் சுட்டுக் குடு..."

பழகுன சத்தம்... பாசமான சத்தம்... நெஞ்காங்குலையப் புடிச்சு இறுக்கிப் புழியிற சத்தம்.

பசக்குன்னு எந்திரிச்சு உக்காந்தா கருவாச்சி. அத்த கம்பளியத் தூக்கியெறிஞ்சா. படலத்தள்ளி விசுக்குன்னு வெளியவந்தா; சுத்தியும் முத்தியும் பாத்தா. இருட்டைத் தவிர யாரையுங்காணோம்; கொண்ணவாயன் மட்டும்தான் வாசல்ல படுத்துக்கெடக்கான் சாக்கில கட்டிவச்ச சொரக்கா மாதிரி.

"எலேய் கொண்ணவாயா எந்திர்ரா. ஒந் தம்பி அழகுசிங்கம் கூப்பிட்டான்டா; எங்கிட்டிருக்கான் பார்ரா."

அலறியடிச்சு எந்திரிச்சு புத்தி யில ஒண்ணும் புடிபடாம வேட்டிய விட்டுட்டுச் சாக்கக் கட்டிக்கிட்டு அங்கிட்டும் இங்கிட்டமா ஒறங்கிக்கிட்டே ஓடுறான் கெண்ணவாயன்.

"கா... கா... காணமே ஆத்தா... இ...இ...இல்லையே"

"எ்லேய்... கண்ணத் தொறந்து பார்ரா. எண்ணிய வந்து கூப்பிட்டாண்டா எம்பிள்ள. பணியாரம் கேட்டான்டா பாவிப்பய. நல்லாப் பார்ரா." குடிசைய மூணு சுத்து சுத்தி வந்தான் கொண்ணவாயன். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் நலத்திற்கு பகை புகையிலை

உலகளாவிய புகையிலை பாவனையானது அதிகரித்துச் செல்கின்றது. இலங்கையிலும் அதன் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. அதிலும் கல்வி, பண்பாடு, கலை கலாசாரம், விருந தோம்பல் என்பவற்றில் புகழ் பெற்ற யாழ்ப்பாணத்தில் இன்று மது, புகைபிடித்தல் ,போதைப் பொருள் பாவனையானது அதிகரித்துச் செல்வதாகவும் குறிப்பாக பதின்ம வயதினர் இதில் அதிகம் ஆர்வம் காட்டுவதாகவும் அண்மைய ஆய்வுகள் கூறுகின்றன. புதின்ம வயதினரின் இத்துர்பழக்கமானது எதிர்காலத்தில் கல்வியில் பின்னடைவையும் சமூக முன்னேற்றத்தில் பின்னடைவையும் கலாசார பண்பாட்டில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தப் போவது உறுதி. எனவே இவற்றைக் கட்டுப்படுத்த மதகுருமார், சமூக ஆர்வலர்கள், நலன் விரும்பிகள், பொலிஸார் மற்றும் சட்டத் துறையினர் அக்கறை செலுத்த வேண்டும். அத்துடன் பெற்றோரும், ஆசிரியரும் அதிகளவு கவனம் செலுத்தி தமது பிள்ளைகளை அவதானிக்க வேண்டும் மட்டுமன்றி இவற்றால் ஏற்படக் கூடிய சுகாதாரப் பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகளை மாணவர்கள், இளைஞர், யுவதிகளுக்கு விளக்கி அவர்கள் மத்தியில் விழிப புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

புகையிலைப் பாவனையானது இரண்டு வகையாக பிரிக்கப்படுகின்றது.

புகைத்தல், புகைககாத பாவனை. புகைத்தலை எடுத்துக்கொண்டால், சுருட்டு, சிகரெட், பீடி, ஈ-சிகரெட் போன்றனவும் புகைக்காத பாவனையில் புகையிலையை வாய்க்குள் ஊறவிடல், மூக்குப் பொடி, வெற்றிலையுடன் சப்புதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

புகையிலை பாவிக்கும்போது (அது எந்த வகையிலாக இருந்தாலும்) புகையிலையிலுள்ள நிகோடின் எனும் இரசாயன பதார்த்தம் குருதியுடன் சேர்ந்து உடலிலுள்ள ஓமோன்களைத் தூண்டுகின்றது. இதன் விளைவாக ஒரு தற்காலிக உடலியல் மாற்றத்தை உணர்கின்றனர். தொடர்ச்சியான பாவனையின்போது இவ் இரசாயனப் பொருளுக்கு உடலானது அடிமையாகிறது. அதாவது, இவர்களால் புகையிலையை பாவிக்காது இருக்கமுடியாது. புகையிலை பாவிக்க வேண்டும் என்ற அவா, ஆவல் ஏற்படுவதால் தவிக்கின்றனர்.

### ஏன் புகையிலைப் பாவனையை நிறுத்த முடியாது?

ஏன் புகையிலை பாவனையை நிறுத்த முடியாது என்றால் நிக்கோடின் எனும் இரசாயனப் பதார்த்தத்திற்கு பழக்கப்பட்டு அடிமையாக உடல் இருப்பதால் புகைக்க வேண்டும் என்ற ஆவல், அடங்காத ஆசை, பதகழிப்பு, பதற்றம், பரபரப்பு, அமைதியின்மை, பயம், நடுக்கம் என்பன காணப்படுவதுடன் புகையிலைப்பாவனையை விடும் போது அல்லது நிறுத்தும் போது உடல் நிக்கோடினை வேண்டி நிற்கும் நிலை தோன்றும். அதற்கான அறி குறியாக தலையிடி, மன அழுத்தம், மனதை ஒரு நிலைப்படுத்தி வேலைகளைச் செய்ய முடியாதிருக்கும் நிலை, பசி அதிகரித்தல் மற்றும் பரபரப்புத் தன்மை போன்ற நிலை தோன்றும். இதனால் இவர்கள் புகையிலையை நாடுவர். நிறுத்துவதற்கு வைத்திய ஆலோசனைப்படி வாழ்க்கை முறையை மாற்றியமைப்பதன் மூலமும் இவர்களின் புலனை வேறு ஆரோக்கியமான செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதன் மூலமும் நிறுத்திக்கொள்ளலாம்.

தமது பணவிருத்திக்காக புகையிலை பயிரிடும் உற்பத்தியாளர்கள் சமூக நலனைக் கருத்திற் கொண்டு மாற்றுப்பயிர்களை பயிரிடுவதன் மூலம் எமது சமூகத்தில் புகையிலை இலகுவாக நுகரக்கூடிய நிலையைத் தவிர்த்துக் கொள்ளலாம். அத்துடன் கல்வி,விவசாயம் சுகாதாரம், சமூகசேவைத் திணைக்களம் மற்றும் சட்டத்துறையினர் இணைந்த ஓர் கண்காணிப்புக் குழுவை உருவாக்குவதூடாக சட்ட விரோத உற்பத்தியாளர்களை இனங்காணலாம். புகையிலை உற்பத்திக்கெதிரான சட்டத்தை இயற்றுவதன் மூலம் சட்டவிரோதமான உற்பத்தியாளருக்கெதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் புகையிலை உற்பத்தியை தடுக்கலாம்.

**புகைக்காமல் புகையிலை பாவிக்கும் நிலை**





### புகையிலைப் பாவனையை நிறுத்துவதால் ஏற்படும் அனுகூலங்கள்

புகையிலைப் பாவனையை நிறுத்துவதால் ஏற்படும் அனுகூலங்களைப் பார்ப்போமானால் உடனடி விளைவாக மணமற்ற சுவாசம், உணவுகளின் சுவையில் முன்னேற்றம், நகங்களில மஞ்சள் நிறம் மறையத் தொடங்கும், உதடுகளின் நிறம் சாதாரண நிலையை அடையும். நாளாந்தச் செயற்பாடுகள் மகிழ்ச்சியானதாக இருக்கும், பற்கள் வெண்மையாக மாறும், நுரையீரலின் செயற்பாடுகள் மேம்படும், புற்று நோய் ஏற்படுவதற்கான ஆபத்து நிலை குறையும், பாக்கவாதம் மற்றும் இதய நோய்களுக்கான ஆபத்துக்குறையும், நுரையீரல் சம்பந்தமான நோய்கள் குறையும், பெண்களில் கருத்தரிக்கும் ஆற்றல் அதிகரிக்கும், பணச்செலவைக் குறைக்கலாம் மற்றும் நிறை குறைந்த குழந்தை பெறும் ஆபத்து குறையும்.

புகைக்கும் போது இவை பாவனையாளரை மட்டுமன்றி அவரை சுற்றியுள்ளோரையும் பாதிக்கின்றது. இலங்கையில் புகையிலை பாவனையால் தினமும் 20 பேர் இறக்கின்றனர். 600 பேர் வரை சிகிச்சைக்காக வைத்தியசாலை விடுதிகளில் அனுமதிக்கப்படுவதாக இலங்கை சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். அது மட்டுமன்றி தொற்றா நோய்களான அதி குருதியமுக்கம், பக்க வாதம், நுரையீரல் புற்று நோய், வாய் புற்றுநோய், தொண்டை மற்றும் சுவாசக் குழாய் புற்றுநோய், இதய மற்றும் குருதிக் குழாய் தொடர்பான நோய்கள், சலரோகம், பார்வைக் கோளாறு, மலட்டுத் தன்மை, பாலியல் பலவீனம், பெண்கள் கருத்தரிப்பதில் சிக்கல். சுவை, மணம் போன்ற உணர்வுகள் பலவீனமடைதல், கரப்பகால சிக்கல்கள் மற்றும் பிறந்த குழந்தைகளில் சிக்கல்கள், சுவாசத் தொற்றுக்கள், பல் முரசு தொடர்பான நோய்கள், வயோதிபத் தோற்றம், அத்துடன் புகை பிடிக்காத வாழ்க்கைத் துணை மற்றும் பிள்ளைகளும் மேற் கூறிய நோய்களுக்கு ஆளாகும் நிலை காணப்படுகின்றது. புகையிலை பாவனையானது மாபெரும் சுகாதாரப் பிரச்சினையாக உலகெங்கும் காணப்படுகின்றது. இலங்கையிலும் இது கணிசமான செல்வாக்கு செலுத்துகின்றது.

சிகரெட் பிரியர்களே உங்களுக்குத் தெரியுமா சிகரெட்டில் 4000 வகையான இரசாயனப்பதார்த் தங்கள் காணப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை புற்று நோயை உருவாக்கக்கூடியவை.

இவ்வாறு கெடுதல் மிக்க சிகரெட்டை சிறுவர் முதல் முதியோர் வரை புகைபிடிக்கின்றனர். காரணம் என்னவென வினவினால் பதில் இல்லை. சினிமாவில் அவற்றால் ஏற்படக்கூடிய விளைவுகளை தெளிவாக காட்டவே எதிர்மறையான வகிபாகங்கள் காட்சிப்படுத் தப்படுகின்றன. ஆனால் எம்மவரோ அவற்றைப்பற்றிக் கொண்டு துன்புறுகின்றனர் என்பதே உண்மையாகும். இதில் சோகம் என்னவென்றால் புகைபிடிப்பவரிலும் பார்க்க புகைப்பவருக்குப் பக்கத்தில் இருப்பவருககே அதிக பாதிப்பாகும் (80%). ஏனெனில் புகைப்பவர் வடிகட்டி (Filter) பாவிக்கின்றனர்.ஆனால் அப்பாவிகளான புகைபிடிக்காத பக்கத்திலுள்ளோர் வடிகட்டி இன்றி நேரடியாக புகையை சுவாசிப்பதால் அதிக பாதிப்பை அடைகின்றனர். உதாரணமாக, வீட்டில் ஒருவர் புகைக்கும் போது அவரது தாய், தந்தை, மனைவி, குழந்தைகள், மனைவி கருவுற்றிருப்பின் கருவிலுள்ள சிசு உட்பட அனைவரும் பாதிக்கப்படுகின்றனர். இதை தடுப்பதற்காக உணவகங்கள், கோவில்கள், பாடசாலைகள், வைத்திய சாலைகள், போக்குவரத்து சாதனங்கள், பொது இடங்கள் போன்ற சன நடமாட்டங்கூடிய இடங்களில் புகை பிடிப்பது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதுடன் இது தண்டனைக்குரிய குற்றமாகும்.இருப்பினும் புகைபிடிப்போரினதும் புகையிலை பாவனையாளரதும் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதானது மிகவும் வேதனையான விடயமாகும்.

நோய்வாய்ப்படுவதுடன் இதற்காக தினமும் பெருந்பொகை பணம் செலவு செய்யப்படுகின்றது. உதாரணமாக ஒருவர் ஒரு நாளைக்கு நான்கு சிகரெட் புகைப்பவரானால் ஒரு சிகரெட் 30/= என வைத்துக் கொண்டால் 30X4 = 120/= நாளொன்றிற்கு, 120X30= 3600/= மாதமொன்றிற்கு, 3600X12 = 43200/= வருடமொன்றிற்கு செலவு செய்யப்படுகின்றது. இதை புகைப்பவர்கள் சிந்திப்பதில்லை. இப்பணத்திற்கு குடும்பதுடன் சுற்றுலா செல்லலாம். அதன் மூலம் முழுக்குடும்பமும் சந்தோசத்தை அனுபவிக்கலாம். அதை விடுத்து இவ்வளவு பெருந் தொகை பணத்தைச் செலவுசெய்து நோயைப் பெற்று தானும் வேதனையை அனுபவித்து குடும்பத்தினரையும் வேதனைப்படுத்தி குடும்பத்தின் நின்மதியையும் கெடுத்து பணத்தையும் விரயமாக்குவதுடன் வைத்தியசாலைகளில் இவர்களுக்கு அரசும் பெருந்தொகை பணத்தை சிகிச்சையளிப்பதற்காகச் செலவு செய்கின்றது.

இதனால் பொதுமக்களுக்கு புகையிலை பாவனையின் விளைவுகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி புகையிலை பாவனையற்ற உலகை தோற்றுவிக்க உலக சுகாதார நிறுவனம் 1988 ஆம் ஆண்டு புகையிலை ஒழிப்பு தினத்தை அறிமுகப்படுத்த சித்திரை 7 ஐ முன்மொழிந்தது. பின்னர் உலக சுகாதார நிறுவன மகா நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 31 ஆம் நாளை உலக புகையிலை ஒழிப்பு தினமாக பிரகடனப் படுத்த பரிந்துரைத்தது. அதன்படி ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 31 ஆம் நாளை உலக புகையிலை ஒழிப்பு தினமாக 1989 முதல் அனுஷ்டிக்கப்படுகின்றது. 1990 ஆம் ஆண்டுமுதல் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு கருப்பொருளை தொனிப் பொருளாக பிரகடனப்படுத்தி அத் தொனிப் பொருளை நடைமுறைப்படுத்த பல நிகழ்ச்சிகளை முன்னெடு க்கின்றனர்.

அந்த வகையில்,

1990- புகையிலையின்றிய குழந்தைப்பராய வளர்ச்சியும் இளைஞர்களும்

1991- சிறப்பான புகையிலையற்ற பொது இடங்களும் போக்குவரத்து சாதனங்களும்

1992 -பாதுகாப்பான ஆரோக்கியமான புகையிலையற்ற வேலைத் தளங்கள்

1993- உலக புகையிலையற்ற எமது சாளரமாக சுகாதார சேவை

1994 - ஊடகங்களும் புகையிலையும்.

1995- நீங்கள் சிந்திப்பதைவிட புகையிலைக்கு செய்யும் செலவு அதிகம்

1996- புகையிலை இல்லாத விளையாட்டு மற்றும் கலைநிகழ்வு

1997- ஒன்றுபடுவோம் புகையிலையற்ற உலகிற்காய்

1998- புகையிலையின்றி வளர்ச்சியடைவோம்

1999- புகையிலை பொதிகளை விட்டெறிவோம்

2000- புகையிலை மரணததை ஏற்படுத்தும் அதை தொட்டு ஏமாறாதீர்

2001- இரண்டாம் நபரின் புகை உன்னை கொல்லும்

2002- புகையிலையற்ற விளையாட்டு

2003- புகையிலையற்ற சினிமா, புகையிலையற்ற நாகரிகம

2004- புகையிலை பாவனையும் வறுமையும் ஒரு விஷச் சுழல்

2005- புகையிலைக் கெதிராக சுகாதார பணியாளர்கள்

2006- புகையிலை எந்த வடிவமானாலும் அல்லது தோற்றமானாலும் மரணத்தைத் தோற்றுவிக்கும்

2007- புகைத்தலில்லாத உள்ளுணர்வு

2008- புகையிலையற்ற இளைஞர் சமுதாயம்

2009- புகையிலை தொடர்பான சுகாதார எச்சரிக்கைகள்

2010- புகையிலையை பெண்களுக்கு விற்பனை செய்யும் போது பாலினத்துடன் வலியுறுத்தல்

2011- புகையிலை கட்டுப்பாட்டில் உலக சுகாதார நிறுவனத்தின் திட்டம் சம்பிரதாயப்படி முன்னெடுத்தல்

2012- புகை யிலைக் கம்பனியில் தலையிடு

2013- புகையிலை தொடர்பான விளம்பரங்கள் உற்பத்தி விருத்தி மற்றும் அனுசரணைகளைத் தடை செய்

2014- புகையிலை உற்பத்திப் பொருட்களின் வரியை உயர்த்துதல் மற்றும்

2015- புகையிலைப்பொருட்களின் சட்டவிரோத விற்பனையை நிறுத்துதல் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாண்டின் கருப்பொருளான **புகையிலைப் பொருட்களின் சட்டவிரோத விற்பனையை நிறுத்துதல்**

இவற்றை மனதில் நிறுத்தி செயற்படுவதன் மூலம் புகையிலையற்ற இலங்கையை கட்டியெழுப்பி ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கி வளமான நாட்டை கட்டியெழுப்ப ஒவ்வொருவரும் திடசங்கற்பம் கொள்வோமாக. அத்துடன் புகைப்பதால் தாமும் பாதிப்படைவதுடன் அயலில் உள்ளவர்களையும் பாதிப்படையச் செய்வது நியாயமா? எனவேபுகையிலைப்பாவனையை தவிர்ப்போம். சந்தோசமாக வாழ்வோம். வழமான, ஆரோக்கியமான வாழ்க்கை வாழ உலக சுகாதார நிறுவனம் பின்வருமாறு கூறுகின்றது. அதாவது மதுவை தவிர்ப்போம், புகையிலை மற்றும் போதைப் பொருட்களின் பாவனையைத் தவிர்ப்போம், சீனியையும் உப்பையும் குறைப்போம், உடலுழைப்பில் ஈடுபடுவோம், பழங்களும் மரக்கறி வகைகளும் அதிகம் உண் போம. இதனைப் பின்பற்றி நாமும் நலமுடன் வாழ்வோம்.

**பொ.பா.சிவயோகம்**
விரிவுரையாளர்
தாதியக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஜனாதிபதி மகிந்த அடுத்த பிரதமராவது நிச்சயம்

**வாசுதேவ நம்பிக்கை**

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இந்த வாரம் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாக மகிந்த அணி ஆதரவாளரான முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். எதிர்வரும் பொதுத் தேர்தலில் 113க்கு மேல் ஆசனங்களை வெற்றி பெற்று மகிந்த ராஜபக்ஷ இந் நாட்டின் பிரதமராவது நிச்சயமாகுமென்றும் அவர் தெரிவித்தார்.**

இது தொடர்பாக முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவிக்கையில் ஏகாதிபத்திய வாதிகளின் திட்டத்திற்கு அமைய சந்திரிகா, ரணில் உட்பட அனைத்துவிதமான திகாரர்கள் இணைந்து ஏற்படுத்திய பொறி தகர்க்கப்பட்டுள்ளது.

இன்று மைத்திரியும் மகிந்தவும் ஓரணியில் இணைந்துள்ளனர்.

நுகேகொடையில் ஆரம்பமான மக்கள் போராட்டம் இன்று வெற்றி கண்டுள்ளது.

ஜனநாயக ரீதியிலான மக்கள் பலத்தினால் ஏகாதிபத்திய வாதிகளின் சதித்திட்டங்களை தோல்வியடையச் செய்யலாம் என்பது இன்று உண்மையாக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பும், சமூக நியாயத்துக்குமான மக்கள் சார்பு கொள்கை மைத்திரி-மகிந்த ஒன்றிணைவின் மூலம் ஒகஸ்ட் 17ஆம் திகதி மாபெரும் வெற்றியை பெறுவது நிச்சயமாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரி மற்றும் ஜனநாயக சக்திகளை சுற்றியுள்ள மக்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை மீண்டும் ஒற்றுமைப்படுத்த மேற்கொண்ட போராட்டம் வெற்றி பெற்றுள்ளது.

குடும்ப ஆட்சியை நாமும் எதிர்க்கின்றோம். இன்று மைத்திரியின் ஆதரவாளர்களாக இருந்தவர்களின் முகத்திரை கிழிந்துள்ளது.

எஸ்.பி. நாவின்ன ஐ.தே. கட்சியுடன் இணைந்து விட்டார். எதிர்காலத்தில் மேலும் பலர் ஐ.தே.கட்சியுடன் இணைவார்கள்.

மைத்திரியுடன் இருந்தாலும் இவர்களின் ஆதரவு ஐ.தே.கட்சியிடமே இருந்தது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எமக்கு 107 ஆசனங்கள் கிடைக்கும். இதனோடு இடதுசாரிகளும் ஒன்றிணையும் போது 113 இற்கு மேல் ஆசனங்கள் கிடைக்கும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிலைச் சின்னம் வெற்றி பெற்று மகிந்த ராஜபக் ஷ இந்நாட்டின் பிரதமராவது நிச்சயமாகும்.

எதிர்வரும் நாட்களில் (இந்த வாரம்) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை எமது அணி சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாகவும் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 350 | 400 |
| தக்காளி | 120 | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 60 | 50 |
| கோவா | 110 | 100 | 100 | 80 |
| கரட் | 180 | 100 | 240 | 140 |
| பூசணி | 40 | 20 | 40 | 40 |
| புடோல் | 80 | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 80 | 40 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 200 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 100 | 130 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 160 | 100 |
| பயற்றங்காய் | 120 | 120 | 60 | 80 |
| லீக்ஸ் | 120 | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 140 | 100 | 120 | 80 |
| கறிமிளகாய் | 200 | 120 | 200 | 120 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 200 | 300 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 30 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 10 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-40 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 140 | 200 | 160 | 120 |
| வெங்காயப்பூ | 280 | 300 | — | 160 |
| முள்ளங்கி | 50 | 40 | 100 | 50 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 424

வெங்கடெஸ் சுபா

உடைந்த கைகளைக் கொண்டு உழைக்கலாம். உடைந்த உள்ளத்தை கொண்டு உழைக்க முடியாது...

காயா காயத்திரி




கீர்த்தனா கருணாகரன்




**வெளிநாடு**

நான் ஊருக்கு வருகிறேன்.

**மனைவி**

நான் சொன்னதெல்லாம் மறக்காம வாங்கிற்று வாங்க





**நண்பன்**

நல்ல சரக்கா வாங்கி வா

**அம்மா**

நீ நல்ல படியா ஊருக்கு வந்து சேர்ந்தா அதுவே போதும் எனக்கு



கஜன் மகாதேவன்




மின்னெரி மின்னெரிகொட்டுவ



**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் அரசியல் பிரவேசம் பிரதமர் கதிரையை குறிவைத்தே!



ஏழு மாதங்களுக்கு முன்னர் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மீண்டும் அரசியலுக்கு வந்திருக்கிறார்.

கடந்த முதலாம் திகதி மெதமுலானவில் வைத்து அவர் பாராளுமன்ற அரசியலுக்கு மீண்டும் திரும்பப் போவதை அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறார்.

மகிந்த ராஜபக்சவின் இந்த முடிவு சிலருக்கு சந்தோசத்தையும் இன்னும் சிலருக்கு அதிர்ச்சியையும் கொடுத்திருக்கிறது.

மகிந்த ராஜபக்சவின் மீள் வருகை சிறுபான்மையின மக்களுக்கு நல்லதொரு சகுனமாகவோ, செய்தியாகவோ இருக்கப் போவதில்லை.

அதுபோலவே மேற்குலக நாடுகளாலும், இது நல்லதொரு அறிகுறியாகப் பார்க்கப்படும் என்று கருதுவதற்கில்லை.

மகிந்த ராஜபக்சவின் 10 ஆண்டுகால ஆட்சியின்போது எதிர்கொள்ளப்பட்ட சிக்கல்களும் நெருககடிகளும் உள்நாட்டுக்குள் மட்டுப்படுத்தப்பட்டவையல்ல.

அது பிராந்திய சர்வதேச சக்திகளையும் இக்கட்டானதும், குழப்பானதுமான நிலைக்குள்ளும் தள்ளியிருந்தது.

எனவேதான் கடந்த ஜனவரி மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மகிந்த ராஜபக்சவின் தோல்வி உள்நாட்டு மக்களால் மட்டும் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

சர்வதேச சக்திகளின் கையும் அதில் ஓங்கியிருந்தது. குறிப்பாக அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் மகிந்த ராஜபக்சவைத் தோற்கடிப்பதற்கான வியூகம் வகுப்பதில் முக்கிய பங்காற்றியதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

மகிந்த ராஜபக்சவும் கூட தோல்விக்குப் பின்னர ஊடகங்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் அளித்த பேட்டிகளில் அமெரிக்காவையும், இந்தியப் புலனாய்வுத் துறையையும் நேரடியாகவே குற்றஞ்சாட்டியிருந்தார்.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் அமெரிக்கா எதிர்பார்த்த எதையும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. அமெரிக்க நலன்களுக்கு எதிராகவே மகிந்த ராஜபக்ச அரசாங்கம் செயற்பட்டது.

அதைவிட சீனாவுக்கு தாராளமாக இடமளித்ததன் மூலம், அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின் கோபத்தையும் சம்பாதித்திருந்தது மகிந்த அரசாங்கம்.

இதுதான் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் ஜனாதிபதித் தேர்தலில் ஏதோ ஒரு நகர்வை முன்னெடுக்கக் காரணமாக இருந்தது.

அதுபோலவே, மகிந்த ராஜபக்ச ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட பின்னர், அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுடனான உறவுக்ள் சீரடையத் தொடங்கின.

பசில் ராஜபக்ச சிறையில் இருந்த போது அளித்திருநத பேட்டி ஒன்றில் இந்தியாவைப் பகைத்துக் கொண்டதே தமது அரசாங்கம் செய்த மிகப் பெரிய தவறு என்று குறிப்பிட்டிருந்தார்.

போரில் வெற்றியீட்ட இந்தியா, மிகப் பெரிய உதவிகளை வழங்கியதை நினைவுபடுத்தியே அவர் அந்தக் கருத்தை வெளியிட்டிருந்தார்.

இந்தியா மட்டுமன்றி அமெரிக்காவையும் பகைத்துக் கொண்டதன் விளைவைத்தான் மகிந்த ராஜபக்ச கடந்த ஜனவரி மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் அனுபவிக்க நேரிட்டது.

மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டதன் பின்னர் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் சாதகமான நிலை இலங்கையில் தோன்றியது.

ரணில் விக்ரமசிங்க, மைத்திரிபால சிறிசேன கூட்டு அரசாங்கம் அமெரிக்க, இந்திய நலன்களைப் புறக்கணிக்காமல் நடந்து கொண்டது.

அதுபோலவே மகிந்த ராஜபக்சவினால் உருவாக்கப்பட்ட சீன சார்பு வெளிவிவகாரக் கொள்கையில் இருந்தும், இலங்கை விலகிக் கொண்டது.

இந்த மாற்றங்கள் மேற்குலகிற்கும், இந்தியாவுக்கும் மிகவும் சாதகமான நிலையைத் தோற்றுவித்தது.

இதன் விளைவாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டார். அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியும் இலங்கை வந்தார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் வருகை கூட இராஜதந்திர நிகழ்ச்சி நிரலில் இருக்கிறது.

இவையெல்லாவற்றையும் சாத்தியப்படுத்தியது அதிகாரத்தில் இருந்து மகிந்த ராஜபக்ச வெளியேற்றப்பட் ஒரு நிகழ்வுதான்.

மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டதற்குப் பிந்திய இலங்கையில், ஒரு ஜனநாயக வெளி தோன்றியது உண்மை.

அந்த ஜனநாயக வெளியும், இயல்பு நிலையும் மேற்குலகை நன்றாகவே வசீகரித்து விட்டன. இந்தச் சூழல் நிலைத்திருக்க வேண்டும் என்பது மேற்குலகினது எதிர்பார்ப்பாக இருக்கிறது.

கடந்த மார்ச் மாதம் ஐநா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பித்திருக்க வேண்டிய போர்க்குற்ற விசாரணை அறிக்கை தாமதிக்கப்பட்டதே இலங்கையில் தற்போதைய நில்லை தொடர வேண்டும் என்பதறந்காகத்தான்.

ஆனால் இப்போதைய நிலைவரங்கள் அனைத்தும் அமெரிக்காவினதோ, இந்தியாவினதோ எதிர்பார்ப்புக்கு முரணானதாக அமைந்திருக்கிறது.

கடந்த ஜனவரி மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டு, ஓரம்கட்டப்பட்ட மகிந்த ராஜபக்ச மீண்டும் அரசியல் அரங்கிற்குள் நுழைந்திருக்கிறார்.

இதனை அமெரிக்காவோ இந்தியாவோ எதிர்பார்த்திருக்கும் என்று கூற முடியாது.

அதைவிட இப்போதைய சூழ்நிலையை இந்த நாடுகளால் சகித்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று கருத முடியாது.

மகிந்த ராஜபக்ச மீண்டும் ஆட்சி அதிகாரத்துக்கு வருவது அதுவும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ள சூழலில் அரசாங்கத்தைக் கைப்பற்றுவது ஆபத்தானது.

இது சிறுபான்மையின மக்களை மட்டும் அச்சம் கொள்ள வைக்கவில்லை.

அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுக்கும் இது இக்கட்டான நிலைதான்.

ஏற்கனவே மகிந்த ராஜபக்ச மீண்டும் அரசியலுக்குள் நுழைந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் ஊழல் மோசடிகளை விசாரிக்கவும் வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள பணத்தை மீட்கவும் அமெரிக்கா இந்தியா போன்ற நாடுகள் இலங்கை அரசாங்கத்துக்கு உதவிகளை வழங்கி வருகின்றன.

ஆனாலும் அந்த விசாரணைகள் முடிவடைவதற்குள் பாராளுமன்றத் தேர்தலும் வந்துவிட்டது. மகிந்த ராஜபக்சவும் அரசியலுக்கு வந்துவிட்டார்.

மகிந்த ராஜபக்ச பிரதமர் பதவியைக் குறிவைத்தே அரசியலில் களமிறங்கியிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை.

அவர் ஒன்றும் வெறும் பாராளுமன்றக் கதிரைக்காக களமிறங்கவில்லை. அவரது முழுமையான இலக்கும் பிரதமர் பதவி மீதுதான் இருக்கிறது.

அவர் மீண்டும் அதிகாரத்துக்கு வந்துவிட்டால் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு எந்த வகையிலும் அவரை அசைக்க முடியாது.

அவர் தனது அதிகாரங்களை வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையே முடக்கப் பார்ப்பார் என்பதில் சந்தேகமில்லை.

அதைவிட அவரது ஆட்சியில் நடந்த ஊழல் மோசடிகளுக்கு எதிரான எல்லா விசாரணைகளும் நின்று போகும்.

அதற்குப் பின்னர் அமெரிக்காவோ இந்தியாவோ எதிர்பார்த்த எதுவுமே நடக்கப் போவதில்லை. மீண்டும் சீனாவே முதன்மை பெறத் தொடங்கும்.

அத்தகையதொரு நிலையை அமெரிக்காவோ இந்தியாவோ விரும்பாது.

இத்தகைய நிலையில் மகிந்த ராஜபக்சவின் அரசியல் மறுநுழைவை இந்த நாடுகள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றன?

எத்தகைய மாற்று வியூகத்தை அமைக்கப் போகின்றன என்பது முக்கியமான கேள்வி.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மகிந்தவின் மீள் வருகையால்

# ஜே.வி.பி அதிருப்தி



(கொழும்பு)

**நாட்டை ஜனநாயகத்தின் பாதையில் கொண்டு செல்லும் நோக்கத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கைகோர்த்த இலட்சக்கணக்கான மக்களை மைத்திரி ஏமாற்றிவிட்டார். மகிந்தவை மீண்டும் கட்சிக்குள் கொண்டு வந்து வரலாற்றுத் தவறை ஜனாதிபதி செய்து விட்டதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்த செயற்பாட்டால் அவரை நம்பி கட்சியை விட்டு வெளியேறிய உறுப்பினர்களின் நிலை கேள்விக்குறியாகியுள்ளது எனவும் ஜே.வி.பி தெரிவித்தது.

மக்கள் விடுதலை முன்னணியால் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பின் போதே ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் மீண்டும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இடம் வழங்கப்பட்டுள்ளது. இது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் முடிவாக இருக்கலாம். ஆனால் இதன் விளைவுகள் நாட்டையும், மக்களையும் பாதிக்கும் விடயமாகும். கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சுதந்தரக் கூட்டணியில் இருந்து மைத்திரிபால சிறிசேன வெளியேறி அப்போதைய ஜனாதிபதி மகிந்தவை வீழ்த்தும் போராட்டத்தில் எம் அனைவருடனும் கைகோர்த்தார்.

இந்நிலையில் மகிந்த கடந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அவருடன் வெளியேறிய அனைவரினதும் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்பதை தெரிந்தும் இவர்கள் மகிந்தவுக்கு எதிராக களமிறங்கினர்.

இதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பல சந்தர்ப்பங்களில் வெளிப்படையாக தெரிவித்துள்ளார். இந்நிலையில் கடந்த தேர்தலின் போது அப்போதைய சர்வாதிகார ஆட்சியாளரான மகிந்தவை வீழ்த்தி நாட்டில் நல்லாட்சியை உருவாக்க 62 இலட்சம் மக்கள் வாக்களித்தனர். கடந்த 8 ஆம் திகதி மைத்திரிபால சிறிசேன மக்களுக்கு கொடுத்த வாக்குறுதி களை இன்று மீறி விட்டார். நாட்டின் நல்லாட்சியை எதிர்பார்த்து வாக்களித்த 62 இலட்சம் மக்களையும் மைத்திரிபால சிறிசேன ஏமாற்றிவிட்டார்.

மகிந்தவை மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் இணைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நம்பி வாக்களித்த பல இலட்சம் மக்களையும் ஏமாற்றிவிட்டார். இது மக்களுக்கு செய்த மிகப்பெரிய துரோகமாகும். இதற்கு மக்களிடம் ஒருபோதும் மன்னிப்பு கிடைக்காது.

மூவின மக்களும் இன்று ஏமாற்றமடைந்துள்ளனர். இனி எந்த நிலையிலும் மக்களின் முன்னால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தைரியமாக முகம்கொடுக்க முடியாது போய்விடும். குடும்ப ஆட்சியை முற்றாக வீழ்த்தி ஜனநாயக ஆட்சியை உருவாக்குவதாக ஜனாதிபதி கூறினார். ஆனால்மீண்டும் அதிகாரத்துக்கு மகிந்தவை கொண்டு வந்து நாட்டை சீரழிக்கும் பாதையை அவரே ஏற்படுத்திக் கொடுக்க நினைக்கின்றார்.

மீண்டும் மகிந்த ஆட்சிக்கு வந்தால் மைத்திரியை நம்பி வெளியேறிய ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் உள்ளது. சிறுபான்மை மற்றும் மகிந்தவை எதிர்த்த மக்கள் அனைவரும் சிக்கலை எதிர்கொள்ளவேண்டி வரும். இதை மைத்திரிபால சிறிசேன மறந்தது ஏன்? எனவே மக்கள் இம்முறை சரியான தீர்மானங்களை எடுக்க வேண்டும். மக்களின் சரியான தெரிவு என்னவென்பதை இம்முறை தேர்தலின் மூலம் மக்கள் வெளிப்படுத்த வேண்டும்.

மேலும் ஐக்கிய மக்கள் சுதந்தரக் கூட்டணியில் இருந்து கடந்த ஆட்சியில் மகிந்தவின் குடும்ப அரசியல்வாதிகள் செய்த கொள்ளைகள் மற்றும் ஊழல்மோசடிகள் அனைத்தில் இருந்தும் அவர்களை காப்பாற்றி அவர்களை நிரபராதியாக்கும் நோக்கத்தில் தான் மகிந்த மீண்டும் அதிகாரத்துக்கு வர முயற்சிக்கின்றார். அதேபோல் மகிந்தவுக்கு இன்னும் பதவி மோகம் உள்ளதென்பது அவரது செயற்பாடுகளின் மூலம் தெளிவாக தெரிகின்றது. மகிந்தவின் அரசியல் வரலாற்றில் அனைத்து சலுகைகளையும் அனுபவித்தவர். சாதாரண அமைச்சராக வந்து நாட்டின் ஜனாதிபதியாக ஆட்சிசெய்தவர். அவ்வாறான ஒருவர் மக்களால் தோற்கடிக்கப்பட்டுவிட்டார். ஆனால் மக்களால் தோற்கடிக்கப்பட்ட நபர் மீண்டும் அதிகாரத்தை கைப்பற்ற நினைக்கின்றார்.

மிக நீண்ட கால மோசடிகள், சர்வாதிகார ஆட்சியை மக்கள் இன்னும் மறக்கவில்லை. நாட்டில் பெரும்பாலான மக்கள் இன்னும் மகிந்த ஆட்சியை வெறுக்கின்றனர். அவ்வாறான நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி எடுத்திருக்கும் தீர்மானமானது தவறான ஒன்றாகும்.

அதேபோல் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் இன்று கட்சியை வழிநடத்தும் தலைமைத்துவம் ஒன்று இல்லாது போய் விட்டது. மகிந்தவை வைத்து அரசியல் தஞ்சம் கேட்கும் ஒரு கூட்டம் உள்ளது. மகிந்த கட்சியில் இல்லாவிட்டால் கட்சியை முன்னெடுக்க முடியாது என்ற நிலைப்பாட்டில் இன்னொரு கூட்டம் கட்சிக்குள் உள்ளது. அதைவிடவும் சரியான முடிவுகளை எடுக்க முடியாத தலைமைத்துவம் உள்ளது. இந்நிலையில் கட்சியை சரியாக வழிநடத்தும் தலைமைத்துவம் இன்று கட்சிக்குள் இல்லாது போய்விட்டது. ஒரு களவாணிக் கும்பலுக்கு மீண்டும் ஆட்சியை ஒப்படைக்கும் நிலையில் தான் கட்சி செயற்படுகின்றது. எனவே இம்முறை தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி நிச்சயமான தோல்வியை சந்திக்கும் என்பது உறுதியாகிவிட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# எதிர்வரும் 5 ஆண்டுகளுக்குள் 10 இலட்சம் தொழில்வாய்ப்புகள்

எதிர்வரும் 5 ஆண்டுகளுக்குள் 10 இலட்சம் தொழில் வாய்ப்பு வழங்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்தின் கீழ் குளியாப்பிட்டியவில் ஜேர்மன் வொக்ஸ்வேகன் வாகன உற்பத்தி தொழிற்சாலையொன்று நிறுவப் படவுள்ளது. இந்த தொழிற்சாலையில் வாகனங்கள் உற்பத்தி செய்யப்படும் அதேநேரம், இதன் மூலம் 10 இலட்சம் பேருக்கு தொழில் வாய்ப்புகள் வழங்கப்படும். மேற்படி வெளிநாட்டு முதலீட்டுக்காக அரசாங்கத்தின் பொருளாதாரக் குழு அனுமதி வழங்கியுள்ளது. இதன்படி பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னர் இத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கான சாத்தியம் இருப்பதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த அரசாங்கத்தில் இதே தொழிற்சாலையை இலங்கையில் நிறுவுவதற்கான சந்தர்ப்பம் கோரி அதன் உரிமையாளர்கள் குழுமம் இலங்கை வந்தபோதும் அதிக தரகுக் கூலி கேட்கப்பட்ட காரணத்திற்காக அவர்கள் திரும்பி போயுள்ளனர்.

ஆனால்தற்போது வொக்ஸ்வேகன நிறுவனம் அந்த தரக்குக் கூலி பெறுமானத்திற்குசமனானநிதியை தொழிற்பயிற்சி நிறுவனமொன்றை இலங்கையில் ஸ்தாபிப்பதற்காக நன்கொடையாக வழங்க சம்மதம் தெரிவித்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் கீழ் உலகின் மிகப்பெரிய முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்ய காத்திருப்பதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### உருவமும் உள்ளமும்

ஒரு முனிவர் காட்டில் தவம் செய்து கொண்டிருந்தார். பல காலம் அப்படியே உட்கார்ந்து தவம் செய்து சக்தி பெற்று விட்டார். அதன் பின் ஒருநாள் இலேசாக கண்ணைத் திறந்து பார்த்தார்.

அவரின் கண்ணுக்கு முன்னால் ஒரு எலி பயந்து நடுங்கிக் கொண்டிருந்தது!

"இந்த எலி ஏன் இப்படி நடுங்குகிறது? என்று யோசித்தார். உடனே அதற்கான காரணத்தையும் கண்டு பிடித்து விட்டார்.

அவருக்கு பின்னால் ஒரு பூனை நின்று கொண்டிருந்தது. அதைப் பார்த்துதான் இந்த எலி நடுங்குகிறது! உடனே அந்த எலிக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைத்து தன்னுடைய தவவலிமையை பயன்படுத்தி அந்த எலியை ஒரு பூனையாக மாற்றிவிட்டார்.

இனிமேல் அந்த எலி பூனைக்காகப் பயப்பட வேண்டியதில்லை என்பதுதான் அவருடைய எண்ணம். இப்படிச் செய்துவிட்டு அந்த முனிவர் கண்ணை மூடிக் கொண்டார். மறுநாள் காலையில் லேசாகக் கண்ணைத் திறந்து பார்த்த போது இப்பொழுது அந்தப் பூனை பயந்து நடுங்கிக் கொண்டிருந்தது.

இது இன்னும் ஏன் இப்படி நடுங்கிறது என்று பார்த்தார். பின்னால் ஒரு நாய் நின்று கொண்டிருந்தது.

இப்பொழுது இதை ஒரு நாயாக மாற்றி விட்டால் பிரச்சினை தீர்ந்து விடும் என்று நினைத்து அதை நாயாக மாற்றினார்.

மறுபடியும் மறுநாள் கண்ணைத் திறந்து பார்த்தார். இப்பொழுது அந்த நாயும் நடுங்கிக் கொண்டிருந்தது. அதற்கு காரணம் முனிவரின் பின்னால் நின்று கொண்டிருந்த நரி!

சரி... நாயை நரியாக்கிவிடுவோம்! இனியாவது அது நிம்மதியாக இருக்கும் என்று நினைத்தார். அந்த நம்பிக்கையும் நீடிக்கவில்லை. அந்த நரியும் நடுங்க ஆரம்பித்தது. என்னவென்று பார்த்தால்... பின்னால் ஒரு புலி நின்று கொண்டிருந்தது.

முனிவர் சளைக்கவில்லை...! நரியை புலியாக்கினார். இப்பொழுது அவர் மனதில் ஒரு நிம்மதி. கண்ணை மூடினார். மறு நாள் காலையில் வழக்கம் போல லேசாக கண்ணை முழித்துப் பார்த்தால், புலி நடுங்கிக் கொண்டிருந்தது.

முனிவருக்கு கோபம் வந்து விட்டது. புலியே நடுங்கக் கூடிய அளவுக்கு அப்படி ஒரு பயங்கரமான மிருகம் இருக்குமா...? என்று பின்னால் திரும்பிப் பார்த்தார்.

அங்கே ஒரு பூனை நின்று கொண்டிருந்தது! ஒரு பூனையைப் பார்த்து எலிபயப்படலாம். புலி பயப்படலாமா. இது ஏன் இப்படி நடுங்குகிறது. இப்பொழுதுதான் அவருக்கு ஒரு உண்மை விளங்கியது.

உருவத்தில்தான் அது புலி! உள்ளத்தில் அது இன்னும் எலிதான்! அதனால்தான் பூனையைப் பார்த்ததும் எலிக்கு உரிய பயம் வந்து விட்டது! இதைப் புரிந்து கொண்ட முனிவர் புலியை மறுபடியும் எலியாக மாற்றி அதைக் காப்பாற்றி பத்திரமாக அனுப்பி வைத்தார். ஒரு விடயத்தையும் புரிந்து கொண்டார்.

அதாவது "என்னதான் தெய்வீக வரம் கிடைத்தாலும் நான் இறைவனின் பிரதிநிதியே தவிர இறைவன் அல்ல!" என்பதை உணர்ந்தார். நம்ம ஆள் ஒருவன் மனைவிக்குப் பயந்து யாரும் கண்டுபிடிக்காதவாறு கரடி வேஷம் போட்டுக் கொண்டு காட்டுக்குப் போனான். அங்கே கிடைக்கும் காய்கனிகளை சாப்பிட்டு தவம் செய்தான்.

தவவலிமை கிடைத்த பின்புதான் வீட்டுக்குப் திரும்ப வேண்டும் என்று முடிவு செய்தான். ஒரு நாள் காலையில் முழித்துப் பார்த்தால் எதிரில் நிஜமான கரடி ஒன்று வந்து உட்கார்ந்திருந்தது.

இவன் பயந்து நடுங்கிப் போனான். இவர் நடுங்க ஆரம்பித்தவுடன், அந்தக் கரடி பேசத் தொடங்கியது.

"பயப்படாதே மாமா! நான் கரடி இல்லை... உன் மச்சான்... அக்கா தான் இந்த வேஷம் போட்டு உன்னை கண்டுபிடித்து கூட்டிக் கொண்டு வரச்சொல்லி அனுப்பி வைத்தார். வேடத்தைக் கலைத்து விட்டு வீட்டுக்கு புறப்படு!" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப் பெயர்ச்சி பலன்கள்



**குருவின் பார்வை பதிகிறது! குழப்பம் இனிமேல் தீர்கிறது! விருந்தினர்களை வரவேற்பால் திணறடிக்கும் தனுசு இராசி நேயர்களே!**

இந்தக் குருப்பெயர்ச்சியால் உங்கள் சிந்தனைகள் வெற்றிபெறும், செல்வ நிலை உயரும். நொந்த மனம் மாறும், நோய் நொடிகள் அகலும், மண வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக அமையும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். இத்தனைக்கும் காரணம் குருவின் பஞ்சம ஸ்தான பார்வை தான்.

இதுவரை உங்கள் ராசிக்கு அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் ஆனி 20 ஆம் திகதி முதல் அற்புதமான பலன்களை அள்ளி வழங்க 9 ஆம் இடத்தில் அடியெடுத்து வைக்கின்றார். இனி உங்களுக்கு யோகம்தான். பாராளும்யோகம் முதல் பாராட்டு விழாவில் கலந்து கொள்ளும் யோகம் வரை வரப்போகின்றது.

தேசப்பற்றும், தெய்வப்பற்றும் மிக்கவர்கள் நீங்கள். உறவிற்கு கைகொடுக்கும் உத்தமர்கள் என்று நீங்கள் போற்றப்படுவீர்கள். உங்களோடு பழகியவர்கள் கடைசி வரை மறக்க மாட்டார்கள். எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதில் முக்கியத்துவம் பெற்று முதன்மை வகிப்பீர்கள். பின் விளைவைப் பற்றிச் சிந்திக்காமல் ஒரு சில சமயங்களில் பேசிவிட்டுப் பிறகு ஏன் இப்படிப் பேசினோம் என்று வருத்தப்படுவீர்கள். நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் நல்ல உள்ளம் உங்களுக்கு உண்டு. இப்படிப்பட்ட குணாங்களைப் பெற்ற உங்களுக்கு சிம்ம குரு எப்படிப்பட்ட பலன்களை வழங்கப் போகிறார் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**ஒன்பதில் குருவும் வந்தால்**
**ஒப்பற்ற வாழ்க்கை சேரும்!**
**பொன், பொருள் அதிகரிக்கும்!**

# குருவின் பார்வை பதிகிறது! குழப்பம் இனிமேல் தீர்கிறது!

**பூமியால் லாபம் கிட்டும்!**
**நண்பர்களின் ஒத்துழைப் பால்**
**நலம்யாவும் வந்து கூடும்!**
**இன்பத்தின் எல்லை காண**
**இறையருள் கைகொடுக்கும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு உங்கள் உன்னத வாழ்விற்கு அடித்தளம் அமைத்துக்கொடுக்கப் போகின்றது. பொருளாதார நிலை உயரும். தந்தை வழி உறவிலிருந்த விரிசல்கள் அகலும்.

பூர்வீக சொத்துக்களில் வீடுகட்ட ஒருசிலர் விரும்புவர். ஒருசிலர் அதைக் கொடுத்து விட்டு அதற்கு இணையான சொத்துக்களை வாங்கிக் குடியேற வேண்டும் என நினைப்பர். சுய ஜாதகத்தில் செவ்வாய் பலமறிந்து செயறபடுவது நல்லது. 4 இறகு அதிபதியான குரு இருப்பதால் வாகன யோகம் முதல் வசதி வாய்ப்புகள், பதவி வாய்ப்புகள், வாரிசுகளின் முன்னேற்றம் அனைத்தும் குருவின் கையில் தான் இருக்கிறது. அப்படிப்பட்ட குருவை பெயர்ச்சியாவதற்கு முன்னதாகவே போற்றிக் கொண்டாடினால் சீரும், சிறப்பும், செல்வாக்கும் மேலோங்கும்.

மகம் நட்சத்திரத்தில் குரு சஞ்சரிக்கப் போவதால் மூலம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களும், உத்திராட நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் தாரா பலம் பெற்ற நாளில் சிறப்பு பரிகாரங் களைச் செய்துகொள்ள வேண்டியது அவசியமாகும். விருச்சிகத்தில் சஞ்சரிக்கும் சனியும் குருவைப் பார்க்கப் போகின்றார். சனி உங்களுக்கு யோகம் செய்யும் கிரகமாகும். எனவே அவரது பார்வையால் மேலும் நற்பலன்கள் கிடைக்க விஸ்வரூப ஆஞ்சநேயரையும், விஸ்வரூப நந்தி வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

**குரு பார்வை கொடுக்கும் யோகங்கள்!**

இதுவரை எட்டாமிடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் இப்பொழுது ஒன்பதாமிடத்தில் சஞ்சரித்து உங்களுக்கு நல்ல பலன்களை வாரி வழங்கப் போகின்றார். பிறர் மதிக்கும் படியான வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பார். ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும். குருவின் பார்வை 3, 5 ஆம் இடம் மற்றும் ஜென்ம ராசியிலும் பதிவாகிறது. எனவே உடல் நலம் சீராகும்.

**ஜென்மத்தை குருதான் பார்த்தால்**
**செல்வாக்கு அதிகரிக்கும்!**
**மூன்றினை குருதான் பார்த்தால்**
**முன்னேற்றம் அதிகரிக்கும்!**




**ஐந்தினை குருதான் பார்த்தால்**
**அனைத்திலும் வெற்றி கிட்டும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. எனவே இனி புதியபாதை புலப்படும். புகழ் மிக்கவர்களாக மாறப் போகிறீர்கள். கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும்.

குருவின் பார்வை சகோதர ஸ்தானமான மூன்றாமிடத்தில் பதிவதால் உடன்பிறப்புகள் உற்சாகத்தோடு வந்திணைந்து உதவிக்கரம் நீட்டுவர். வழக்குகளில் வெற்றி கிட்டும். சகோதர ஸ்தானம் புனிதமடைவதால் முன்னோர்களுடைய சொத்து பாகப் பிரிவினை சுமுகமாக முடியும்.

குரு 5 ஆம் இடத்தைப் பார்ப்பதால் புத்திர ஸ்தானம் பலப்படுகிறது. பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய செய்திகள் வந்து சேரும். அவர்களால் உதிரி வருமானங்களும் கிடைக்கும். பழைய சொத்துக்களை விற்றுப் புதிய சொத்துக்களை வாங்குவீர்கள். தொழிலில் இடையூறு செய்த கூட்டாளிகளை விலக்கி விட்டு பங்குதாரர் களை சேர்க்கலாமா என்ற சிந்தனை மேலோங்கும்.

**கேது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது!**

வருமானம் திருப்திகரமாக இருக்கும். வளர்ச்சிக்கு வித்திட நண்பர்கள் முன்வருவர். மறைமுக எதிர்ப்புகள் மாறும். அரைகுறையாக நின்ற பணிகளை செய்து முடிப்பீர்கள். வீடுமாற்றச் சிந்தனை மேலோங்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்தபடியே இடமாற்றம் கிடைக்கும். தாய்வழி ஆதரவு உண்டு. மாமன், மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும்.

**சுக்ர சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது!**

எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதில் இடையூறு ஏற்படும். பணம் கொடுக்கல்-வாங்கல்களில் பிரச்சினைகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது. குடும்பச்சுமை கூடும். சேமிப்பில் ஒரு பகுதி செலவாகிறதே என்று கவலைப்படுவீர்கள். தொழில் போட்டி அதிகரிக்கும். ஆரோக்கியத்திற்கான மருத்துவச் செலவு அதிகரிக்கும். வெளிநாடு சென்றவர்கள் திருப்தி இல்லாமல் திரும்பும் சூழ்நிலை உருவாகலாம். உத்தியோகஸ்தர்களுக்கு முக்கிய இலாகாவிலிருந்து மாற்றம் ஏற்படும்.

**சூரிய சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது!**

இக்காலம் ஒரு இனிய காலமாகும். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். நகைகள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். முன்னோர் வழி சொத்துக்களில் முறையான லாபம் கிடைக்கும். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டு புதிய வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் கூடும். வழக்குகளில் வெற்றி கிட்டும். வருங்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். புதிய தொழில் தொடங்கும் முயற்சிக்கும் நண்பர்கள் உறுதுணையாக இருப்பர்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

குருவின் வக்ர காலத்தில் உங்களுக்கு நற்பலன்களே வந்து சேரும். ராசிநாதனாகவும் 4 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால் கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்ரம் பெறும்பொழுது அதிக நன்மைகளை வழங்கும்.

பொதுவாக ஆரோக்கிய தொல்லை அதிகம் ஏற்பட்டு அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்துக்கொள்ள முடியவில்லையே என்று கவலைப்பட்டவர்கள் உற்சாகத்தோடு பணிபுரியும் சூழ்நிலை அமையும். எப்படி நோய் அகன்றது என்று எங்களுக்கே தெரியவில்லை என்பார்கள். பங்குதாரர்களை சேர்த்துக் கொண்டு ஒப்பந்தங்களில் கையெழுத்திடு



வீர்கள்.

குடும்ப வருமானம் கூடும். குறிப்பிட்ட இலக்கை அடையும் வரை உழைத்துக் கொண்டே இருப்போம் என்ற உங்கள் கருத்தை நிலைநாட்டுவீர்கள். இடம், வீடு வாங்குவது சம்பந்தமாக இருந்த தடை அகலும். சொத்துக்களால் ஏற்பட்ட பிரச்சினையும், சொந்தங்களால் ஏற்பட்ட பிரச்சினையும் அகல ஆலமர் செல்வனை வியாழன் தோறும் வழிபட்டு வருவது நல்லது. அதுமட்டுமல்ல செந்தூர் முருகன் வழிபாடும், உங்கள் செயறபாடுகளுக்கு உறுதுணையாக இரு க்கும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

வியாழக்கிழமை குருவையும், செவ்வாய்க்கிழமை முருகப்பெருமானையும் வழிபாடு செய்யுங்கள்.

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

**தனுசு ராசியில் பிறந்த பெண்களுக்கு!**

இந்த குருப்பெயர்ச்சி உங்களுக்கு இனிய குருப்பெயர்ச்சியாக அமையப் போகின்றது. குரு பார்வையால் திருமணத் தடை அகலும். திருமணமான தம்பதியர்களாக இருந்தால் கணவன்மனைவிக்குள் அன்பும், அரவணைப்பும் அன்யோன்யமும் அதிகரிக்கும்.

பெற்றோர்கள் உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதாக வாக்குறுதி கொடுப்பர். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். தங்க நகை வாங்குவதில் தனிக் கவனம் செலுத்துவீர்கள். அடகு வைத்த நகைகளை மீட்டுக்கொண்டு வரும் வாய்ப்பு உருவாகும். எதிர் பார்த்த ஊதிய உயர்வு கிடைக் கும்.

குழந்தைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். கல்விக்கும், கடல் தாண்டும் முயற்சிக்கும் கரம்கொடுத்து உதவுவீர்கள். பெற்றோர்களின் மணி விழாக் களையும், பெண் குழந்தைகளின் பூப்புனித நீராட்டு விழாக்களையும் நடத்தி மகிழ்வீர்கள். வியாழன் தோறும் குருவை வழிபடுவதோடு ராகு பிரீதியும், நந்தி வழிபாடும் செய்வது நல்லது.

(நாளை மகரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவுதி அரேபியாவில் தப்பி ஓடிய தீவிரவாதி சுட்டுப் படுகொலை!

(ரியாத்)

சவுதி அரேபியாவில் மெக்கா மாகாணத்தில் உள்ள டேய்ப் நகரில், ஒரு வீட்டில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக உளவு தகவல்கள் கிடைத்ததன் பேரில், பொலிஸார் அந்த வீட்டை கடந்த வெள்ளிக்கிழமை சுற்றி வளைத்தனர். அங்கு 3 தீவிரவாதிகள் பிடிபட்டனர். ஏராளமான தளபாடங்கள் கைப்பற்றப்பட்டன.

இருப்பினும் யூசுப் அப்துல் லத்தீப் ஷபாப் என்ற தீவிரவாதி மட்டும் பொலிஸ் பிடியில் சிக்காமல் தப்பி ஓடி விட்டார்.

அவர் கடந்த சனிக்கிழமை ஒரு மறைவிடத்தில் பதுங்கி இருப்பதாக பொலிஸாருக்கு தெரிய வந்தது. இதையடுத்து பொலிஸார் அங்கு சென்று, அவரை சரண் அடையுமாறு கூறினர். ஆனால் அவர் சரண் அடைய மறுத்து பொலிஸார் மீது துப்பாக்கியால் சுட்டார். பொலிஸாரும் திருப்பிச் சுட்டனர். இறுதியில் அவன் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டான். (இ-7)




## பலி எண்ணிக்கை 11 ஆக அதிகரிப்பு

சீனாவில் ஜேஜியாங் மாகாணம், வென்லிங் நகரில் ஒரு காலணி தொழிற்சாலை செயற்பட்டு வந்தது. கடந்த சனிக்கிழமை மதியம், தொழிற்சாலையில் 50இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை பார்த்துக்கொண்டிருந்தனர். அப்போது கட்டடம் திடீரென இடிந்து தரைமட்டமானது. தகவல் அறிந்ததும், மீட்புப்படையினர் நவீன சாதனங்களுடன் விரைந்து வந்து மீட்பு பணிகளில் ஈடுபட்டனர்.

இருப்பினும் இடிபாடுகளில் சிக்கி, 11 பேர் உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர். 42 பேர் படுகாயங்களுடன மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். 3 பேரை காணவில்லை. என்ன காரணத்தினால், கட்டடம் இடிந்து விழுந்தது என்பது பற்றி விசாரணை நடத்தப்படுகிறது.

சீனாவில் பழைமையான கட்டடங்களில் தொழிற்சாலைகள் இயங்கி வருவதால் இத்தகைய விபத்துக்கள் அங்கு நடப்பது சகஜமான ஒன்று என்றே கூறப்படுகிறது. (இ-7)

# மலேசிய பிரதமர் மீது ஊழல் குற்றச்சாட்டு

(கோலாலம்பூர்)

மலேசிய பிரதமர் நஜீப் ரசாக் (வயது -61) மீது ஊழல் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அதாவது, அரசு நிதியில் இருந்து அவரது சொந்த வங்கி கணக்குகளுக்கு 700 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (சுமார் 4,500 கோடி ரூ.) மாற்றப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக பன்முக விசாரணை அமைப்புகளை சேர்ந்த உயர் அதிகாரிகள் இடம்பெறும் சிறப்பு விசாரணை குழு விசாரணை நடத்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த குழுவில் ஊழல் தடுப்பு ஆணையம், மத்திய வங்கி, பொலிஸ் உயர் அதிகாரிகள் இடம் பெறுவர்.

இந்த தகவலை அந்த நாட்டின் உயர் அதிகாரி அப்துல் கலிபடாயில் அறிவித்துள்ளார்.

ஆனால் பிரதமர் நஜீப் ரசாக், தன் மீதான ஊழல் குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்துள்ளார். இதுபற்றி அவர் 'பேஸ் புக்' சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட செய்தியில், "ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமரை பதவியில் இருந்து விரட்டியடிப்பதற்கு மேற்கொள்ளப்படும் பொய் பிரசாரத்தின் ஒரு அங்கம்தான் இது. இந்த குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் கிடையாது" என கூறியுள்ளார்.

இதற்கிடையே இந்த ஊழல் விவகாரம் குறித்து விவாதிப்பதற்காக பாராளுமன்றத்தை உடனே கூட்ட வேண்டும் என்று 2 எதிர்க் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. (இ-7)

# பிலிப்பைன்ஸில் படகு கவிழ்ந்ததில் 61 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்

(மணிலா)

**பிலிப்பைன்ஸில் 196 பயணிகளுடன் சென்ற படகு கடலில் கவிழ்ந்த விபத்தில் பலியானோர் எண் ணிக்கை 61 ஆக அதிகரித்துள்ளது.**

அந்நாட்டின் லெய்டே மாகாணத்திற்குட்பட்ட ஓர்மோக் நகரில் இருந்து செபுவுக்கு கிழக்கே உள்ள காமோட்டெஸ் தீவுக்கு கடந்த 3ஆம் திகதி கப்பல் சென்று கொண்டிருந்தது. இந்நிலையில் கடலில் வீசிய சூறாவளி காற்றில், திடீரென 27 மீற்றர் நீளம் கொண்ட அப்படகு கடலில் மூழ்கியது. இதையடுத்து அங்கு விரைந்த கடலோர காவல் படை வீரர்கள் கடலில் விழுந்து உயிருக்கு போராடியவர்களையும், சடலங்களையும் மீட்டனர். மேலும் அதில் பயணம் செய்த 18 பணியாளர்கள் உட்பட 145 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

உயிருடன் மீட்கப்பட்ட அனைவரும், ஓர்மோக்கை சுற்றியுள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இந்நிலையில் படகு கடலில் மூழ்கியதற்கு ஊழியர்களின் கவனக் குறைவு மற்றும் அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றியது தான் என கூறப்படுகிறது.



இதையடுத்து படகின் கப்டன், சிப்பந்திகள் மற்றும் படகின் உரிமையாளர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதில் குற்றச்சாட்டுகள் நிரூபணமானால் அந்நாட்டு சட்டப்படி குற்றவாளிகளுக்கு 40 வருட சிறை தண்டனை விதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஐ.எஸ்.நிலைகளின் மீது விமானத் தாக்குதல்கள்

சிரியாவில் இஸ்லாமிய அரசு ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் வலுவாக நிலைகொண்டுள்ள ரக்கா நகரிலுள்ள நிலைகள் மீது கடுமையான விமானத் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இம்முறை 16 ஐ.எஸ்.ஐ.எஸ்.-இலக்குகள் மீது தாங்கள் நடத்திய வான் தாக்குதல்களே சிரியாவில் இதுவரை மேற்கொண்டுள்ள மிகப்பெரிய தாக்குதல்கள் என்று அமெரிக்காவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சிரியாவிலும் ஈராக்கிலும் தாக்குதல் படைகளை அனுப்புவதற்கு ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் ரக்கா நகரை முக்கிய தளமாக பயன்படுத்துவதை நிறுத்துவதற்காகவே இந்தத் தாக்குதல்கள் நடந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, அமெரிக்காவின் ஆளில்லா விமானத்தின் தாக்குதலில் ரக்காவில் உள்ள பாடசாலை ஒன்றில் ஒரு குழந்தை அடங்கலாக ஐந்து பொதுமக்களும் ஒரு ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரியும் கொல்லப்பட்டுள்ளதாக சிரியாவின் மனிதவுரிமை விவகாரங்களை கண்காணித்துவருகின்ற குழுவினர் தெரிவித்தனர். (இ-7)

# 30பேர் மரணம் குறித்து விசாரணைகள் ஆரம்பம்

ஆப்கானிஸ்தானில் கடந்த வாரம் தலிபானுடன் நடந்த மோதலில் பொலிஸார் 30 பேர் வரையில் பலியான சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி அஷ்ரப் கானி விசாரணையைத் தொடங்கியுள்ளார்.

ஹசாரா இனச் சிறுபான்மையினரைச் சேர்ந்த உயிரிழந்த பொலிஸாருக்கு போதுமான உதவிகளை வழங்க அரசாங்கம் தவறியிருந்ததாக அவர்களின் உறவினர்களும் சில அரசியல்வாதிகளும் கூறுகின்றனர்.

சில பொலிஸாரின் சடலங்கள் தலை துண்டிக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டிருந்தன.

காபூலில் ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன. அந்தக் கொலைகளை ஒரு போர்க்குற்றம் என்று ஜனாதிபதி தெரிவித்தார். (இ-7)

# கருத்தறியும் வாக்கெடுப்பில் உச்சக்கட்ட வாக்குப்பதிவுகள்

(கிரேக்கம்)

கிரேக்கத்தின் கடன்நெருக்கடியை தீர்ப்பது தொடர்பில் கடன் கொடுத்தவர்கள் முன்வைத்திருந்த கடைசி நிபந்தனைகளை ஏற்க வேண்டுமா? இல்லையா? என்பதைத் தீர்மானிப்பதற்கான வாக்கெடுப்பில் பெருமளவிலான வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர்.

கருத்துக்கணிப்புகளின் படி, இரண்டு தரப்பிலும் முடிவுகள் மிக நெருக்கமாக இருக்கும் என்று கூறப்படுகின்றது.

அரசாங்கத்தின் நீண்டகால சிக்கன நடவடிக்கைகளால் பலரும் அதிருப்தி அடைந்துள்ளதாக கூறப்படுகின்றது.

இதனிடையே, எந்த முடிவு வந்தாலும் தமக்கு தீர்வு கிடைக்கப் போவதில்லை என்று பலரும் நம்புகின்றனர்.

ஒரு வாரகால கட்டுப்பாடுகளுக்கு பின்னர், சில வங்கிகள் பணம் வற்றிவிட்ட நிலைக்கு வந்து விட்டதாக கூறப்படுகின்றது.

நாடு ஒற்றுமையுடன் இருப்பது அவசியம் என்று ஜனாதிபதி ப்ரோகோ பிஸ் பாவ்லோபோலோஸ் தெரிவித்தார்.

இல்லை என்று முடிவு வந்தால், கிரேக்கம் யூரோ வலயத்திலிருந்து அநேகமாக வெளியேற நேரிடும் என்று ஐரோப்பியத் தலைவர்கள் எச்சரித்துள்ளனர். (இ-7)

# பிரான்ஸூம் ஜேர்மனியும் அரசியல் ரீதியாக அழுத்தம்

(பரீஸ்)

ரஷ்யாவுக்கும் கட்டாருக்கும் 2018 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் காறபந்து உலகக் கோப்பை போட்டிகளை நடததுவதற்கு வாய்ப்பளிப்பதற்கு ஆதரவாக பிரான்ஸூம் ஜேர்மனியும் அரசியல் அழுத்தங்களை கொடுத்திருந்ததாக ஃபிஃபா தலைவர் செப் பிளாட்டர் குற்றம்சாட்டியுள்ளார்.

போட்டியை நடத்தும் நாடுகளை தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்புக்கு முன்னதாக, பிரான்ஸ்



ஜனாதிபதி நிக்கோலா சார்க்கோஸியும் ஜேர்மனிய ஜனாதிபதி கிறிஸ்டியன் வூல்ஃப்-உம் தங்கள் நாடுகளின் பிரதிநிதிகளுக்கு அழுத்தம் கொடுத்திருந்ததாக ஜேர்மனிய நாளிதழ் ஒன்றுக்கு பிளாட்டர் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் புலனாய்வுத் துறையினர் ஊழல்குற்றச்சாட்டில் விசாரித்துவரும் செப் பிளாட்டர், தனது கட்டுப்பாட்டில் நடக்காத ஒரு விடயத்துக்கான பழியை ஏற்றுதான் களைப்படைந்துள்ளதாக தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவாளிகளுக்கு கட்சிகள் வேட்புமனு வழங்க வேண்டாம்

## அஸ்கிரிய,மல்வத்து பீடாதிபதிகள் கோரிக்கை


(கொழும்பு)

குற்றச் செயல்கள், ஊழல் மோசடிகளில் ஈடுபடாதவர்களுக்கு மட்டும் அரசியல் கட்சிகள் வேட்பு மனுக்களை வழங்க வேண்டுமென கண்டி அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடாதிபதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது நேர்மையாக நாட்டுக்கு சேவையாற்றக் கூடியவர்களுக்கு மட்டும் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் அளிக்குமாறு அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சித் தலைவர்களிடம் இரண்டு பீடாதிபதிகளும் கோரியுள்ளனர்.

குற்றச் செயல்கள் மற்றும் ஊழல் மோசடிகளில் ஈடுபடும் வேட்பாளர்களை மக்கள் நிராகரிக்க வேண்டுமெனவும் அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடாதிபதிகள் மக்களிடம் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7)



# ஆட்சி மாற்றத்திற்கு உதவியவர்களோடு ஜனாதிபதி மைத்திரி நின்றாக வேண்டும்

## ஹக்கீம் வலியுறுத்து

(கொழும்பு)

**ஆட்சி மாற்றம் உருவாக்குவதற்கு எந்த சக்திகள் தற்போதைய ஜனாதிபதிக்குத் துணையாக நின்றார்களோ, அந்த சக்திகளோடு இன்றைய ஜனாதிபதி நின்றாக வேண்டும் என முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். அவ்வாறு இல்லையென்றால், இந்த ஜனாதிபதியை நாங்கள் அங்கீகரித்துக் கொண்டு அரசியல் செய்வதில், சங்கடமானதொரு சூழ்நிலை உருவாகிவிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.**

அக்கரைப்பற்று மாநகரசபையின் முன்னாள் பிரதி முதல்வர் எம்.எம்.எம். றிஸாம், அவரின் அக்கரைப்பற்று இல்லத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த இப்தார் நிகழ்வில் கலந்து கொண்டு ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் உருவாக்கிய யுகப் புரட்சியை, தலைகீழாக மாற்றுவதற்குரிய முயற்சிகள் நடந்து கொண்டுள்ளதொரு சூழலில்தான், இந்த இப்தார் நிகழ்வில் நாங்கள் கூடியிருக்கின்றோம்.



தற்போது, அரசியலில் நடந்திருக்கின்ற நிகழ்வானது, ஸ்ரீலங்கா முஸலிம் காங்கிரசின் பேரம்பேசும் சக்தியினை அதி உச்சத்துக்குக் கொண்டு சென்றுள்ளது. எது எப்படியிருந்தாலும், எதிர்வரும் பொதுத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரசை தனித்துக் களமிறக்கினால், தாங்கள் வென்று விடலாமென்று, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மிகத் தீவிரமாக ஆலோசித்துக் கொண்டிருக்கின்றது என்பதுதான் இன்று எமக்குக் கடைசியாகக் கிடைத்த செய்தியாகும்.

முஸ்லிம் காங்கிரஸ் தனித்துக் களமிறங்கினால், யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு தவிர்ந்த எட்டு அல்லது 10 மாவட்டங்களில், ஐ.தே.கட்சியை தோற்கடித்து விடலாமென்று, ஐ.ம.சு.கூட்டமைப்பு கணக்குப் போட்டுக் கொண்டிருக்கின்றது.

முஸ்லிம் காங்கிரசோடு ஐ.தே. கட்சியுடன் சுமுகமாகப் பேசிய போதும், அவர்களிடத்தில் ஒருவித 'கறாரான' மனநிலை உள்ளது. ஆயினும், முஸ்லிம் காங்கிரசினை விட்டு விடுவதற்கும் ஐ.தே. கட்சிக்கு மனமில்லை. எம்மை தனித்துப் போட்டியிடுவதற்கு விட்டால், 5 அல்லது 6 ஆசனங்களை பெற்றாலும், அடுத்த ஆட்சியினைத் தீர்மானிக்கிற சக்தியாக மாறிப்போய் விடும் என்று ஐ.தே.கட்சி அச்சப்படுகிறது.

இந்த நிலையில், நாம் தனித்துப் போட்டியிட்டால் என்ன என்கிற ஆதங்கத்தினை வெளிப்படுத்தும் வகையில், எங்கள் கட்சி முக்கியஸ்தர்களை ஐ.ம.சு.கூட்டமைப்பானது தொலைபேசியில் தொடர்பு கொணடு பேசுகிறது.

இருந்தபோதும், நாம் ஒரு போதும் ஐ.ம.சு.கூட்டமைப்புடன் இணைந்து எதிர்வரும் தேர்தலில் களமிறங்கப் போவதில்லை. எது எவ்வாறாயினும், எமது சமூகத்தின் மீட்சிக்காக, முஸ்லிம் காங்கிரசின் வாக்கு வங்கியினுடைய வலுவினை நாம் பிரயோகிக்க வேண்டிய தேவையுள்ளது.

எனவே, அது தொடர்பில், கட்சி முக்கியஸ்தர்களுடன் அடுத்து வரும ஓரிரு தினங்களில் நாம் மீண்டும் பேசவுள்ளோம். நாட்டில் என்ன மாற்றம் வருகிறதோ, அந்த மாற்றம் அக்கரைப்பற்றிலும் வரவேண்டுமென்பதில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அக்கறையாகவுள்ளது.

அந்த அக்கறையினைக் கவனத்தில் எடுக்கும் வகையில் எமது தேர்தல் வியூகம் இருக்கும் என்பதை இப்போதைக்கு என்னால் சொல்லி வைக்க முடியும். இந்த நிலையில், அதற்கான அரைவாசி வேலையினை நேற்றைய தினம் மகிந்த ராஜபக்ஷ பார்த்து விட்டார்.

மிகுதி வேலையினை முஸ்லிம் காங்கிரஸ் பார்த்துக் கொள்ளும். மகிந்த ராஜபக்ஷ வருகிற அணிக்கு முஸ்லிம் சமூகத்தின் வாக்குகள் போகாது. ஏனென்றால், மகிந்த களமிறங்கும் அணிக்கு வாக்களிப்பதானது, எமது சமூகம் பட்ட கஷ்டங்கள், அவலங்களிலிருந்து அடைந்திருக்கின்ற மீட்சியை, மீண்டும் அதலபாதாளத்துக்குக் கொண்டு சென்றுவிடும் என்றார்.

இந் நிகழ்வில், அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம், காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு இயக்குநரும், அக்கரைப்பற்று மாநகரசபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான எஸ்.எல்.எம். ஹனீபா மதனி,கிழக்கு மாகாணசபை உறுபபினர்களான ஏ.எல்.எம். நஸீர், ஏ.எல். தவம், நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் இணைப்பாளர் ஏ.எல். மர்ஜூன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ-7)

# காணாமற்போன மாணவி மீட்பு கடத்திய ஆசிரியர் கைதானார்!

அம்பாறை, கல்முனை வைத்திய சாலையில் வைத்து கடந்த 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காணாமற போன 17 வயதான மாணவி மறு நாள் சனிக்கிழமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளதோடு கடத்திச் சென்ற ஆசிரியர் ஒருவரும் கைது செய்யப் பட்டுள்ளதாக சவளக் கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ஏ. நஜீம், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

சம்மாந்துறை போரக் கோவில் வீதியைச் சேர்ந்த உயர் தரம் கற்கும் மாணவியே காணாமற போயுளளதாக அவரது தாய் பொலிஸில் முறைப் பாடு செய்திருந்தார்.

கல்முனை ஜேசு ஜீவிக்கிறார் தேவாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை பிரார்த்தனைக்குச் சென்று விட்டு, கல்முனை ஆதார வைத்தியசாலையில் மருந்தெடுப்பதற்காக குறித்த மாணவியும் அவரது தாயும, தங்கையும், அயல்வீட்டு வசிக்கும் சிறுவனும் சென்றுள்ளனர்.

அப்பொழுது வைத்தியசாலைக் காவலாளி எல்லோரும் உள்ளே செல்ல முடியாது சிகிச்சை பெறும் நோயாளியும் உதவிக்கு இன்னொருவர் மாத்திரமே உள்ளே செல்லலாம் என்று கூறியுள்ளார்.

அதன்படி தாயும் தங்கையும் வைத்தியசாலையின் உள்ளே செல்ல குறித்த மாணவியும் பக்கத்து வீட்டுச் சிறுவனும் வைத்தியசாலை வாயிற் கதவடியில் நின்றுள்ளனர். [illegible] மாணவி சிறுவன அறியாத விதத்தில் திடீரெனக் காணாமற் போயுள்ளார்.

இச் சம்பவம் குறித்து கல்முனைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இம் முறைப்பாட்டையடுத்து துரித விசாரணையை மேற்கொண்ட பொலிஸார் குறித்த மாணவியை கண்டு பிடித்துள்ளதோடு ஆசிரியர் ஒருவரையும் கைது செய்துள்ளதாகவும் மாணவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.ஏ. நஜீம் தெரிவித்தார்

குறித்த சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.ஏ. நஜீம் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரயில் மோதியதில் 2மாடுகள் இறப்பு

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி நேற்று திங்கட்கிழமை அதிகாலை சென்றுகொண்டிருந்த ரயிலில் மூன்று மாடுகள் மோதுண்ட நிலையில், இரண்டு மாடுகள் சம்பவ இடத்தில் இறந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.


அத்துடன், மற்றுமொரு மாடு படுகாயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புணானைக்கு அண்மித்த மஜ்மா நகர் பகுதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவையில் விரைவில் மாற்றம்

## பிரதமர் மோடி நடவடிக்கை



**பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை கடந்த ஆண்டு பதவி ஏற்ற போது முதலில் அதில் 45 பேர் இடம் பெற்றிருந்தனர். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அமைச்சரவையை பிரதமர் மோடி விரிவுபடுத்தினார். புதிதாக 21 அமைச்சர்கள் பதவியேற்றனர். இதனால் மொத்த மத்திய அமைச்சர்களின் எண்ணிக்கை 45-ல் இருந்து 66 ஆக உயர்ந்தது. இந்நிலையில் அமைச்சர்வையில் விரைவில் மாற்றம் செய்ய பிரதமர் மோடி திட்டமிட்டுள்ளார்.**

தற்போது பா.ஜ.க. அரசு பதவி ஏற்று ஓராண்டு முடிந்த நிலையில் அமைச்சர்களின் செயற்பாடுகள் பற்றி பிரதமர் மோடி ஆய்வு செய்தார். அப்போது சில அமைச்சர்களின் நிர்வாகத்திறமை மீது மோடிக்கு அதிருப்தி ஏற்பட்டது.

சில அமைச்சர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட இலாகாகளை வகித்து வருகிறார்கள். எனவே நிர்வாகத்தை விரைவுபடுத்துவதற்காக மத்திய அமைச்சரவையை சற்று விரிவுபடுத்த பிரதமர் மோடி திட்டமிட்டுள்ளார்.

சில அமைச்சர்களின் இலாகாகளை மாற்றவும் அவர் பரிசீலனை செய்து வருகிறார்.

இன்னும் ஓராண்டுக்குள் பீகார, மேற்கு வங்கம், அசாம், தமிழநாடு, கேரளா, பஞ்சாப், உத்தரபிரதேசம் ஆகிய 7 மாநிலங்களில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது.

எனவே மத்திய அமைச்சரவை மாற்றத்தின் போது இந்த 7 மாநிலங்களுக்கும் உரிய பிரதிநிதித்து வமும், முக்கியத்துவமும் கொடுக்கும் வகையில் மாற்றம் செய்யப்படும் என்று கூறப்படுகிறது.

பா.ஜ.க. தேசியத் தலைவர் அமித்ஷா அண்மையில் பா.ஜ.க. நிர்வாக அமைப்பில் சில மாற்றங்களை செய்தார். மேல்சபை எம்.பி. அவினாஷ்ராய் கன்னாவை பா.ஜ.க. தேசிய தேர்தல் அதிகாரியாக நியமனம் செய்துள்ளார்.

பா.ஜ.க. பொதுச் செயலாளர் ராம் மாதவ் தற்போது காஷ்மீர் கூட்டணி அரசின் ஒருங்கிணைப்பாளராக உள்ளார். அவர் அசாம் மாநில பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பா.ஜ.க.வின் பொருளாதார விவகாரங்களுக்கான செய்தித் தொடர்பாளராக கோபால் அகர்வால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் தவிர ராஜஸ்தானை சேர்ந்த ஓம் பிரகாஷ் மாத்தூர், மத்திய பிரதேசத்தை சேர்ந்த கைலாஷ் விஜயவர்கியா, அரியானாவைச் சேர்ந்த புபேந்திர யாதவ் ஆகியோருக்கு மேலும் முக்கிய பதவி கொடுக்க அமித்ஷா ஆலோசித்து வருகிறார்.

குறிப்பாக நாடெங்கும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தலைவர்களை ஊக்குவிக்க பிரதமர் மோடியும் அமித்ஷாவும் திட்டமிட்டுள்ளனர். எனவே பா.ஜ.க. தேசிய நிர்வாக அமைப்பிலும், அமைச்சரவையிலும் அந்த பிரிவு தலைவர்களுக்கு உரிய இடம் கிடைக்கும் என்று தெரிகிறது.

பிரதமர் மோடி நேற்று 6 நாடுகள் பயணமாக வெளிநாடுக ளுக்கு புறப்பட்டு சென்றுள்ளார். அவர் திரும்பி வந்ததும் அமைச்சரவை மாற்றத்துக்கு இறுதி வடிவம் கொடுக்கப்படும் என்று கூறப்படுகிறது.

புதுமுகங்களுக்கு மத்திய அமைச்சரவையில் இடம் கிடைக்க வாய்ப்பு இருப்பதாக தெரிகிறது. அவர்கள் யார் என்பது பற்றிய விபரங்கள் ஓரிரு வாரங்களில் தெரியவரும். (இ-7)

# பிரதமர் மோடி சுற்றுப்பயணம்!

(புதுடில்லி)

ரஷ்யா, கஜகஸ்தான் உள்ளிட்ட 6 நாடுகளில் சுற்றுப்பயணம் செய்வதற்காக பிரதமர் மோடி நேற்று டில்லியில் இருந்து புறப்பட்டு சென்றார்.

பிரதமராக நரேந்திர மோடி பதவி ஏற்றதில் இருந்து அமெரிக்கா, சீனா, பிரேசில், பிரான்ஸ், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, ஜப்பான், தென்கொரியா உள்ளிட்ட உலகின் 18 நாடுகளுக்கு சுற்றுப பயணம் மேற்கொண்டுள்ளார். அப்போது, அந்த நாடுகளுடன் பல முக்கிய ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின.

இந்நிலையில் பிரதமர் மோடி, அடுத்தகட்ட பயணமாக உஸ்பெகிஸ தான், கஜகஸ்தான், துர்க்மெனிஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் ஆகிய 5 மத்திய ஆசிய நாடுகளிலும், ரஷ்யாவிலும் பயணம் மேற்கொள்கிறார்.

இதற்காக, நேற்று புறப்பட்ட உஸ்பெகிஸ்தான் நாட்டுக்கு செல்லும் பிரதமர் மோடி, இன்று அங்கு இருக்கிறார். அதன்பின், அவர் 2 நாள் பயணமாக கஜகஸ்தான் செல்கிறார். அங்கு 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் தங்கியிருப்பார்.

அதன் தொடர்ச்சியாக அங்கிருந்து ரஷ்யாவுக்கு செல்லும் பிரதமர், 9 ஆம் திகதி உபா நகரில் நடைபெற இருக்கும் பிரிக்ஸ் மற்றும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் பங்கேற்கிறார். அப்போது, பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் அவர் சந்தித்து பேசவுள்ளார்.

பின்னர், அங்கிருந்து துர்க்மெனிஸ்தான் செல்லும் மோடி, 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் அங்கு தங்கி இருப்பார். அதன்பிறகு, 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் கிர்கிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்யும் அவர் பயணத்தின் நிறைவு கட்டமாக 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் தஜிகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்ட் நகரில் மோடி, இந்திய கலாசார அறிஞர்களையும் இந்தி பயிலும் மாணவர களையும் சந்தித்து உரையாற்ற உள்ளார்.

மேலும், கஜகஸ்தானில் அவர நஷரபையேவ் பல்கலைக்கழக மாணவர்களிடையே உரையாற்றுகிறார். இந்திய - கஜகஸ்தான் திறன் மேம்பாட்டு மையத்தையும் தொடங்கி வைக்கிறார். அந்நாட்டின் முக்கிய தொழில் அதிபர்களையும் மோடி சந்தித்து பேசுகிறார். அப்போது, அவர்களை இந்தியாவில் தொழில் தொடங்வுள்ளார்.

துர்க்மெனிஸ்தானில் பாரம்பரிய மருத்துவம் மற்றும் யோகா மையத்தை மோடி தொடங்கி வைக்கிறார். கிர்கிஸ்தான் நாட்டில் இணையதள முறையில் இந்தியாவுடன் மருத்துவ சிகிச்சைகளை பரிமாறிக் கொள்ளும் ஹெல்த் இணைப்பு திட்டத்தையும் அவர் தொடங்கி வைக்கிறார். மேலும், தஜிகிஸ்தான் அதிபர் எமோமாலி ரஹ்மோனுடன் பரஸ்பர நலன் குறித்து விரிவான பேச்சுவார்த்தைகளை மோடி மேற்கொள்கிறார்.

பிரதமரின் இந்த பயணத்தின் போது, மத்திய ஆசிய நாடுகள் அனைத்திலும், ராணுவம், பயிற்சி அளித்தல், திறன்வளர்த்தல், கலாசாரம், சுற்றுலா போன்ற துறைகளில் பல முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன. (இ-7)

# சிறைக்கலவரத்தால் 26 பேர் படுகாயம்

இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலம், ஜான்பூர் மாவட்ட சிறையில் நேற்று முன்தினம் விசாரணைக் கைதி ஒருவர் சிறைக் காவலர்களால் அடித்துக் கொல்லப்பட்டார். இதையடுத்து சிறையில் ஏற்பட்ட கலவரத்தில் 6 பொலிஸார் உட்பட 26 பேர் காயமடைந்தனர்.

இதுகுறித்து ஜான்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பரத்சிங் நேற்று முன்தினம் கூறும்போது, கடந்த "சனிக்கிழமை மாலை,சிறைப் பெண் காவலர் ஒருவரை ஷ்யாம் குமார் யாதவ் என்ற விசாரணைக் கைதி மிரட்டி அச்சுறுத்தினார். இதனால் ஆத்திரமடைந்த சிறைக் காவலர்கள் ஷ்யாம் குமாரை தாக்கினர.

இதில் காயமடைந்த ஷ்யாம் குமார் பின்னர் வைத்தியசாலையில் உயிரிழந்தார். இது பற்றி அறிந்த சக கைதிகள், சிறைக் காவலர்களை கல்வீசித்தாகினர். இதையடுத்து பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் தடியடி நடத்தியும், கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்த சம்பவத்தில் 6 பொலிஸார உட்பட 26 பேர் காயம் அடைந்தனர். [illegible] எனத் தெரிவித்தார். (இ-7)

# ஜெயலலிதாவின் விடுதலையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் திமுக மேல்முறையீடு

(புதுடில்லி)

சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து கர்நாடக உயர் நீதிமன் றததால் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா உட்பட 4 பேர் விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் திமுக மேல்முறையீடு செய்துள்ளது.

கர்நாடக உயர் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து திமுக பொதுச் செயலாளர் க.அன்பழகன் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்டத்தரணி வி.ஜி.பிரகாசம், உச்ச நீதிமன்ற பதிவாளரிடம் மனுவை நேரில் அளித்தார்.

லெக்ஸ் பிராபர்டீஸ் உள்ளிட்ட 7 பினாமி நிறுவனங்கள் விடுவிக்கப்பட்டதை எதிர்த்தும், திமுக மற்றொரு மனு தாக்கல் செய்துள்ளது.

ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் மீது தொடரப்பட்ட வருமானத்துக்கு அதிகமாக 66.55 கோடி ரூபா சொத்து சேர்த்த வழக்கில், பெங்களூர் சிறப்பு நீதிமன்றம், நால்வருக்கும் தலா 4 ஆண்டு சிறை தண்டனையும், ஜெயலலிதாவுக்கு 100 கோடி ரூபா அபராதமும் விதித்தது.

ஜெயலலிதா உள்ளிட்ட நால்வரும் இந்த தீர்ப்பை எதிர்த்து கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். வழக்கை விசாரித்த நீதிபதி சி.ஆர். குமாரசாமி, நால்வரையும் நிரபராதிகள் எனக் கூறி விடுதலை செய்தார். இந்தத் தீர்ப்பில் பல்வேறு அடிப்படை தவறுகளும், கணிதப் பிழை உள்ளிட்ட குளறுபடிகளும் இருப்பதாக புகார்கள் எழுந்தன. இதனையடுத்து கடந்த 23ஆம் திகதி (ஜூன் 23) உச்ச நீதிமன்ற த்தில் கர்நாடக அரசு மனு தாக்கல் செய்தது.

இந்நிலையில், சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து கர்நாடக உயர் நீதிமன்றத்தால் ஜெயலலிதா உடபட 4 பேர்விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் திமுக மேல்முறையீடு செய்துள்ளது.

திமுக சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் கர்நாடக உயர் நீதிமன்ற தீர்ப்பில் இருந்த கணிதப் பிழைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

அதாவது, ஜெயலலிதா தரப்பினர் பெற்ற கடன் 24,17,31,274 ரூபாய் என்று நீதிபதி குமாரசாமி தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால் அவரே பட்டியலிட்ட பத்து கடன்தொகையை கூட்டினால், அதன் கூட்டுத் தொகை 10,67,31, 274 ரூபாய்தான் வரும். இதன்படி ஜெயலலிதா வருமானத்துக்கு அதிகமாக சேர்த்த சொத்தின் மதிப்பு 76.7வீதம் வரும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-7)

## பாரதச் செய்தி

# வெளிநாட்டுச் சொத்துக்குவிப்பு தகவல்களை இணையத்தளத்தில் தாக்கல் செய்ய அனுமதி

(டில்லி)

கறுப்பு பணத்தை ஒழிக்க மத்திய அரசு 'வெளியிடப்படாத வெளிநாட்டு வருமானம், சொத்துகள் (புதிய வரி விதிப்பு) சட்டம் 2015 கொண்டு வந்துள்ளது. இது கடந்த முதலாம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளது. இதன்படி, வெளிநாட்டு வருமானம், சொத்துகள் குறித்து தகவல் தெரிவிக்காமல் வரி ஏய்ப்பு செய்ய முயற்சித்தால், 3 ஆண்டுகளில் இருந்து 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும்.

தண்டனையில் இருந்து தப்பிக்க, வெளிநாட்டில் சொத்து குவித்திருப்பவர்கள் அதுபற்றிய தகவல்களை செப்டெம்பர் 30ஆம் திகதிக்குள் வருமான வரித்துறையிடம் தெரிவிக்க ஒரு வாய்ப்பு தரப்பட்டுள்ளது.

இந்த தகவல்களை இப்போது வருமான வரித்துறையிடம், தனிநபர்களும், நிறுவனங்களும் இணையத்தளம் மூலமாக அளிக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அதில் டிஜிட்டல் கையெழுத்திட்டு அனுப்ப வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்படி ஒரு வாய்ப்பு தரப்பட்டிருப்பது குறித்து வருவாய்த்துறை செயலாளர் சக்திகாந்ததாஸ் கருத்து தெரிவிக்கையில்,

இந்த இணக்கமான வாய்ப்பு தரப்பட்டுள்ளதன் நோக்கம், வருவாய் திரட்டுவது அல்ல. வெளிநாட்டில் சொத்து குவித்திருப்பவர்கள் அது குறித்து அறிவிப்பதற்கான கடைசி வாய்ப்பாக இதை பயன்படுத்திக் கொணடு, வெளியே வர வேண்டும் என்பது தான் நோக்கம் என தெரிவித்தார். (இ-7)

# விசாரணை வேண்டும்

வியாபம் ஊழல் குறித்த பல சந்தேகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க, நேர்மையான விசாரணை நடத்தப்பட வேண்டும்" என்று மத்திய அமைச்சர் அருண் ஜேட்லி தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேச மாநிலத்தில் தொழில்முறை தேர்வுகளில் நடந்த ஊழல் குறித்து, உயர் நீதிமன்ற உத்தரவன்படி சிறப்புக் குழு விசாரணை நடத்தி வருகிறது.

இதில் தொடர்புடைய மாணவி நம்ருதா தாமோர்-கடந்த 2012ஆம் ஆண்டு மர்மமான முறையில் இறந்தார். அவருடைய பெற்றோரிடம் 2 நாட்களுக்கு முன் னர் டில்லி தனியார் தொலைக்காட்சி செய்தியாளர் அக்ஷய் சிங் என்பவர் பேட்டி எடுத்தார்.

அதன்பிறகு, அக்ஷய் சிங்கும் மர்மமமான முறையில் இறந்தார். இதனால் பல சந்தேகங்கள் எழுந்துள்ளன.

இதுகுறித்து மத்திய அமைச்சர் அருண் ஜேட்லி நேற்று முன்தினம் டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட செய்தியில், "வியாபம் ஊழல் தொடர்பாக பல சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன. அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க நேர்மையான விசாரணை நடத்தப்பட வேண்டும். நிருபர் அக்ஷய் சிங்கின் மரணத்தில் பல சந்தேகங்கள் எழுந்துள்ளன. நேர்மையான விசாரணை நடத்துவதுதான் சந்தேகங்களுக்கு பதில் அளிப்பதாக இருக்கும்.

38 வயதில் நிருபர் அக்ஷய் சிங் அகால மரணம் அடைந்தது சோகமானது. அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறியுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் மின்சார நிலைய

# கழிவு எண்ணெய் கலந்ததால்

# நிலத்தடிநீர் மாசடையவில்லை

## புதுக்கதையை அவிழ்த்து விட்டார் மின்சக்தி அமைச்சர் சம்பிக்க

(யாழ்ப்பாணம்)

**யாழ். சுன்னாகம் நிலத்தடி நீர் சுன்னாகம் மின்சார நிலைய கழிவு எண்ணெய் கலந்ததால் மாசடையவில்லை. விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் கிருமிநாசினி கலப்பினாலேயே நிலத்தடி நீர் மாசடைந்துள்ளது என ஆய்வு அறிக்கை தெரிவிக்கின்றது. அதனால் இந்த நிலத்தடி நீர் மாசுக்கு நாம் காரணமில்லை என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

இலங்கை மின்சார சபையின் வடமாகாண பிரதி பொது முகாமையாளர் அலுவலக கட்டட தொகுதியினை நேற்றைய தினம் திறந்துவைத்த அமைச்சர், அங்கு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,

சுன்னாகம் நிலத்தடி நீர் மாசடைந்தமை தொடர்பான ஆய்வுகள் இடம்பெறுகின்றன. 2010ஆம் ஆண்டில், சுன்னாகம் பகுதிக்கு சென்று விவசாயிகளுடன் கலந்துரையாடினோம்.

அதன்போது அவர்கள் அங்கு கிருமிநாசினி பாவனை இல்லை என்று தெரிவித்திருந்தனர். ஆயினும், கிருமி நாசினியால் தான் நீர் மாசடை ந்துள்ளது என்று ஆய்வு அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தொழில்நுட்ப அறிக்கை வந்த பின், இதில் எமது தவறு இருக்குமிடத்து அதற்கான நட்டஈட்டினை நாம் வழங்குவோம். மேலும் 24 மணிநேர சேவையில் தற்போது 90 வீதமான இடங்களிலேயே உள்ளது. இதை இவ்வருட இறுதியில் 100 வீதமாக மாற்றுவோம்.

இதனை விட குறைந்த வருமானம் உடையவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் உள்ளது.

அதனை தற்போது புனரவாழ்வு அமைச்சிடம் கையளித்துள்ளோம். அதுவும் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும். இனி மேல் மின்சார சபையின் சகல வசதிகளுக்கும் திறைசேரி வரி பெறப்படமாட்டாது.

அதனை நாமே ஈடுசெய்வோம். தற்போது வடக்கு, கிழக்கில் மின்சாரம் சார்ந்த அபிவிருத்திகள் நிறைய செய்ய வேண்டியுள்ளன. அதற்கான நிதி கிடைக்கப்பெற்றதும் விரைவில் இதன் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆசியாவில் 24 மணிநேர மின் வழங்கும் நாடாக இலங்கை உள்ளது. இலங்கைக்கு சிறந்த எதிர்காலமும் நல்ல வளமும் உள்ளது. இதனை நாம் முறையாக பயன்படுத்தி நாம் முன்னேற வேண்டும்.

சண்டை சச்சரவுகள் கொண்ட கடந்தகால இரத்த கசிவுகளை நோக்கி சென்றால் இவை அனைத்தையும் நாம் இழக்க வேண்டி வரும். அதை நோக்கி செல்லாதீர்கள்.

முன்பு, பெருமளவிலான பொறியியலாளர்களை கொண்டிருந்த யாழ்ப்பாணம் தற்போது பொறியியலாளர்களை தேடவேண்டி உள்ளது.

வடக்கு கிழக்கில் பொறியியல் பீடம் ஒன்றை நிறுவும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. எனவே, தயவு செய்து பொறியியல் மாணவர்கள் வெளிநாடு செல்லாது நம் நாட்டிற்கே பணிபுரியுங்கள்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## செல்ஃபி




உங்கள் செல்ஃபிகளை photosofvalampurii@gmail.com என்னும் முகவரிக்கு உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பிவையுங்கள். சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு

உங்கள் செல்பிக்கள் ஏதும் பொருள் கூறுவதாயோ அல்லது வித்தியாசமான பின்புலத்திலோ இருக்குமாறு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சாட்சியைக் கொல்லக்கூடாது. அது நமது நியாய அறிவின் நாடித் துடிப்பாகும்.
- சாமுவேல் கால்ரிட்ஜ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வதைபட்ட தமிழர் ஆத்மா சுட்டெரிக்கிறது பார் அங்கே!

தென் பகுதியின் தேர்தல்களம் எப்படி அமையும் என்பது பற்றிய பார்வை தமிழர்களிடம் அதிகமாகச் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுத் தேர்தலில் போட்டியிடுவேன் என்று அறிவித்தன் பின்னர் தென்பகுதி மீதான பார்வை எங்களிடம் முக்கியத்துவம் பெற்றது என்று கூறலாம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அனுமதியுடன் தேர்தலில் போட்டியிடப்போவதாக மகிந்த தரப்பு போட்ட போலி வேடம் கலைந்து போயிற்று.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதி வழங்கினாலும் மகிந்த ராஜபக்ஷ போட்டியிடுவதை பௌத்த தேரர்கள் மற்றும் அரசியல்வாதிகள், தொழிற்சங்கங்கள், பொது மக்கள் கடுமையாக எதிர்க்கின்றன என்பது தெளிவாகியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் மகிந்த ராஜபக்ஷ போட்டியிடுவதற்கு கட்சியின் செயலாளர் சுசில் பிரேமஜயந்த ஒப்புமிட்டுள்ளார் என்றும் ஜனாதிபதி மைத்திரியும் அதற்கு அனுமதி வழங்கியுள்ளதாகவும் மகிந்த தரப்பு ஒரு பெரும் பிரசாரத்தை செய்தது. எனினும் இப் பிரசாரம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகவும் அமைதியாக இருந்தார்.

ஜனாதிபதியின் மௌனம் எதற்கானது என்று புரியாமல் இருந்தபோது, மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடுவதற்கு பௌத்த பிக்குகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அதிலும் குறிப்பாக சோபித தேரர் கடுமையாக விமர்சிக்க, அவருடன் சேர்ந்து பௌத்த பிக்குகள் தமது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதேவேளை, தென்பகுதி தொழிற்சங்கங்களும் மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடுவதை கடுமையாக கண்டித்ததுடன், முக்கிய அரசியல் தலைவர்கள் மகிந்தவையும் அவரோடு சேர்ந்து இருப்பவர்களையும் மிக மோசமாக விமர்சித்தனர்.

இந்த நாட்டில் விடுதலைப்புலிகளைத் தோற்கடித்து பயங்கரவாதத்தை ஒழித்த ஒரு ஜனாதிபதி, பொதுத் தேர்தலில் –சாதாரண பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெறுவதற்குக் கூட முடியாமல் தவிக்கிறார் என்பதை நினைத்த போது,

கடவுள் பற்றிய சிந்தனை எழுந்தது.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்

என்ற வள்ளுவன் கூறிய குறள் நிதர்சனம் பற்றி உரைக்கிறது.

ஓ! எமதருமை தமிழ் உறவுகளே! உங்கள் உயிர் வதைபட்டபோது இந்த உலகம் ஊமையாக இருந்தது.

உங்கள் உயிர் வதையில் வெற்றித் திருவிழா கொண்டாடிய பெருமகன் இப்போது பொதுத் தேர்தலில் வேட்பாளராக நிற்க கட்சி இன்றி அலைகிறார்.

அந்தோ புதுமாத்தளனில், முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளே! உங்கள் புனித ஆத்மாக்கள் பலமானவை.

ஜனாதிபதி மைத்திரியின் மௌனத்தில் மகிந்தவுக்கு தென்பகுதியில் எதிர்ப்பு வலுக்கிறது..

புலியை வென்ற மகிந்தவை ஆட்சியில் அமர்த்துங்கள் என்று எவரும் கேட்பதாகத் தெரியவில்லை. அட இதைத்தான் ஊழ்வினைப் பயன் என்று உரைப்பரோ!பொறுத்திருந்து பார்ப்போம்.

தமிழரின் அழு கண்ணீர் பெரும் படையாய் எழுந்து அழிப்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# முன்னாள் போராளிக்கு வாய்ப்புக் கோரி மகஜர்

(திருகோணமலை)

தேர்தலில் போட்டியிட விண்ணப்பித்துள்ள விடுதலை புலிகளின் முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆத்மலிங்கம் ரவீந்திராவுக்கு (ரூபன்) இட மளிக்குமாறு வலியுறுத்தி திருகோணமலை மாவட்ட மக்கள் கையெழுத்துக்களைச் சேகரித்து இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைமையிடம் கையளித்துள்ளனர்.

கடந்த 25 வருட காலமாக பொது மக்களுக்குச் சேவையாற்றிய ரூபன் என்றழைக்கப்படும் ஆத்மலிங்கம் ரவீந்திராவை இம்முறை வேட்பாளர் பட்டியலில் தமிழரசுக் கட்சி கட்டாயமாக உள்வாங்குவதன் வாயிலாக மாவட்டத்தில் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களை வெற்றியீட்டிக் கொள்வதற்காக அர்ப்பணித்துப் பணியாற்றுவோம் என உத்தரவாதமளித்தே இவ் கையெப்பங்களை மக்கள் இட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறுகிய நேர இடைவெளியில் திருகோணமலை மாவட்டத்தின் புத்திஜீவிகள், செயற்பாட்டாளர்கள், மாவீரர்களின் குடும்பங்கள், முன்னாள் போராளிகள் மற்றும் பொது அமைப்புக்களால் கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு பிரதிநிதிகள் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வகையில் சேகரிக்கப்பட்ட ஆயிரம் வரையான கையெழுத்துக்களின் மூலப்பிரதி, நேற்று திங்கட்கிழமை காலை தமிழரசுக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் தலைவர் மாவை சேனாதிராஜாவிடம் கையளிக்கப்பட்டது. இதனைப் பெற்றுக் கொண்ட தமிழரசுக்கட்சித்தலைவர்மாவை சேனாதிராஜா, வேட்பாளர் நியமனம் குறித்து தாம் தொடர்ச்சியாக ஆராய்ந்து வருவதாகவும் மக்களால் கையளிக்கப்பட்ட இக் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் தெரிவித்தார். (ஏ-11)

# தேர்தலுக்குரிய ஏற்பாடுகள் யாழில் சுமுகமான முறையில்

## அரச அதிபர் தகவல்

பொதுத்தேர்தலுக்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் சுமுகமான முறையில் நடைபெற்றுக்கொண்டிருப்பதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவர்கள் எதிர்வரும் 13ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்குரிய சகல ஏற்பாடுகளும் மாவட்டச் செயலகத்தில் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் முதலாவது வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வேட்பு மனுத்தாக்கல் செய்யப்படும் நாட்களில் மாவட்டச் செயலகத்திற்கு உள்ளேயும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

அத்துடன் இம்முறையும் யாழ். மத்திய கல்லூரியில் வாக்கு எண்ணும் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

தேர்தல் நேரத்தில் பாடசாலை மாண வர்களின் பரீட்சையில் பாதிப்பு ஏற்படா மலிருக்க முன்கூட்டியே பாடசாலை அதிபர்களுடனும் தேர்தல் அதிகாரிக ளூடனும் அலுவலர்களுடனும் பேசி அதற்குரிய மாற்று ஏற்பாடுகளை செய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ளேன்.

அதாவது பரீட்சை நடைபெறும் நேரம் தவிர்ந்த நேரங்களில் தேர்தலுக்குரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு கூறியுள்ளேன்.

அதனடிப்படையில் உரிய அதிகாரிகள் தாம் மாணவர்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு ஏற்பாடுகளை மேற்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில் எந்தவிதமான பாதிப்புக்களும் இன்றி தேர்தல் தொடர்பான ஏற்பாடுகள் நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீராவியடி கடையிற் சுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் இடம்பெற வுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 19 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு 108 சங்காபிஷேக நிகழ்வும் மாலை 3 மணிக்குத் திருக்கல்யாண வைபவமும் நடைபெறும். (ஏ-1)

## ஹெரோயின் விற்பனை; பெண் விளக்கமறியலில்

(கரணவாய்)

பருத்தித்துறைப் பகுதியில் ஹெரோயின் விற்பனை செய்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட பெண்ணை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி நேற்று உத்தரவிட்டுள்ளார்.

பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் 285 கிராம் ஹெரோயினை வீட்டில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவரது கணவர் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டபோது பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பியோடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3-60)

# மகிந்தவுக்கு எதிரான கட்சியில் கூட்டுச் சேர ரணதுங்க பேச்சு!

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து விலகி, வேறு கட்சியின் சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் அமைச்சர் அர்ஜன ரணதுங்க பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் வேட்புமனு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டதை அடுத்தே, அவர் இந்த முடிவை எடுத்துள்ளார்.

தேர்தலில் சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் மகிந்த ராஜபக்ச போட்டியிடுவது தொடர்பில் அர்ஜன ரணதுங்க எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியிலோ அல்லது மகிந்த ராஜபக்சவுக்கு எதி ரான வேறு கூட்டணியிலோ போட்டி யிடுவது தொடர்பில் அர்ஜுன ரண துங்க பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## சைவமகா சபையின் விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவ மகா சபையின் சைவ அமைப்புகளுக்கான விசேட கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு கல்லூரி வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள சைவ மகா சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவ சமயத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் அமைப்புகளையும் சைவத் தமிழ் ஆர்வலர்களையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு சைவ மகா சபையின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஏ-1)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



எப்போதும் இறைவன் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக! உலகமாகிய இந்தப்பெரிய பித்தலாட்டத்திலிருந்து அவர் விரைவில் உங்களை வெளியே அழைத்துச் செல்லட்டும்! உலகமாகிய இந்த சூனியக் கிழவியால் நீங்கள் ஒருபோதும் மயக்கப்படாமல் இருப்பீர்களாக! சிவபெருமான் உங்களுக்கு உதவுவாராக! உண்மையின் வாசலை உமாதேவி உங்களுக்குத் திறந்து, உங்கள் மயக்கங்கள் அனைத்தையும் போக்குவாளாக!

மறையும் நிழல்கள் நிறைந்த பிரபஞ்சத்தில் ஒரே மெய்ப்பொருளான இறைவனை நாடிச் செல்கின்ற ஒவ்வொருவருக்கும் நம்பிக்கையின் சின்னமாக நாடு விளங்குகிறது.

சகோதரா! பயணம் நீண்டது. காலமோ குறுகியது. அந்திப்பொழுது நெருங்கிக்கொண்டிருக்கிறது. நான் விரைவில் வீடு போய்ச் சேரவேண்டும். என் பழக்கவழக்கங்களுக்கெல்லாம் மெருகு கொடுத்துக் கொண்டிருக்க நேரமில்லை. எனது செய்தியை அளிப்பதற்கே எனக்கு நேரம் கிடைக்கவில்லை.


இந்துக்கள் தங்கள் பழங்காலத்தைப் பற்றி அறிகின்ற அளவிற்கு அவர்களின் எதிர்காலம் பிரகாசிக்கும். கடந்த காலத்தை ஒவ்வொருவரின் கவனத்திற்கும் கொண்டுவருபவர் இந்த நாட்டிற்குச் சிறந்த நன்மை செய்பவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலை சரஸ்வதி ச.ச. நிலைய கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

## அநுராதபுரம் இராணுவ அணி சம்பியன்







ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி கிண்ணம் வென்றது அநுராதபுரம் இராணுவ அணி.

அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தின் 96ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட வவுனியா, மன்னார் அணிகளும் யாழ். மாவட்டத்திலிருந்து 5 அணிகளும் பங்கு பற்றிய லீக் முறையிலான கரப்பந்தாட்ட போட்டியின் இறுதிப்போட்டி நேற்று இரவு நடைபெற்றது. இறுதிப் போட்டி அநுராதபுர இராணுவ அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தினர் மோதினர்.

இதில் 3:1 என்ற செற்கணக்கில் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க. வீழ்த்தி கிண்ணம் வென்றது அநுராதபுரம் இராணுவம் அணி. (க)

# பெண்கள் உலகக் கோப்பை காற்பந்து; 3வது முறையாக அமெரிக்கா சம்பியன்



பெண்கள் உலகக்கோப்பை இறுதிப்போட்டியில் ஜப்பானை வீழ்த்தி அமெரிக்க அணி சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது.

பெண்கள் உலகக்கோப்பை காற்பந்து போட்டி கனடாவில் நடைபெற்று வந்தது. இதற்கான இறுதிப்போட்டி இந்திய நேரப்படி நேற்று அதிகாலை நடைபெற்றது. இதில் அமெரிக்கா- ஜப்பான் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

ஆட்டம் தொடங்கியது முதலே அமெரிக்க வீராங்கனைகள் ஆதிக்கம் செலுத்தினார்கள்.

அவர்களுக்கு ஜப்பான் வீராங்கனைகளால் ஈடுகொடுக்க முடியவில்லை.

அமெரிக்க வீராங்கனை லாய்ட் ஆட்டம் தொடங்கிய 3ஆவது நிமிடத்தில் முதல் கோலை அடித்தார். அடுத்த 2ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோல் அடித்தார்.

அதன்பின் 14ஆவது நிமிடத்தில் ஹோலிடே ஒரு கோல் அடிக்க 16ஆவது நிமிடத்தில் லாய்ட் மேலும் ஒரு கோல் அடித்தார்.

இதற்கு பதில் கோலாக 27ஆவது நிமிடத்தில் ஜப்பான் வீராங்கனை ஓஹிமி ஒரு கோல் அடித்தார். இதனால் முதல் பாதி நேரத்தில் அமெரிக்கா 4-1 என முன்னிலை பெற்றது.

பின்னர் இரண்டாவது பாதி நேரத்தில் 52ஆவது நிமிடத்தில் அமெரிக்க வீராங்கனை ஜான்ஸ்டன் ஜப்பானுக்கு சேம்சைடு கோல் போட்டார்.

54ஆவது நிமிடத்தில் அமெரிக்கா வீராங்கனை ஹீத் ஒரு கோலும் அடித்தார். அதன்பின் இரு அணி வீராங்கனைகளும் கோல் ஏதும் அடிக்காததால் அமெரிக்கா 5-2 என்ற கணக்கில் ஜப்பானை வீழ்த்தி 3ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது. (க)



## மெய்வல்லுநர் வி.விழா

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் பிரதேச செயலக பிரிவுகளுக்கிடையில் நடத்தப்படும் வருடாந்த மெய்வல்லுநர் விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முழங்காவில் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வட மாகாண விளையாட்டுத்திணைக்களப் பணிப்பாளர் எஸ்.எம். ராஜா ரணசிங்க கலந்து கொள்ளவுள்ளார். (க-254)


## மாவட்ட ரீதியிலான மென்பந்து



இணுவில் கலை ஒளி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட மட்டத்தில் நடத்தும் மென்பந்து சுற்றுத்தொடரில் முதற்கட்டமாக வடமராட்சி கழகங்களுக்கிடையிலான போட்டியில் ஞானம்ஸ் வி.க. மற்றும் பருத்தித்துறை இளைஞர் வி.க. அணிகள் 3ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றன. (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மத்தியூஸ், யூனிஸ்கான், ஷான் மசூத் சதம் வலுவான நிலையில் பாகிஸ்தான் அணி



யூனிஸ்கான், ஷான் மசூத்தின் அபாரமான சதம் மூலம் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி


வலுவான நிலையில் உள்ளது.

இலங்கை- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 3-வது மற்றும் கடைசி டெஸ்ட் பல்லேகலவில் நடைபெற்று வருகிறது.

முதல் இன்னிங்சில் இலங்கை அணி 278 ஓட்டங்களிலும், பாகிஸ்தான் 215 ஓட்டங்களிலும் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. 63 ஓட்டங்கள் முன்னிலையுடன் இலங்கை அணி 2-வது இன்னிங்சை தொடங்கியது. அணியின் தலைவர் மத்யூசின் சிறப்பான சதத்தால் இலங்கை அணி 313 ஓட்டங்கள் குவித்து. இதனால் பாகிஸ்தான் வெற்றிக்கு 377 ஓட்டங்கள் நிர்ணயித்துள்ளது.

377 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் அணி 2-வது இன்னிங்சை தொடங்கியது. தொடக்க வீரர் அஹ்மது ஷேசாத் ஓட்டமேதும் எடுக்காமலும், அசார் அலி 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இந்த 2 விக்கெட்டையும் வேகப் பந்து வீச்சாளர் பிரசாத் கைப்பற்றினார்.

3-வது விக்கெட்டுக்கு ஷான் மசூத் உடன் மூத்த வீரர் யூனிஸ்கான் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடியின் பொறுப்பான ஆட்டத்தால் பாகிஸ்தான் அணியின் ஓட்ட எண்ணிக்கை மின்னல் வேகத்தில் உயர்ந்



தது. இருவரும் சதம் அடித்து ரசிகர்களை உற்சாகப்படுத்தினர். இதனால், நேற்றைய ஆட்டநேர முடிவில் பாகிஸ்தான் அணி, 2 விக்கெட் இழப்பிற்கு 230 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்தது.

பாகிஸ்தான் அணி வெற்றி பெற இன்னும் 147 ஓட்டங்களே தேவை என்ற நிலையில் இன்று நடைபெறும் கடைசி நாள் ஆட்டத்தில் இந்த இலக்கை எளிதில் எட்டிவிடும் என எதிர்பார்க்கலாம். பாகிஸ்தான் அணியிடம் கைவசம் 2 விக்கெட்டுகள் உள்ள நிலையில், இன்றைய ஆட்டத்தில் இலங்கையின் பந்துவீச்சைப்பொறுத்து ஆட்டத்தின் திசை மாறலாம்.

இரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்டில் பாகிஸ்தானும், 2-வது டெஸ்டில் இலங்கை அணியில் வெற்றி பெற்றுள்ளது. இந்த டெஸ்டில் வெற்றி பெறும் அணி தொடரை 2-1 என கைப்பற்றும்.



பண்டத்தரிப்பில் நேற்று பிற்பகல் பாரவூர்தி ஒன்று குடை சாய்ந்ததில் சாரதி உட்பட இருவர் காயமடைந்தனர். குடை சாய்ந்த பாரவூர்தியை படத்தில் காணலாம்.

# ஆஸி செல்ல முயன்றவருக்கு கடும் நிபந்தனையுடன் பிணை

(யாழ்ப்பாணம்)

சட்டத்திற்கு முரணான வகையில் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முயற்சி செய்தபோது கைது செய்யப்பட்டு பருத்தித் துறை நீதிமன்றத்தின் உத்தரவில் விளக்க மறியலில் இருந்து வருபவருக்கு யாழ்ப் பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ் செழியன் கடும் நிபந்தனையுடன் பிணை யில் செல்ல அனுமதி வழங்கியுள்ளார்.

அவுஸ்திரேலியாவிற்குக் களவாக படகில் பயணம் மேற்கொள்ள முயன்றபோது, குடிவரவு குடியகல்வு சட்டத்தின் 45 சி என்ற பிரிவின் கீழ் குற்றம் சாட்டி, வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நபர் ஒருவர் பருத்தித்துறை நீதிமன்றத்தினால் கடந்த மூன்றரை மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் இவர் தொடர்பான பிணை மனுவை தாக்கல் செய்த சட்டத்தரணி, குற்றஞ்சாட்டப்பட்டவரின் குடும்பத்தின் தன்மை மற்றும் அந்தக் குடும்பத்தில் நிலவுகின்ற வறுமை நிலைமை என்பவற்றைச் சுட்டிக்காட்டி, அவருக்கு பிணை வழங்குமாறு நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்திருந்தார்.

இந்த மனுவையும் பிணை விண்ணப்பத்தையும் பரிசீலனை செய்த நீதிபதி இளஞ்செழியன், இத்தகைய குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்கு, விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மாத்திரமே, பிணை வழங்கலாம் என குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் 47 ஆம் பிரிவு பரிந்துரை செய்திருப்பதை எடுத்துக்காட்டி, குற்றஞ்சாட்டப்பட்டவரின் குடும்ப நிலைமையைக் கருத்திற்கொண்டு, தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட் பிணையில் செல்ல அனுமதித்துள்ளார்.

ஆயினும் பிணைக்காக கையெழுத்திடுகின்ற இருவரும், பருத் தித்துறை நீதிமன்றத்தின் நீதிபதியினால் ஏற்றுக்கொள்ளப் படுபவர்களாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையில் இந்தப் பிணை உத்தரவை நீதிபதி வழங்கியுள்ளார்.

மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடையில் பருத்தித்துறை நீதிமன்றத்தில் சென்று எதிரி கையெழுத்திட வேண்டும் என்றும் நீதிபதி தமது பிணை அனுமதியில் நிபந்தனை விதித்து உத்தர விட்டுள்ளார். (எ-4)


# கண்ணீர் அஞ்சலி



அமரர்

**S.P நடராஜா**

அவர்களே!
25 வருடங்களுக்கு முன்னர் திரு.N.ஈஸ்வரராஜா மற்றும் காலஞ்சென்ற யோகு கோபால கிருஸ்ணன் மூலமாக அறிமுக மான நாள் தொடக்கம் மாத மாதம் வந்து சந்திப்பீர்கள்.
மூன்று நான்கு சொற்களில் கொடுப்புக்குள் சிரித்தவாறு புன்னகைத்தவாறு முழு விட யங்களையும் கூறிவிடுவீர்கள்.
உங்கள் ஆத்மா சாந்திய டைய எல்லாம் வல்ல இறை வனை பிரார்த்திக்கிறேன்.

திரு. சண்முகம் சுதாகர்
ASHA PHILLIP SECURITIES LTD
COLOMBO 3 (1046)


# அனந்திக்கு அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வடமாகாண சபை உறுப் பினர் அனந்தி சசிதரனுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடமளிக்க மறுத்துள்ளது.

இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பைத் தருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் ஏற் கெனவே தான் கோரியிருப்பதாகவும் அனந்தி சசிதரன் தெரிவித்திருந்தார்.

எனினும், அது தொடர்பில் இன்னும் தனக்கு முடிவு எதனையும் சம்பந்தன் தெரிவிக்கவில்லை என்று கூறிய அவர், தனக்கு வேட்பாளர் பட்டியலில் இடம் வழங்கப்படமாட்டாது என்று தமிழரசுக் கட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

தன்னை தேர்தலில் போட்டியிடுமாறு தனது ஆதரவாளரகள் கோரி வருவதாகவும், தமிழரசுக் கட்சியில் இல்லாவிட்டாலும், வேறு கட்சியின் ஊடாகவாவது தேர்தலில் போட்டியிடுமாறு அவர்கள் வலியுறுத்துவதாகவும் தெரிவித்த அவர், இது குறித்து தான் இன்னும் முடிவு எதனையும் எடுக்கவில்லை என்றும் கூறினார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸார்...

தலைமையில் சென்ற குழுவினர் குறிப்பிட்ட ஒரு வீட்டை சுற்றி வளைத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

இதன்போது அந்த வீட்டில் இருந்து 3 கிலோ 375 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டவர் எனக் கருதப்படும் சந்தேக நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். (எ-11)


**சிறுநீரகம் தேவை**

25 வயது இளம் யுவதிக்கு
O+ அல்லது B+ சிறுநீரகம்
அவசரமாகத் தேவை.
கொடையாளிகள் தொடர்பு கொள்ளவும் 0774455899
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)
(C-1498)

**கொத்து மாஸ்டர் தேவை**

கொத்து றொட்டி போடத்
தெரிந்த கொத்து மாஸ்டர் தேவை.
மற்றும்
கடையில் வேலை செய்ய
ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 077 456 3959
(C-1493)

15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட கொழும்பு சட்ட வல்லுநர்கள் ஊடாக...
எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்...
SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions
STUDENT VISA – SPOUSE VISA – DEPENDANT VISA
WORK VISA - SKILLED MIGRATION - VISIT VISA
கனடா Express Entry Visa தொழில்வாய்ப்புடன் குடியுரிமை(PR) Degree/Diplomaவுடன்குறைந்தது ஒரு வருடதொழில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்
Student VISA UK, Australia, Spain New Zealand, Switzerland, Canada & Malaysia
ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள www.sikaram.lk
Sikaram (Pvt) Ltd.
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.(வைத்தியசாலை பின்புறம்)
Call: 0777 32 4004
021 222 00 11
(C-1499)

**பதவி வெற்றிடம்**

யாழ்.நகரில் இயங்கிவரும் கீழ்க்காணும் மொத்த
விற்பனை நிலையத்துக்கு வாகனத்தில் பொருட்களை
கொண்டு சென்று விநியோகம் செய்வதற்கு
பணியாளர்கள் தேவை
விரும்புபவர்கள் எதிர்வரும் 11.07.2015க்கு முன்பாக கிடைக்கக்
கூடியவாறு தங்களது சுயவிபரக்கோவையை கீழ்க்காணும்
முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
சுப்ப ஞூஸ் 154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(1058)

மாபெரும் கருத்தரங்கு பொருளியல்
சிரேஸ்ட ஆசான்
பொருளியல் உதயன்
★ ஜூலை 8, 9, 10, 13 ஆகிய தினங்களில் 8.00 – 12.00 மணி வரை நடைபெறும்
★ வெளிமாணவர்களும் பங்குபற்றலாம்.
★ அனைத்து மாணவர்களுக்கும் கையேடுகள் வழங்கப்படும்.
★ நகரின் மத்தியில் இங்கு மட்டுமே ஆசிரியரின் கருத்தரங்கு நடைபெறும்.
ECONOMICS HALL
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
தொடர்பு :- 0776624387
(1061)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை'' பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி



➢ பிரெஞ்சு கற்பதற்கு இலங்கையில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. உலகம் முழுவதும் 1040 கிளைகள் (யாழில் 1976 முதல்).
➢ ஆசிரியர்கள் : யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்).
➢ இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS ஐ வழங்குகின்றது. AF மாணவர்களுக்கு DELF பரீட்சை கட்டணம் 3850/- ஏனையோருக்கு 9900/- எங்கு படித்தாலும் இலங்கையில் AFஇல் மட்டுமே DELF பரீட்சை எழுதலாம்
➢ Audio-Vidio மூலமான கற்பித்தல்கள். Audio CDs, ஆயிரக்கணக்கான நூல்களை இலவசமாக பாவிக்கலாம்.
➢ பிரெஞ்சு மொழிபெயர்புகள். எந்த வயதினரும் படிக்கலாம்
➢ யாழ். வன்னி, மன்னார், தீவகத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல்படித்தே FRANCE, CANADA, SWITZERLAND, BELGIUM... செல்கிறார்கள்.
இவ்அனைத்து நன்மைகளும் AF இல் மட்டுமே
ஆரம்பம் விரைவில்... உடன் அழைத்து பதியுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி. யாழ்ப்பாணம். (1059)


## யார் தேர்தலில் போட்டி...

அனைத்து அரசவளாங்களையும்பயன்படுத்திதான் தேர்தலில் போட்டியிட்டார்.

ஆனால் அவரால் வெற்றி பெறமுடியவில்லை இதுமட்டு மல்லாது இலங்கை சாத்திரிகள் மட்டு மல்லாது இந்திய சாத்திரிகளின் ஆலோசனையில் நல்ல நேரம், காலம் போன்றவற்றை தெரிவு செய்தே தேர்தல் திகதி கூட தீர்மானித்தும் அவரால் வெற்றி பெற முடியவல்லை. அத்தோடு நல்ல கிரகம் நல்ல காலம் இருநத போது வெல்லமுடியாத மகிந்த இனி எவ்வாறு வெல்லப்போகிறார்என்று மக்கள் தீர்மானித்து கொள்ளட்டும் மகிந்தவுடன் தற்போது உள்ளவர்கள் எல்லாம் மக்களால் தூக்கி வீசப்பட்ட மக் களால் ஒதுக்கப்பட்டவர்களுமே.

மேலும் கஞ்சா குடும்ப போதைப் பொருளோடு சம்பந்தப்பட்டவர்கள் இந்நாட்டை அழித்தவர்கள் தான் இன்று மகிந்தவின் பின்னால் திரிகிறார்கள், பின்னால் நிற்கிறார்கள்.

எனவே மகிந்த தேர்தலில் போட்டி யிடுவது பற்றி ஐ.தே.க வுக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. இத்தோடு முன்னைய தேர்தல் காலங்களில் அமைதி இருக்கவில்லை, சமாதானம் இருக்கவில்லை, ஜனநாயகம் என்ற ஒன்றே இருக்கவில்லை. அப்போது துவக்குக்கு உரிய காலம் தேர்தலில் ஒழுங்கான முறையில் பிரச்சாரம் செய்ய கூட சந்தர்ப்பம் இருக்க விலலை. ஆனால் இன்று அவ்வாறில்லை. நல்லாட்சி அமைந்து ஜனநாயகம் பிறந்துள்ளது. இனி நீதியான தேர்தல் நடைபெறுவதற்குரிய காலம பிறந்துள்ளது.

எனவே மக்கள் இந்த தருணத்தை பயன்படுத்தி விஜயகலா மகேஸ்வரன் போன்றமக்களுக்கு சேவை செய்யக் கூடியவர்களை தெரிவு செய்ய வேண்டுமெனவும் கேட்டு கொண்டார். (எ-11)

## தேர்தல் தொடர்பில் 12 முறைப்பாடுகள்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தல் தொடர்பில் இதுவரை 12 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

பொதுத்தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதிலிருந்து இதுவரை மேற்படி 12 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார். (எ-11)

## அனைத்துக் கட்சி...

என்பதனால் நடைமுறைகளில் சிக்கலான ஒன்றாகும் என தேர்தல் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று பிரதான வீதிகளில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் இலக்கங்களை வண்ணத்தின் மூலம் எழுதினால் அவ் வேட்பாளர் மற்றும் ஆதரவாளர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்வதற்காக வீதி அபிவிருத்தி திணைக்களங்களுக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பாதை ஓரங்களில் உள்ள மின்சார தூண்களில் நிறப்பூச்சுகள் பயன்படுத்தி பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு மின்சார திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார். (எ-11)

## வட மாகாண...

யாற்றும் போதே சி.வி.விகனேஸ்வரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசாங்கம் வட மாகாணத்திற்கான வளங்களை குறைத்துள்ளது.

வடக்கு கிழக்கிற்கான அதிகாரப் பகிர்வு என்பது ஒரு நகைப்புக்குரியதாகவும் கேலிக்குரிய விடயமாகவும் உள்ளது. அத்துடன், வடக்கு கிழக்கில் தேர்வுசெய்யப்பட்ட அதிகாரிகளின் வார்த்தைகள் கருத்தில் எடுக்கப்படுவதில்லை.

ஏனைய மாகாணங்களை விட போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழககுப் பிரதேசங்களுக்கு மேலதிக உதவிகளும் நிதியும் தேவைப்படுகின்றது.

ஆனால் எமக்கான மூல வளங்களை மத்திய அரசாங்கம் குறைத்துள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை அரசாங்கம் தமிழர்களின் நிலங்களை கையகப்படுத்துவதற்கு வட மாகாண முதலமைச்சர் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

தேவைகளை அடிப்படையாக கொண்ட செயறட்டங்களில் ஐக்கிய நாடுகள் சபையுடன்இணைந்து வட மாகாணம் செயற்படுவதற்கும் இலங்கை அரசாங்கம்அனுமதிக்கவில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (எ-11)


வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## மைத்திரி - ரணில்...

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் மைத்திரி, ரணில் மற்றும் சந்திரிகா ஆகியோர் தலைமையில் கூட்டணி அமைத்து அன்னப்பட்சி சின்னத்தில் போட்டியிட உள்ளதாக இந்திய ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

எவ்வாறெனினும், இதுவரையில் எந்தவொரு தரப்பும் தேர் தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பதனை உறுதிபட வெளிப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அநேகமான உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்கள் கட்சி உள் வட்டாரத் தகவல்கள் மற்றும் ஊகங்களின் அடிப்படையில் நாளுக்கு நாள் மாறுபட்ட தகவல்களை வெளியிட்டு வருகின்றன.

சந்திரிகாவின் 70 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் ஜனாதிபதியும், பிரதமரும், சந்திரிகாவுடன் நீண்டநேரம் உரையாடிதாக தெரிவிக்கப் பட்டது. (எ-11)

## முதலாவது கட்சி...

கின்ற நிலையில் யாழ் மாவட்டச் செயலகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அதனை அண்மித்த பகுதிகளிலும் பெருமளவிலான பொலிஸார் குவிக்கப்பட்டு மாவட்டச் செயலகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

இத்தேர்தலில் போட்டியிடும் கட்சி[illegible] நேற்று முதல் எதிர்வரும் 13ஆம் தி[illegible] வரையிலான காலத்திற்குள் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்து கொள்ள முடியும்.

இதற்கமைய பல்வேறு கட்சிகளும் தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்து வருகின்ற நிலையில் யாழ் மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை ஜனசெத பெரமுன என்ற கட்சி இங்கு தேர்தலில் போட்டியிடுவதற்கான தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில் இங்குள்ள ஏனைய பரதான பல கட்சிகளும் அடுத்த வாரமளவில் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிய வருகின்றது. (எ-4)

## 28 கிலோ கஞ்...

ருக்குத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து தலைமன்னார் பொலிஸாரும் கடற்படையினரும் இணைந்து நடத்திய தேடுதலின்போது அதிகாலை 3:30 மணியளவில் கடலில் வைத்து 28 கிலோ 600 கிராம் நிறையுடைய கஞ்சா போதை பொருள்களை அவர்கள் மீட்டனர்.

அத்துடன் அதனை வைத்திருந்தனர் எனத் தெரிவிக்கப்படும் தமிழக மீனவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மீனவர்கள் நால்வரையும் கடற்படையினர் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்ததுடன் கஞ்சா பொதிகளையும் கையளித்துள்ளனர். மேலதிக நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (எ-11)

## ஆசன ஒதுக்கீடு...

ஆசனங்க்ள், டெலோ 1 ஆசனம், புளொட் 1 ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வன்னியில் 9 இடங்களில் தமிழரசுக் கட்சி 3 ஆசனம், டெலோ 3 ஆசனம், ஈ.பி.ஆர. எல்.எப் 2 ஆசனம், புளொட் 1 ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் திருகோணமலையில் தமிழரசுக் கட்சி 4 இடங்களுக்கும், டெலோ, ஈ.பி.ஆர். எல்.எப்., புளொட் தலா 1 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் 8 இடங்களில் தமிழரசுக கட்சி 5 இடங்களிலும், டெலோ, ஈ.பி.ஆர். எல்.எப்., புளொட் தலா 1 இடங்களிலும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அம்பாறையில் 10 இடங்களில் 5 இடங்கள் தமிழரசுக்கட்சி ஈ.பி.ஆர்.எல்.எப் 2 ஆசனங்கள், டெலோ 2 ஆசனம், புளொட் 1 ஆசனமும் ஒதுக்கப்பட்டுள்ளது. (செ-4)


கண்ணீர் அஞ்சலி

**அமரர் கந்தையா நடராஜா**

கொடை வள்ளலும் பிரபல தொழில் அதிபருமான திரு.கந்தையா நடராஜா அவர்களின் திடீர் மறைவுச் செய்தி அறிந்து நாமும் எமது இல்லக் குழந்தைகளும் ஆழ்ந்த கவலையடைந்தோம்.

அப்பெருமகனார் எமது இல்லக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்காக அரிய நூல்களையும் அப்பியாசப் புத்தகங்களையும் வழங்கி ஆதரவு நல்கியமை எம்மால் என்றும் மறக்கவியலாத ஒன்றாகும். அத்துடன் பல ஆன்மீக விளம்பரங்களையும் பிரசுரித்து வழங்கி சமூகத்துக்குள் நல்லொழுக்கம் நற்பண்புகள் வளர பேருதவி புரிந்தவர்.

விதியின் கணக்கினை வென்றிட எம்மால் இயலாதே. அதனால் அவர் தம் பிரிவுக்காக எங்கள் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர் - தி.இராசநாயகம், பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக் குழந்தைகள், மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி. (c-1497)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org